

**கிராமிய மட்டங்களிலிருந்து முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்**

- சட்டத்தரணி ஜாவித் யூஸுப்

**சுதந்திரத்தின் அடிநாதம்**












# மீள்பார்வை


මීල්පාර්වෙ

Registered as a newspaper in Sri Lanka
GPO-QD/63/NEWS/2016 - ISSN 2012-5038

Meelparvai Fortnightly
www.meelparvai.net

සමාජ වෙනසකට නගන හඬ
சமூக மாற்றத்திற்கான குரல்

இதழ் - 336 • 05 பெப்ரவரி 2016 வெள்ளிக்கிழமை • ரபீஉல் ஆகிர் 1437 • விலை 40.00







# தேரவாத பௌத்தத்தின் மத்திய நிலையமாக இலங்கையை மாற்றுவதே அரசின் நோக்கம்



## பிரதமர் ரணில்

தேரவாத பௌத்தத்தை தென் கிழக்கு ஆசியாவுக்கு பாதுகாத்துக் கொடுத்தது இலங்கையாகும். இலங்கையை மீண்டும் தேரவாத பௌத்தத்தின் மத்திய நிலையமாக மாற்றுவது எமது கடமையாகும். இதனோடு சேர்த்து மஹாயான பௌத்தம் உட்பட்டவைகளிலும் கவனம் செலுத்தப்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வாத்துவ, தல்பிட்டியவில் நடந்த கூட்டத்தில் தெரிவித்தார்.

(பக்.14)

## தென்கிழக்குப் பல்கலைக்கழகத்துக்கு கிறிஸ்தவ தேவாலயம்



தென்கிழக்குப் பல்கழைக்கழக வளாகத்தில் கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றை நிறுவுவதற்கான அடிக்கல், தூத்துக்குடி சென்தோமஸ் கல்லூரியின் ஆசிரியர் குமார் ராஜா பாதிரியார் அவர்களால் நாட்டிவைக்கப்பட்டது.

தென்கிழக்குப் பல்கலைக்கழக வளாகத்தில் பௌத்தர்களுக்கான விகாரையும், முஸ்லிம்களுக்கான பள்ளிவாசலும், இந்துக்களுக்கான கோவிலும் உள்ளபோதிலும் கிறிஸ்தவர்களுக்கான தேவாலயம் இல்லை என்ற குறையை சுட்டிக் காட்டி கிறிஸ்தவ தேவாலயம் அமைப்பதற்கான முயற்சிகள் தற்பொழுது முன்னெடுக்கப்பட்டுள்ளன. தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் 10 க்கும் குறைவான கிறிஸ்தவர்கள் கல்வியை தொடர்கின்றனர்.

(பக்.11)

## மஹிந்தவின் அரசியலுக்கு விகாரையில் தடைவிதிக்க கோரிக்கை



நாராஹேன்பிட்டியில் உள்ள அபயாராம பௌத்த விகாரையை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசியல் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவதை தடைசெய்யும் உத்தரவொன்றை பிறப்பிக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவொன்றை விசாரணைக்கு ஏற்றுக்கொள்வதற்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. (பக்.11)

## அரபு மொழியிலும் தேசிய கீதம் கோரப்படலாம்

இம்முறைய சுதந்திர தினத்தில் தமிழ் மொழியில் தேசிய கீதம் இசைக்கப்படுவது குறித்து மஹிந்த ராஜபக்ஷவிடம் கேள்வியெழுப்பப்பட்டதற்கு பதிலளித்த அவர், தமிழில் பாட வேண்டும் என யாரும் வலியுறுத்த வில்லை. கோடிக்கணக்கான தமிழர்கள் வாழும் தமிழ் நாட்டிலும், இந்தியாவின் ஏனைய பகுதிகளிலும் ஒரே மொழியில்தான் தேசிய கீதம் பாடப்படுகிறது என்றார்.

குறித்த சந்திப்பில் மேலும் கருத்து தெரிவிக்கையில் இந்தியாவின் தமிழகத்தில் இந்திய கீதம் தமிழில் பாடப்படுமானால் இலங்கையில் அதனை அமுல்படுத்தலாம்.

(பக்.11)






## பாரிய நிதிமோசடி ஆணைக்குழுவுக்கு கூடுதல் அதிகாரங்கள்



பாரிய நிதி மோசடி தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அதிகாரங்கள் மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளன. இதற்கான வர்த்தமானி அறிவிப்பை ஜனாதிபதி வெளியிட்டுள்ளார். இதன்படி இந்த ஆணைக்குழுவின் அதிகாரங்களை பலப்படுத்தும் வகையில் ஐவர் அடங்கிய குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தை கொண்டு ஆணைக்குழுவின் அதிகாரங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. (பக்.14)

## பீ.ஜே. இன் வருகையை தடைசெய்ததற்கு எதிராக SLTJ அடிப்படை உரிமை மீறல் வழக்கு



கடந்த நவம்பர் மாதம் இலங்கை வரவிருந்த இந்தியப் பேச்சாளர் சகோ. பீ.ஜைனுல் ஆப்தீனின் வருகைக்கு எதிராகச் செயற்பட்டவர்களை எதிர்த்து ஸ்ரீலங்கா தௌஹீத் ஜமாஅத் அடிப்படை உரிமை மீறல் வழக்கொன்றை தாக்கல் செய்துள்ளது.

ஸ்ரீலங்கா தௌஹீத் ஜமாஅத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அல்குர்ஆன் சிங்கள மொழி பெயர்ப்பு வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுவதற்காக அழைக்கப்பட்டிருந்த (பக்.14)

தேசிய ஷூறா சபையின் சுதந்திர தின நிகழ்வை முன்னிட்டு நாடு முழுவதும் மரக் கன்றுகளை நடும் வைபவம் கொழும்பு மருதானை ஸாஹிரா கல்லூரியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## யோசித ராஜபக்ஸவின் கைது இடம்பெற்ற பொழுதில்...

(சமூக வலைதளங்களில் இவர்கள்..)







'நல்லாட்சி அரசே! நீ சிங்கத்தின் வாலில் உட்கார்ந்திருக்கிறாய். சிங்கம் உன்னை பகுதி பகுதியாய் கிழித்தெறியும்.'
**- ரோஹித ராஜபக்ஸ (சகோதரன்)**

'முழு குடும்பத்தையும் கைது செய்து, அதுவும் போதாதென்று என்னையும் சிறையில் அடைத்தாலும் 1936 முதல் இருந்துவரும் ராஜபக்ஸ பரம்பரையினர் என்றும் இல்லாமல் போகாது'
**- மஹிந்த ராஜபக்ஸ (தந்தை)**

'தந்தையை காயப்படுத்த பிள்ளையை கைது செய்கின்றனர். இது ஒரு பழிவாங்கல் நிகழ்ச்சி நிரலின் இன்னொரு படி.'
**- கோதாபய ராஜபக்ஸ (பெரியப்பா)**

'நாட்டின் கண்ணீரை துடைத்த மனிதரின் கண்களில் இன்று கண்ணீரை காண்கின்றோம். பிள்ளை மீதான பெற்றோரின் அன்பை, பெற்றோர்களால் மட்டுமே புரிந்துகொள்ள முடியும். உங்கள் பெற்றோரை இவ்வாறு பார்ப்பதும் கடினமானதே.'
**- நாமல் ராஜபக்ஸ (சகோதரன்)**



## குரங்குக்கு வாழ்க்கைப்பட்டால் தொங்கித்தான் ஆகவேண்டும்



அமைச்சர் பாட்டாலீ சம்பிக்க ரணவக்க இலங்கை அரசியல் களப்பரப்பில் அண்மைக்காலமாக வெளிப் படுத்துகின்ற கருத்துக்களும் அறிக்கைகளும் முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் ஒரு திருப்திகரமான மனோநிலையை தோற்றுவித்துள்ளன.

அமைச்சர் பாட்டாலீ சம்பிக்க ரணவக்க மிகச்சி றந்ததொரு கல்வியாளரும் சர்வதேச அரசியல் கள நிலவர அவதானிப்பாளருமாவார். இருந்தபோதிலும் குரங்குக்கு வாழ்க் கைப்பட்டால் கொப்பில் தொங்குவது சகஜம் என்ற ரீதியில் கடந்த மஹிந்த ரெஜிமென்டுடைய சர்வாதிகார ஆட்சியின் போது முஸ்லிம்களுக்கெதிராக பலதரப்பட்ட இனவாதக்கருத்துக்களை தொடர்ந்தேச்சையாக விதைத்தும் வெளியிட்டும் வந்தார்.

தென்கிழக்கு பல்கலைக்கழகம், கிழக்குமாகாண இஸ்லாமிய அமைப்புக்கள் மற்றும் இஸ்லாமிய ஷரீஆ சட்டம் தொடர்பில் இவர் வெளியிட்ட விமர்சனங்களும் குற்றச்சாட்டுகளும் மிகவும் ஆபத்தானவை. மாத்திரமன்றி 2014ம் ஆண்டு மியன்மாரில் முஸ்லிம்களுக்கெதிராக பௌத்த பயங்கரவாதிகளால் கட்டவிழ்த்து விடப்பட்ட இனவழிப்பிலிருந்து கடல் வழியாக தப்பித்து 71முஸ்லிம்கள் பொத்துவில் கடற்பரப்பில் நிர்க்கதியாக நின்றபோது இலங்கை கடற்படையினர் அவர்களை மீட்டெடுத்து அகதி முகாமொன்றில் அபயமளித்தனர்.

அந்த சந்தர்ப்பத்தில் குறித்த அவ்வகதிகள் முஸ்லிம்கள் என்ற ஒரே காரணத்திற்காக அவர்களை உடனடியாக நாட்டை விட்டும் வெளியேற்றும்படி பாராளுமன்றத்தில் வைத்தே குரல் எழுப்பினார் அமைச்சர் பாட்டாலீ சம்பிக்க ரணவக்க. ஒட்டுமொத்தத்தில் இலங்கை நாட்டில் இஸ்லாமிய சமூகத்திற்கெதிரான ஊடகப்பயங்கரவாதத்திற்கு றிப்பன் வெட்டி திறப்புவிழா நடாத்தியவர்களில் அமைச்சர் பாட்டாலீ சம்பிக்க ரணவக்க முதன்மையானவர் என்றால் அது மிகை யில்லை.

ஆனாலும் மஹிந்த ரெஜிமென்டுடைய இனவாதப்போக்கு ஜனநாயக நீரோட் டத்திற்கு விரோதமானது என்பதை உணர்ந்துகொண்டதுடன் அந்த சர்வாதிகார குடும்ப நிருவாகத்தின் கோரப்பிடியிலிருந்தும் தன்னை லாவகமாக விடுவித்துக்கொண்டார்.

அந்த வகையில் தற்போது இலங்கை முஸ்லிம்கள் தொடர்பாக பாட்டாலீ சம்பிக்க ரணவக்க கொண்டுள்ள நிலைப்பாடும் முன்வைக்கின்ற கருத்துக்களும் அவர் மீதான ஒரு மதிப்பையும் நல்லெண்ணத்தையும் ஏற்படுத்தி நிற்கின்றன.

இலங்கை அரசியலில் முஸ்லிம்களின் வகிபாகம் மற்றும் ISIS என்ற சர்வதேச ஆயுததாரிகள் தொடர்பாக அண்மையில் அவர் வெளியிட்ட கருத்துக்கள் மிகவும் ஆக்கபூர்வமானவையாகவும் கடந்த கால கசப்புணர்வுகளை மறக்கடிக்கக் கூடியவை யாகவும் இருக்கின்றன.

எனவே உள்ளங்களை புரட்டக்கூடியவன் அல்லாஹ் ஒருவன் மாத்திரமே. அமைச்சர் பாட்டாலீ சம்பிக்க ரணவக்கவினுடைய உள்ளத்தில் நீண்டகாலமாக குடிகொண்டிருந்த இஸ்லாமிய விரோத சிந்தனைப்போக்கானது திசை திரும்பி இருக்குமென்றால் அது போன்று ஏனைய இனவாதிகளுடைய மனோநிலைகளும் மாற்றம்பெற வேண்டுமென வல்ல அல்லாஹ்வை பிரார்த்திப்போம்.

-முஹம்மது நியாஸ்-

## புதிய அரசியலமைப்பு மாற்றம்

**வேண்டுமா? வேண்டாமா?**

உங்களின் அபிப்பிராயத்தை தற்பொழுது SMS செய்யுங்கள்.
0779207569

**68 ஆவது சுதந்திர தினம்!**

வெள்ளையனின் ஆட்சியில் இருந்து சுதந்திரம் பெற்று, கொள்ளையரின் ஆட்சியில் புகுந்த நாளாகவே இன்னும் சிலர் சுதந்திர தினத்தை கருதுகின்றனர்.
- அனஸ் அப்பாஸ்

## கலந்துரையாடல்







NFGG ஏற்பாட்டில் அரசியலைப்பு மாற்றம் தொடர்பாக முஸ்லிம் ஊடகவியலாளர்களுக்கு அறிவூட்டும் கலந்துரையாடல் அண்மையில் கொழும்பில் இடம்பெற்றது, இதில் சட்டத்தரணி கள் Y.L.S. ஹமீட், ஹசனா ஷேகு இஸ்ஸதீன், கலாநிதி அப்துல் பாரி, கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீட சிரேஷ்ட விரிவுரையாளர் ஹகீம் அபூபக்கர் உள்ளிட்ட பலர் பங்குபற்றினர். NFGG சார்பில் தவிசாளர் அப்துர் ரஹ்மான், செயலாளர் நஜாஹ் முஹம்மத், ஊடக பேச்சாளர் சிராஜ் மசூர், தலைமைத்துவ சபை உறுப்பினர் முஜீபுர் ரஹ்மான் ஆகியோர் கலந்துகொண்டனர். (அனஸ் அப்பாஸ்)

## அரபுக் கல்லூரி ஆசிரியர்களுக்கான மாநாடு








பன்மைத்துவ சமூகத்தில் அரபுக் கல்லூரி ஆசிரியர்களின் பங்களிப்பும் இஸ்லாமிய விழுமியங்களும் எனும் தலைப்பிலான மாநாடு அண்மையில் கொழும்பு Booker Hall இல் இடம்பெற்றது. இந் நிகழ்வை சமாதானத்திற்கான முஸ்லிம் செயலகம் ஏற்பாடு செய்திருந்தது.

இதில் அகில இலங்கை ஜம்இயத்துல் உலமாவின் முக்கியஸ்தர்களும், முஸ்லிம் கலாசார திணைக்களத்தின் அதிகாரிகளும் உட்பட பலர் கலந்து கொண்டனர். பேச்சாளர்களாக அஷ்ஷெய்க் எஸ்.எச்.எம்.பளீல், ஜம்இயத்துல் உலமாவின் பொதுச் செயலாளர் அஷ்ஷெய்க் முபாரக் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## பட்டமளிப்பு விழா







ஹாதியா பெண்கள் அறபுக் கல்லூரியின் முதலாவது பட்டமளிப்பு விழா அண்மையில் குருவிகொட்டுவயில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பஹ்ரைனைச் சேர்ந்த ஸல்வா அப்துல்லாஹ் அல் குஹேஜி அவர்கள் கலந்து கொண்டார். மேலும் விஷேட அதிதியாக தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் கலாநிதி நாஜிம் அவர்களும் கலந்து கொண்டார்.

## Perfect Prefect





OMSED இன் மாணவத் தலைவர்களுக்கான பயிற்சி நெறியான Perfect Prefect நிகழ்ச்சியொன்று கடந்த 27 மற்றும் 28 ஆம் திகதிகளில் வியங்கல்ல முஸ்லிம் வித்தியாலயத்தில் இடம் பெற்றது. இதில் பேருவளை அல் ஹூமைஸரா தேசிய பாடசாலையின் மாணவத் தலைவர்கள் மற்றும் வியங்கல்ல முஸ்லிம் வித்தியாலயத்தின் மாணவத் தலைவர்கள் கலந்து கொண்டனர். இந்த முகாமை பேருவளை அல் ஹூமைஸரா தேசிய பாடசாலையும் வியங்கல்ல முஸ்லிம் வித்தியாலயமும் இணைந்து OMSED இன் வழிகாட்டலின் கீழ் ஏற்பாடு செய்திருந்த்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகம் தழுவிய நிலைப்பாடுகளை வேண்டிநிற்கும் அரசியலமைப்பு மாற்றம்

சிராஜ் மஷ்ஹூர்



1978ம் ஆண்டு உருவாக்கப்பட்ட இரண்டாவது குடியரசு யாப்பில் பல்வேறு திருத்தங்கள் அவசியம் என்ற கருத்துக்கள் நீண்ட காலமாகவே பேசப்பட்டு வந்தன. இப்போது புதிய அரசியல் அமைப்பொன்றை உருவாக்குவதே தீர்வு என்ற நிலைப்பாடு தோன்றியுள்ளது.

அந்தவகையில் நாட்டின் பல பக்கங்களிலும் யாப்பு தொடர்பான கலந்துரையாடல்களும் முன்னெடுப்புகளும் முடுக்கிவிடப்பட்டுள்ளன. இதில் பல்வேறு சர்ச்சைக்குரிய விடயங்கள், கவனம் செலுத்தப்பட வேண்டிய பிரதான அம்சங்கள் உள்ளன.

அரசாங்கத் தரப்பினால் அரசியலமைப்பின் மாதிரி அல்லது பிரதி இதுவரை முன்வைக்கப்படவில்லை. மாறாக சில தலைப்புகளும் விடய தானங்களும் மட்டுமே பொதுத் தளத்தில் உரையாடலுக்கு வந்துள்ளன. அரசாங்கத் தரப்பு ஒரு மாதிரியை முன்வைத்து, அதன் சாதக பாதகத் தன்மை, நீக்கப்பட வேண்டிய விடயங்கள், புதிதாக இணைக்கப்பட வேண்டிய விடயங்கள் என்ற அடிப்படையில் இச்செயன்முறை அமைவதே மிகவும் பொருத்தமானது.

எனினும், பொதுமக்களுடன் கலந்துரையாடி அரசாங்கத்திற்கு ஆலோசனைகளை முன்வைக்கவென நிபுணர் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு நாடளாவிய ரீதியில் கருத்துக்களைப் பெற்று அரசாங்கத்திற்கு சமர்ப்பிக்கவுள்ளது.

இதேவேளை, அரசியலமைப்பு நகல் வரைவொன்று அதிகார சக்திகளால் ஏற்கனவே வரையப்பட்டுள்ளது என்ற தகவலும் கசிந்துள்ளது. வேறு சில தரப்புகள் மாதிரி அரசியலமைப்பு உள்ளடங்களைத் தயாரிக்கும் முயற்சியில் தீவிரமாக இறங்கியுள்ளன.

இந்த சந்தர்ப்பத்தில், முஸ்லிம் சமூகம் அக்கறை கொள்ள வேண்டிய விடயங்கள் பல உள்ளன. ஆலோசனைகளை அரசாங்கம் எதிர்பார்த்துள்ள இந்தத் தருணத்தில் இது குறித்த விரிவான கலந்துரையாடல்களை முன்னெடுப்பது மிகவும் பொருத்தமானது.

அரசியலமைப்பு தொடர்பாக ஆர்வமின்றி அலட்சியமாக நடந்துகொள்வது பொருத்தமானதல்ல. அரசியலமைப்பு மாற்றம் நிகழுமா? நிகழாதா? என்ற விவாதங்களுக்குள் காலத்தை விரயமாக்காமல், அரசியலமைப்பு ஒன்று புதிதாக உருவாக்கப்படப் போகிறது என்ற அடிப்படையிலேயே எமது தயார்நிலை இருக்க வேண்டும்.

முஸ்லிம்களுடன் தொடர்பான விடயங்களோடு மட்டும் நாம் சுருங்கி விடக் கூடாது. நமக்கென்று அக்கறை செலுத்த வேண்டிய தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் குறித்து ஆழ்ந்த கவனம் செலுத்த வேண்டும். இந்நாட்டின் பிரஜைகள் என்ற வகையில் எமக்குள்ள கடமை, பொறுப்புக் கூறுதல் ஆகிய விடயங்கள் இங்கு கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

அடிப்படை உரிமைகள், மத உரிமைகள் போன்ற பிரதான உள்ளடக்கங்களில் நமது கவனம் மிகவும் முக்கியமானது. குறிப்பாக நாட்டின் பன்மைத்துவம், பல்வகைத் தன்மை தொடர்பான விடயங்களை அரசியலமைப்பின் முகவுரை உரிய அழுத்தத்துடன் முன்வைக்கிறதா என்பதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். ஏற்கனவே வெறுப்பூட்டும் பேச்சுக்கு எதிரான சட்டமூலம் அவசியம் என்ற விவாதங்கள் மேலெழுந்துள்ளன. இது போன்ற பொது விவகாரங்களில் நமது கவனம் குவிக்கப்படுவது இன்றியமையாதது.

இலங்கை அரசின் தன்மை ஒற்றையாட்சியா? அல்லது சமஷ்டி ஆட்சி முறையா? என்ற விவாதம் நீண்ட காலமாக இடம்பெற்று வருகின்றன. இது குறித்த பொது நிலைப்பாடு இன்றியமையாததாகும். அதிகாரப் பகிர்வு தொடர்பான தெளிவும், அதன் எல்லை, மட்டுப்பாடு, பரப்பு குறித்த ஆழ்ந்த கவனமும் நமக்கு வேண்டும்.

இலங்கை முஸ்லிம்கள் கிழக்கில் மட்டுமே செறிந்து வாழ்கின்றனர். ஏனைய எல்லா மாகாணங்களிலும் பரவலாக சிதறியே வாழ்கின்றனர். நிலத் தொடர்பான ஆள்புல சிறுபான்மையினராக முஸ்லிம்கள் இல்லை. மலையகத் தமிழர்களுக்கும் அந்த சூழ்நிலை கிடையாது. ஆனால் இலங்கைத் தமிழர்களுக்கு வடகிழக்கில் அந்த வாய்ப்பு அதிகம்.

இதனால் முஸ்லிம்களதும் மலையக மக்களதும் அரசியல் எதிர்காலம் குறித்த பல தீர்க்கமான கேள்விகளை இந்த அரசியல் அமைப்பு ஏற்படுத்தப் போகிறது. மாகாணங்களுக்கு அதிகாரங்கள் பகிரப்பட்டால், அந்தந்த மாகாணங்களிலுள்ள சிறுபான்மை சமூகங்களுக்கு என்ன நடக்கும் என்பதற்கான போதிய உத்தரவாதங்கள் கிடையாது.

ஏற்கனவே சோல்பரி அரசியலமைப்பில் சிறுபான்மைக் காப்பீடு என்ற விஷேட ஏற்பாடு இருந்தது. அது இருந்த போதே சிறுபான்மை மக்களுக்கு எதிரான பல்வேறு வன்முறைகளும் பிரச்சினைகளும் தாக்குதல்களும் நிகழ்ந்தன. ஆகவே, அரசியலமைப்பு ஏற்பாடுகளை உரியமுறையில் நடைமுறைப்படுத்துகின்ற சட்ட ஏற்பாடுகளும் மிகவும் இன்றியமையாதவை.

பொதுவாக அதிகார அலகு குறித்தே பலரது கவனமும் உள்ளது. முஸ்லிம்களுக்கு என தனி அதிகார அலகு தேவையா? அதன் சாத்தியத் தன்மை என்ன? அதன் சாதக பாதகங்கள் என்ன? இருக்கின்ற மாகாண கட்டமைப்பை அப்படியே ஒத்துக் கொள்வது பொருத்தமானதா? இவ்வாறான கேள்விகளுக்கு மூலோபாய ரீதியான தெளிந்த பதில்கள் அவசியம்.

நாட்டின் அரசியல் அமைப்பு தற்போது உள்ளது போல பௌத்த மதத்திற்கு முன்னுரிமை அளிக்கப் போகிறதா? என்ற விடயமும் பொதுத் தளத்தில் விவாதத்திற்கு உள்ள பொருளாக உள்ளது. இது குறித்த கருத்தாடல்களும் அவசியம்.

இது இவ்வாறிருக்க, தேர்தல் முறையில் ஏற்படப் போகும் (பக். 14)


Real Access Program
இப்பாடநெறியின் மூலம் 5 தகைமைகளைப் பெறலாம்
- Diploma in Computer studies
- Diploma in Graphic designing
- Diploma in Web designing
- Diploma in Hardware
- Diploma in English
3 Month Full Time
Weekly 05 Days 8:30 to 4:30
ஆங்கிலம் மற்றும் கணனிக் கல்வியை அடிப்படையில் இருந்து கற்கும் விதமாக வடிவமைக்கப்பட்ட பாடநெறியாகும்
பாடநெறி ஆரம்பம் Batch - 18 February -08
02சர்வதேச UK+ ISOதரச் சான்றிதழ்கள் உட்பட 06 DIPLOMA சான்றிதழ்கள் வழங்கப்படும்
TOEIC City & Guilds EDFOCUS

Diploma in ENGLISH+IT with Skills Training
குறகிய காலத்தில் ஆங்கிலத்தில் கதைக்க வைக்கும் ஒரே பாடநெறி
கணனி பயிற்சியுடன் கூடிய ஆங்கிலப் பாடநெறி
02 Months
முழுநேர வதிவிட / வதிவிடமற்ற
தினமும் 03 மணித்தியாலத்துக்கு அதிகமான பேச்சுப் பயிற்சி
IT: MS-OFFICE, HARDWARE, COMP-ACCOUNTING
- WITH GRAMMAR - | Reading | Writing | | Listening | Speaking |
பாடநெறி ஆரம்பம்
56th Batch Feb - 08
57th Batch Feb - 11
Weekly 06 Days 9:00 to 4:00
பாடநெறி முடிவில் சர்வதேச ISO தரச் சான்றிதழ் உட்பட 03 Diploma சான்றிதழ்கள் வழங்கப்படும்

DIPLOMA IN COMPUTERIZED ACCOUNTING
Contents
- Petty cash& Day book
- General ledger, journal
- Bank reconciliation statement
- Debtors and creditors ledger
- Sales and purchase registers
- Fixed asset registers
- Inventory
- Profit and loss accounts
- Balance sheets
- Payroll
LEARN 08 PACKAGES
- MS Excel
- MS Access
- MYOB
- Quick Books
- ACCPAC
- SAGE-50
- Peachtree
- Tally
Free Study Pack with Software CD
Duration: 1-3 Months Full Time/Part Time (Weekdays/Weekends)
Individual Classes

DIPLOMA IN AIRLINE TICKETING
Course Contents
- Airline Ticketing
- Air Fare Calculation
- Airline Geography
- Operation of a Travel Agency
- Airline & Travel Terminology
- Reservation Procedures
- IATA International Regulations
- Basics of GDS & Cargo
Individual classes also available
Duration: 1-3 Months Full Time/Part Time

Teacher Training Program in Kandy
Well qualified panel of Lecturers with American Qualification
- DIPLOMA IN MONTESSORI TEACHER TRAINING -(AMI)
- DIPLOMA IN CHILD PSYCHOLOGY
- DIPLOMA IN PRE SCHOOL TEACHER TRAINING
- PROFESIONAL ENGLISH
6 மாதம் Weekends
பாடநெறி முடிவில் 2சர்வதேச சான்றிதழ்கள் உட்பட 5 சான்றிதழ்கள் வழங்கப்படும்.
With UK & Indian Accreditation
பாடநெறி ஆரம்பம் Batch 09 January - 13
TOEIC City & Guilds EDFOCUS

DIPLOMA IN AIR CONDITIONING & REFRIGERATION
- A/C Repairing
- Refrigeration repairing
- House wiring
100% செயல்முறைகளுடன்
Start Feb - 15
01 Month (Full Time) - Weekly 05 Days

AUTO CAD Full Time / Part Time
G.C.E. O/L, A/L | Diploma in AUTO CAD | Diploma in 3D AUTO CAD | Advanced Diploma in AUTO CAD
★ ★ ★ INDUSTRIAL TRAINING CAN BE PROVIDED ★ ★ ★

ஆண், பெண் இருபாலாருக்கும் வெவ்வேறான தங்குமிட வசதிகள் உண்டு
GOLDEN COLLEGE
548, Peradeniya Road, Kandy.
No:126, Kandy Road, Thihariya
Kandy 0777 222 529
THIHARIYA 0777 222 528


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

EDITORIAL

49, St. Mahinda Dharma Mawatha (Perth Road), Colombo-09.
Tel: 0112 691258 077 222 7569
E-mail: meelparvai@gmail.com, Web: www.meelparvai.net

# மீண்டும் சுதந்திரம்

நான்கு நூற்றாண்டு காலத்துக்கும் மேல் வெளிநாடுகளுக்கு அடிமையாக இருந்து விட்டு, இலங்கைத் தேசம் சுதந்திரம் பெற்றிருக்கிறது. காலனித்துவ காலத்தில் இலங்கை மக்கள் தமது சொந்த நாட்டிலேயே கைக் கூலிகளாக மாற்றப்பட்டனர். பிழிந்து எடுக்கப்பட்ட மக்களது உழைப்பு வெளிநாடுகளுக்கே சுருட்டி எடுத்துச் செல்லப்பட்டது. ஆங்கிலேயர் காலத்தில் வாக்குரிமை கூட செல்வந்தர்களுக்கும் படித்தவர்களுக்கும் மட்டுமாக வரையறுக்கப் பட்டிருந்தது.

சோல்பரி, டொனமூர் போன்ற வெளிநாட்டு யாப்புகளினாலேயே இலங்கையர் ஆளப்பட்டனர். தாம் எந்த யாப்பின் அடிப்படையில் ஆளப்படுகிறோம் என்பது ஆளப்படும் மக்களுக்கே தெரியாமல் இருந்தது. வெளிநாட்டவர்கள் தம்மை ஆள்வதில் இருந்து விடுதலை பெற்று, இலங்கை மக்களை இலங்கையர்களே ஆள வேண்டும் என்ற சுதந்திர வேட்கை மக்களிடையே மிகைத்த பொழுதுதான் சுதந்திரத்துக்கான போராட்டம் ஆரம்பித்தது.

'நம்மை நாமே இனி ஆளலாம்' என்று ஆங்கிலேயர்கள் சுதந்திரம் தந்தனர். சுதந்திரம் கிடைத்து 68 ஆண்டுகள் ஆகிவிட்டன என்பதை நாடு ஞாபகப்படுத்தும் இந்த வேளையில் எதிலிருந்து நாங்கள் சுதந்திரம் அடைந்திருக்கின்றோம் என்பதையும் மக்களுக்கு ஞாபகப்படுத்த வேண்டியிருக்கிறது.

சுதந்திரத்துக்குப் பின்னர் குடியரசு யாப்பினால் நாட்டு மக்கள் ஆளப்பட்டார்கள். பின்னர் ஜனநாயக நாடாக மாறி, 1978 ஆம் ஆண்டில் தற்போது நடைமுறையிலிருக்கும் யாப்பு உருவாக்கப்பட்டது. ஐவர் ஜெனிங்ஸூம் ஜூனியஸ் ரிச்சர்டும் (ஜே.ஆர்) உம் இந்த யாப்புக்கு வகை கூறக்கூடியவர்களானார்கள். சொந்த நாட்டில் உருவாக்கப்பட்டது என்பதே ஒழிய, பிரித்தானியாவின் பிரித்தாளும் கொள்கையிலிருந்து யாப்பு விடுபடவில்லை.

19 முறை யாப்பு திருத்தப்பட்ட போதிலும், நாட்டுக்குள் இனங்கள் சுதந்திரமாக வாழ்வதற்கான ஏற்பாடுகளை இந்த யாப்பு செய்யவில்லை. விளைவாக ஒரே நாட்டின் இனங்களில் பெரும்பான்மை சிறுபான்மையை அடிமைப்படுத்த முயற்சிக்க, சுதந்திரம் கிடைத்து 35 வருடங்களில் சிறு பான்மை இனம் உரிமைப் போராட்டம் நடத்தியது. பின்னர் வெளிநாடுகளின் உதவியுடன் உள்நாட்டுச் சிறுபான்மை அடக்கப்பட்டது. யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட தேயன்றி சிறுபான்மை இனங்களுக்கு இன்னமும் சுதந்திரம் கிடைத்தபாடில்லை. அச்சத்திலும் அநியாயத்திலுமே அவர்கள் தொடர்ந்தும் வாழ வேண்டியிருக்கிறது.

ஆறு தசாப்தங்களின் பின்னர் மீண்டும் நமக்கென சொந்தமான ஒரு யாப்பு உருவாக்குவதற்கான ஏற்பாடுகள் ஜே.ஆரின் மருமகனாகிய தற்போதைய பிரதமரின் தலைமையில் நடந்து வருகின்றன. உண்மையில் இந்த முயற்சி காலோசிதமான ஒன்று என்பதோடு வரவேற்கத் தக்கதும் கூட. நாட்டின் மீதான யுத்த விசாரணைகளில் விட்டுக் கொடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு, அமெரிக்க ஜனாதிபதியுடன் சந்திப்புக்கள் நடத்தப்பட்டு, ஐ.நா.வின் வேலைத்திட்டங்கள் நாட்டுக்குள் உள்வாங்கப்பட்டுள்ள சூழலிலேயே இந்த யாப்பு சீர்திருத்தம் அல்லது புதிய யாப்பு உருவாக்கம் நடைபெறவிருக்கிறது. இந்த பின்புலத்தில் நாடு பெற்றுக் கொண்ட சுதந்திரம் அடகு வைக்கப்படாமல் பாதுகாக்கப்படுவதாக புதிய யாப்பு அமைய வேண்டும்.

அதேபோல சிறுபான்மை முஸ்லிம்கள் மீது கட்ட விழ்த்து விடப்பட்டுள்ள அத்துமீறல்கள் எல்லை மீறிச் செல்லும் சூழலும் மேலோங்கியிருக்கிறது. முஸ்லிம் விரோத உணர்வுகள் படிப்படியாக பெரும்பான்மை மக்களின் மனங்களில் படிந்து வருகின்றன. இந்த நிலையில் முஸ்லிம்களின் உரிமைகள் தொடர்பாக யாப்பில் வருகின்ற விடயங்கள், நாட்டுப் பிரஜை என்ற வகையில் முஸ்லிம்கள் தொடர்பான விடயங்கள் உன்னிப்பாக அவதானிக்கப்பட வாய்ப்பிருக்கிறது.

இனவாத உணர்வுகள் மேலோங்கியிருக்கின்ற நிலையில் உருவாக்கப்படுகின்ற யாப்பு, இனவாதிகளை திருப்திப்படுத்தும் வகையில் அமைவதற்கான சந்தர்ப்பம் இருக்கிறது. இந்த வகையில் மீண்டும் ஒரு இனம் அடிமைப்படுத்தப்படுவதற்கான அடிப்படைகளை இந்த யாப்பு போடாமலிருக்க வேண்டும்.

இந்த நிலையில், கண்ணில் விளக்கெண்ணெய் ஊற்றிப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டிய முஸ்லிம் சமூகம், அரசியல் யாப்பு வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற போதிலும், தூங்கி வழிந்து கொண்டிருக்கிறது. இந்தத் தூக்கத்திலிருந்து சமூகத்தை எழுப்பி விடுவது சமூகத்தின் மீது பற்றுள்ள, எதிர்கால சந்ததி இந்த நாட்டில் கௌரவமாக வாழ வேண்டும் என்ற அக்கறையுள்ள அனைவர் மீதும் கடமையாகும்.

''எங்களது அண்ணன்மாருடன் பேசித் தீர்த்துக் கொள்வோம்'' என சுதந்திரப் போராட்டத்தின்போது டி.பி.ஜாயா சொன்ன கருத்துக்களை நடைமுறைப்படுத்துவதற்கு இந்த சுதந்திர தினத்தில் உறுதி பூணுவோம்.

# கோத்தா பொதுபல சேனாவை வழிநடாத்தியது எப்படி?

**ஈதலய சஞ்சிகை வெளியிடும் பரபரப்புத் தகவல்கள்**

தமிழில் - ஹெட்டி ரம்ஸி

பௌத்த தேரர்களுக்கு பெரும்பான்மைச் சமூகம் புனித அந்தஸ்தைக் கொடுத்துள்ளது. அத்தகைய மேன்மையான கௌரவத்தை சதாவும் சிதையாமல் பாதுகாத்துக் கொள்வது தேரர்களுக்குரிய மிக முக்கிய பொறுப்பாகும்.

ஆனால், ராஜபக்ஷ ஆட்சிக் காலப்பகுதிக்குள் தேரர்களின் செயல்பாடுகள் பாதாள உலகத்தினரைக் காட்டிலும் மிக மோசமான முறையில் காணப்பட்டன. தேரர்கள் தமது காவி உடைக்குரிய புனிதத்துவத்தை பாதுகாக்க முயற்சிக்கவில்லை.

பொதுபல சேனா, சிஹல ராவய, ராவணா பலய என்றவாறு தங்களை பௌத்தமாக காட்டிக் கொண்ட இனவாத அமைப்புகள், அத்தகைய இழிவுச் செயல்களின் அடையாளச் சின்னங்களாக விளங்கின.

எந்தவொரு மதத்தையோ இனத்தையோ நபர்களையோ உள்ளத்தாலோ, உடலாலோ தொந்தரவு படுத்தக் கூடாதென புத்த பெருமான் உபதேசம் செய்துள்ளார். புத்தரின் அடிப்படைப் போதனைகளை அவமதித்து ஏனைய இன மதங்களுக்கெதிராக சொற்போர் புரிந்து, ஆயுதமேந்தத் தூண்டுபவர்களை உண்மையான பௌத்தர்கள் என்று கூற முடியாது.

இலங்கை வாழ் பௌத்த தேரர்கள், பண்பாட்டு நாகரிகமிக்கவர்கள் என்பதாக இது வரை காலமும் உலகம் அறிந்து வைத்திருந்தது. ஆனால், கடந்த காலப்பகுதிகளில் சிங்கள இனவாத அமைப்புகள் ஏனைய இனத்தவர்களுக்கெதிராக புரிந்த அட்டூழியங்கள், பௌத்தர்கள் வன்முறைச் சுயரூபமிக்கவர்கள் என்பதை உலகத்திற்கு பறைசாற்றியுள்ளது.

கடந்த ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் பொதுபல சேனா, சிஹல ராவய போன்ற இனவாத அமைப்புகளை கோத்தாபய ராஜபக்ஷ முஸ்லிம் மக்களுக்கெதிராக திரைக்குப் பின்னாலிருந்து வழிநடாத்தினார் என்கின்ற குற்றச்சாட்டு பரவலாக முன்வைக்கப்பட்டு வந்தது. இக்குற்றச்சாட்டினை அன்று பொதுபல சேனா மாத்திரமல்லாமல், அரசாங்கமும் நிராகரித்து வந்தது.

ஆனால், தற்பொழுது வெளியாகியுள்ள தகவல்களின்படி, இராணுவ இரகசிய தகவல் பிரிவு மற்றும் அரசாங்க உளவுத்துறைகளுக் கூடாக கோத்தாபய ராஜபக்ஷ பொதுபல சேனா போன்ற அமைப்புகளை வழிநடாத்தி, நாட்டிற்குள் இன, மதவாத வன்முறைகளை ஏற்படுத்தத் தூண்டியுள்ளமைக்கான சந்தேகத்துக்குரிய விடயங்களும் வெளியாகியுள்ளன.

குற்றவியல் விசாரணைத் திணைக்களத்திற் கூடாக முறையானதொரு பரிசோதனை நடாத்தப்பட்டால் குறித்த விடயத்தோடு தொடர்புடைய சகல தகவல்களையும் வெளிச்சத்திற்கு கொண்டு வருவதென்பது அவ்வளவு கடினமானதல்ல.

கோத்தாபய ராஜபக்ஷ அன்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக விசேட அதிகாரங்களை தன்வசம் வைத்துக் கொண்டு ஒருங்கிணைந்த அரச உளவுத்துறை பிரதானி மேஜர் ஜெனரல் கபில ஹெந்த விதாரன, இராணுவப் புலனாய்வுத்துறை பணிப்பாளர் கேர்ணல் சுரேஸ் சலே, அரசாங்க உளவுத்துறை பிரதானியாகச் செயற்பட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிமல் சந்திரா வாக்கிஸ்ட போன்றவர்களுக் கூடாக பொதுபல சேனாவினை வழிநடாத்தியுள்ளமைக்கான தகவல்கள் பதிவாகியுள்ளன.

யுத்த வெற்றிக் களிப்பில் மமதையுடன் கூடிய வெறித் தனத்தில் கருமமாற்றியதன் விளைவால் ராஜபக்ஷ அரசாங்கத்திற்கு நாற்திசையிலிருந்தும் கடுமையான குற்றச்சாட்டுக்கள் மேலெழுந்தன. அவற்றிலிருந்து விடுதலை பெற வேண்டுமானால், நாட்டின் பிரச்சினையை மக்கள் அவதானத்திலிருந்து வேறு திசையில் செலுத்த வேண்டும். அதற்குரிய ஒரே வழி முஸ்லிம்களை •தாக்கி இனவாதத்தை விதைப்பது.

இதற்கு அரசாங்கம் நேரடியாக தலையிட்டால், தேசிய ரீதியில் மாத்திர மல்லாமல் சர்வதேச அளவிலும் பாரிய பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க நேரிடும் என்பதனால் பொதுபல சேனா, சிஹல ராவய போன்ற பௌத்த வேசமிட்ட அமைப்புகளை உருவாக்கி, அவற்றுக்கூடாக வன்முறைகளை புரிய ராஜபக்ஷ அரசு அன்று நடவடிக்கை எடுத்திருந்தது.

இலக்கம் 10, கேம்பிரிஜ் பிலேஸ், கொழும்பு - 07 இல் உள்ள அரசாங்க புலனாய்வுத்



துறைக்கூடாகவே இத்திட்டத்திற்குரிய அத்திவாரம் இடப்பட்டது. உளவுத்துறை பிரதானியாக அப்போது கீர்த்தி கஜநாயக்க செயற்பட்டார். இவருக்கும் ஒருங்கிணைந்த அரச புலனாய்வுத் துறை பிரதானி மேஜர் கபில ஹெந்த விதாரணவிற்கும் இடையில் கருத்து மோதலொன்று ஏற்பட்டது. அரசாங்க புலனாய்வுத்துறை பணிகளுக்கு நினைத்த விதத்தில் தலையிடுவதற்கு ஹெந்த விதாரணவிற்கு கீர்த்தி கஜநாயக்க இடமளிக்கவில்லை. இதனால் ஹெந்த விதாரண விவகாரத்தை கோத்தாபயவின்



கவனத்திற்கு கொண்டு சென்றார். விளைவாக, கஜநாயக்க பதவி கவிழ்க்கப்பட்டு பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிமல் சந்திரா வாக்கிஸ்ட அரசாங்க உளவுத்துறை பிரதானியாக நியமிக்கப்பட்டார்.

தன்னை ஒரு சிறந்த பௌத்தனாகக் காட்டிக் கொண்ட சந்திரா வாக்கிஸ்ட எதிராளிகளுக்கு திட்டமிட்டு சதி செய்வதில் வல்லவராகத் திகழ்ந்தார். நிமல் வாக்கிஸ்ட கிரம விமலஜோதி தேரருக்கூடாக பொதுபல சேனாவினை ஆரம்பித்து, அதற்கு திரைக்குப் பின்னாலான அனுசரணையை கோத்தாபயவிடமிருந்து பெற்று, முதலில் ஹலால் விவகாரத்தை பூதாகாரப்படுத்தினார்கள்.

ஆனால், சந்திரா வாக்கிஸ்டவிற்கும் இத்திட்டத்தினை நீண்ட காலம் முன்னெடுத்துச் செல்ல இடமளிக்கப்படவில்லை. இராணுவ புலனாய்வுத் துறையைச் சேர்ந்த கேர்ணல் சுரேஷ் சலே என்பவர் கலகொட அத்தே ஞானசார, விதாரன் தெனியே நந்த தேரர்களை வலை விரித்து மடக்கிப் பிடித்து பொதுபல சேனாவினை வழிநடாத்தும் பொறுப்பினை தன்வசம் பெற்றார்.

அவ்விடம் தொட்டு கோத்தாபாயவின் ஆலோசனையின் பேரில் பாதுகாப்பு அமைச்சின் இரகசிய கணக்கிலிருந்து நிதி ஒதுக்கீடுகளை பெற்று இராணுவப் புலனாய்வுப் பிரிவு பொதுபல சேனாவினை வழிநடாத்தியது. அளுத்கம தர்கா நகரில் 04 முஸ்லிம் இளைஞர்களை சுட்டுக்கொன்று அப்பிரதேசத்து மக்களுடைய கடை, வீடுகளை தீயிட்டுக் கொளுத்தினார்கள். இராணுவப் புலனாய்வுப் பிரிவு, கொழும்பு பயங்கரவாத விசாரணைப் பிரிவு, அரசாங்க

உளவுத்துறை போன்ற பிரிவுகளிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட சிலர் மற்றும் அப்போதைய பிரதிப் பொலிஸ்மா அதிபர் அநுர சேனாநாயக்க, சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி பிரேமலால் ரணகலவினால் தெரிவுசெய்யப்பட்ட ஒரு சில காடையர்களும் மேற்படி அளுத்கம வன்முறையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். குற்றவியல் விசாரணைத் திணைக்களம் முறையானதொரு பரிசோதனையை நடாத்தினால் குறித்த நபர்களை வெளிச்சத்திற்குக் கொண்டுவர முடியும்.

அளுத்கம சம்பவத்தை விசாரணை செய்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் வி. இந்திரான் பொதுபல சேனா மற்றும் இராணுவத்திலிருந்து 13 பேரை பேருவளையில் கைதுசெய்திருந்தார். ஆனாலும் உயர் மட்டத்திலிருந்து வந்த அழுத்தங்களின் காரணமாக அவர்கள் பிணையில் விடுதலையானார்கள். அதற்கு எதிர்ப்பு தெரிவித்த வி. இந்திரான் களுத்துறை மாவட்டத்திலிருந்து இடமாற்றப்பட்டு, அவர் சம்பந்தப்பட்ட பாலியல் பிரச்சினையொன்றை உயர்மட்ட விசாரணையாக ஆரம்பித்தார்கள்.

வன்முறைச் செயல்களுடன் தொடர்புற்ற எவரும் பொலிஸ் பிணையில் விடுதலை செய்யப்பட முடியாது. அது நீதிமன்றத்திற்கூடாக மேற்கொள்ளப்பட வேண்டும். ஆனால், அந்த வன்முறையாளர்களை ராஜபக்ஷாக்கள் விடுதலை செய்தார்கள்.

அளுத்கம, தர்காநகர் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களுடன் தொடர்புடைய எவரும் இதுவரையில் கைதுசெய்யப்படவில்லை. இரகசிய பொலிஸ் பிரிவின் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஜயசூரியவின் தலைமையில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தபோதும், பின்னர் அவர் அதிலிருந்து நீக்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து பிரதான பொலிஸ் பரிசோதகர் ரஞ்சன் லமாஹேவாவுக்கு குறித்த விசாரணை நடவடிக்கைள் கைமாறின. ஆனாலும் அப்பரிசோதனைகளின் பெறுபேறுகள் இதுவரையிலும் வெளியிடப்படவில்லை.

அது ஏன்? மேற்படி தாக்குதல்களுக்கு அரசாங்க உளவுத்துறை, இராணுவ புலனாய்வுத் துறை, பயங்கரவாத தடுப்பு பிரிவுகளிலுள்ள ஒரு சிலர் தொடர்புபட்டுள்ளார்கள் என்கின்ற காரணத்தின்ாலா?

குறித்த தாக்குதல்களுக்காக வேண்டி பாதுகாப்பு தரப்பினரின் துப்பாக்கிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இது பாரதூரமானதொரு குற்றச் செயலாகும். பொதுபல சேனா, சிஹல ராவய போன்ற அமைப்புகளின் செயற்பாடுகள் 2015 ஜனவரி 8ஆம் திகதி ராஜ பக்ஷ ஆட்சியின் வீழ்ச்சிக்குத் தூபமிட்டிருந்தது.

பொது பலசேன அமைப்பின் தலைவர் கிரம விமலஜோதிக்குச் சொந்தமான கொழும்பு தும்முல்லையில் அமையப் பெற்றுள்ள 'சம்புத்த ஜயந்தி மந்திரய' கட்டிடத்தை திறந்து வைக்கும் பொழுது, சாதாரண பக்தர் பொது மக்களாக வெள்ளாடை தரித்து வந்திருந்தவர்களுள் பெரும்பாலானோர் அரச உளவுத்துறை மற்றும் இராணுவ புலனாய்வுத் துறையைச் சேர்ந்தவர்களாவர்.

(பக்.11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவல்ல
கறைபடிந்த வெளிச்சம்
இரவு குதறித்துப்பிய விடியல்
இதுவல்ல
எனது தோழர்கள் தாகம் கொண்டு
தேடியலைந்த விடியல்
இதுவல்ல

(பைஸ் அஹ்மத் பைஸ்)





றவூப் ஸெய்ன்



நல்லாட்சி அரசியல்

# சுதந்திரத்தின் அடிநாதம்

இலங்கையில் சுதந்திர தினத்தைக் கொண்டாடுவது ஒரு சடங்கு. சுதந்திரம் நள்ளிரவில் பெற்றோம். இன்னும் விடியவில்லை என்று யாரோ சொன்னது போன்று சுதந்திரம் கிடைத்து 6 தசாப்தங்கள் கடந்து விட்டன. இன்னும் அதன் தெவிட்டாத கனியை நாம் அனுபவிக்கவில்லை. வருடம் தோறும் பெப்ரவரி 4 இல் காலி முகத்திடலில் வேட்டுக்களைத் தீர்த்து சுதந்திரத்தை நினைவுகூர்கின்றோம். அதன் ஆழ்ந்த அர்த்தத்தை, அடிநாதத்தை எப்போதேனும் நாம் உணர்ந்திருக்கிறோமா? சுதந்திரத்தை அதன் முழு அளவில் நாம் இன்னும் அனுபவிக்க இல்லை என்பதையே நமது ஆட்சி இயந்திரமும் அதன் நகர்வுகளும் உறுதிசெய்கின்றன.

ஒரு நாடு அரசியல் சுதந்திரத்தை இழப்பதை விட கலாசார சுதந்திரத்தை இழப்பது மிகவும் ஆபத்தானது என்றார் அல்ஜீரிய அரசியல் சிந்தனையாளர் மாலிக் பின் நபி. பொருளாதார சுதந்திரமும் அத்தகையதுதான். ஐரோப்பியர்களின் சப்பாத்துக் கால்களிலிருந்து இலங்கைப் பூமி விடுபட்டதை அரசியல் சுதந்திரமென்று அர்த்தப்படுத்துகின்றோம். ஆனால், அன்னிய நுகத்தடியில் அடிமைப்பட்டுக் கிடக்கின்ற நமது கலாசார சுதந்திரம், பொருளாதார சுதந்திரம் எப்போது விடுதலை பெறும்.

ஏகாதிபத்தியத்திற்கு இப்போது நிலம் தேவையில்லை. புவிப்பரப்பற்ற சமூக, அரசியல், பொருளாதார இடைவெளிகளை அது நுட்பமாக ஆக்கிரமித்துள்ளது. அதனால் நம்மீது ஒரு மறுகாலனியம் (Re-colonization) நிழல்போல் தொடர்கிறது. அது குறித்து எந்தப் பிரக்ஞையும் அற்றவர்களாகவே நாம் சுதந்திர தினத்தை எதிர்கொள்கின்றோம். சுதந்திர போராட்ட தியாகிகளை நினைவுகூர்வதோடு அலங்காரப் பந்தல்களுக்கு மத்தியில் இருந்து நாம் சுதந்திரம் பெற்றுவிட்டோம் என்று கூச்சலிடுகின்றோம். உண்மையில் நாம் சுதந்திரம் பெற்றுவிட்டோமா?

1978க்கு பின்னர் இலங்கையில் மாறி மாறி வந்த அரசாங்கங்கள் இலங்கையின் எல்லா வகை சுதந்திரங்களையும் அன்னிய சக்திகளிடம் தாரைவார்த்து வந்துள்ளன. இன்றும் அந்த சக்திகளின் ஆதிக்கம் சாக மறுக்கும் பிசாசு போன்று இலங்கையில் தொடர்கின்றது. இலங்கையின் அமைவிடம், அதன் கேந்திர முக்கியத்துவம், செறிந்து கிடக்கும் கனிமங்கள் எப்போதும் ஏகாதிபத்திய சக்திகளின் கண்களிலிருந்து தப்பிக்கவில்லை. இலங்கைச் சூழல் எப்படி தமக்குச் சாதகமாக மாறுகின்றது என்பதை பன்னாட்டு நிறுவனங்களும் முதலீட்டு சூதாட்டக்காரர்களும் ஏகாதிபத்திய சக்திகளும் கண்கொத்திப் பாம்பாக கவனித்துக் கொண்டே இருக்கின்றன.

அயலிலுள்ள இந்தியா சற்று தூரத்திலிலுள்ள சீனா, எங்கோ இருக்கின்ற அமெரிக்கா உள்ளிட்டு வல்லரசுகளும் வல்லரசுக் கனவாளிகளும் இலங்கை மீது வைத்துள்ள குறி ஒவ்வொரு நாளும் குரூர வடிவை எடுத்த வண்ணம் உள்ளன. அதற்கு ஆளும் வர்க்கம் சோரம் போவதுதான் அதிர்ச்சிகரமானது.

கொழும்பில் துறைமுக நகரை கட்டி வரும் சீனா, மீளவும் அதனைத் தொடரப் போகின்றது. கொள்ளுப்பிட்டியிலிருந்து வெள்ளவத்தை வரை சீனாவும் இந்தியாவும் போட்டி போட்டுக் கொண்டு நிர்மாணித்து வரும் பிரமாண்டமான ஐந்து நட்சத்திர ஹோட்டல்கள் எம்மை, எமது சுதந்திரத்தை, எமது இறைமையை பயமுறுத்துகின்றன. சீனக் குடாவில் சீன அரசாங்கம் முதலீட்டுக்காக ஏங்குகின்றது. வடக்கில் பரந்தனில், யாழ்ப்பாணத்தில் இந்திய அரசு கால்பதிக்கத் துடிக்கின்றது. ஹம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தி என்ற பேரில் தெற்கில் சீனா கால்பதித்துள்ளது.

இது மஹிந்த அரசாங்கத்தினாலோ ரணில் அரசாங்கத்தினாலோ புதிதாக பிறந்த கொத்தடிமைத்தனமல்ல. முன்னாள் ஆட்சியாளர் சந்திரிக்கா 2500 வகை மூலிகைகள் அடங்கிய சிங்க ராஜவனத்தை பத்து ஆண்டுகளுக்கு அமெரிக்காவுக்குக் குத்தகைக்குக் கொடுத்திருந்தார். கடந்த ஆட்சியின் ராஜபக்ஷாக்கள் கொழும்பின் மத்தியில் பல நூறு ஏக்கர் காணிகளை நூறு ஆண்டுகளுக்கு வெளிநாட்டு சக்திகளுக்கு குத்தகைக்கு விட்டிருந்தனர்.

அமெரிக்காவின் வளர்ச்சிக்கு இலங்கையின் கனிம வயல்கள் தேவைப்படுகின்றன. சீனாவின் பட்டுப்பாதை செயற்திட்டத்திற்கு இலங்கை சீனாவுக்கு தேவைப்படுகின்றது. வட்டித்தொகைக்கு கடன் வழங்குதல் என்றபேரில் வெளிநாட்டு சக்திகள் நாட்டில் கொண்டுள்ள ஆதிக்கம் குறித்து யாரும் சிந்திப்பதில்லை. கடந்த ஆட்சியில் இலங்கை இந்தியாவுடன் செய்ய இருந்த CIPA பொருளாதார ஒப்பந்தம் இன்னும் முற்றாக கிடப்பில் போடப்படவில்லை. ரணில் அரசு அதை எந்த வேளையிலும் உயிர்ப்பிக்கலாம் என்று கூறப்படுகின்றது. பொருளாதாரத்தை முன்னேற்றுவதாயின் வெளிநாட்டு சக்திகளின் தயவு தாட்சாண்யம் தேவை என்பது இலங்கை அரசியலில் ஒரு நம்பிக்கையாகவே மாறி விட்டது.

இன்று ரணிலும் அவரது கூட்டு அரசும் 'வெளிநாட்டு முதலீட்டாளர்களை கவர்தல்'' என்று முழக்கமிடுகின்றனர். ஜனாதிபதியோ உணவு உற்பத்திப் பெருக்கம் என்று கோஷமிடுகிறார். வெறும் முழக்கங்களாலும் கோஷங்களாலுமே ஆட்சியாளர்கள் தம்மை நிலை நிறுத்த முயல்கின்றனர். ஆனால், முழக்கங்களால் ஒரு நாடு முன்னேறிய வரலாறு இல்லை. நெறிசாரா வணிகத்திற்காக, வகைதொகையற்ற இலாபத்திற்காக எப்போதும் ஏங்கிக் கிடக்கும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கையின் பொருளாதாரத்தில் தன்னாதிக்கம் கொள்ளவே இந்த கோஷம் வழிகோலும். நாட்டின் பொருளாதார நெருக்கடிகளை சொந்தத் திட்டங்களாலும் தூர தரிசனத்தாலும் சமாளிக்கத் தெரியாத அதிகார வர்க்கம் இங்கு அன்னியர்களை கொண்டுவந்து விட்டால் இலங்கையை செல்வக்குவியலுக்குள் புரட்டிப் போட்டு விடலாம் என மனப்பால் குடிக்கின்றனது.

இலங்கைப் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்தல் என்பவற்றுக்கு நாம் கண்டுபிடித்திருக்கும் ஒரே மார்க்கம் வெளிநாட்டு முதலீடுதான் என்றால் அதற்கான நெறிமுறைகளை நாம் வகுக்க வேண்டும். எல்லையற்ற சலுகைகள், எக்கச்சக்கமான விலக்குகள், உள்ளூர் தொழிலாளர்களைப் பாதிக்கும் சட்டங்கள், சுங்க வரி, கலால் வரி, ஏற்றுமதி வரிகளை கைவிடுதல், இலங்கையின் கச்சாப் பொருட்கள் எல்லாவற்றையும் வெளிநாடுகளுக்கே தாரைவார்த்தல் போன்ற நடவடிக்கைகளிலேயே நாம் இறங்குகின்றோம்.

வெளிநாட்டு முதலீட்டுக்கும் தேசிய அபிவிருத்திக்கும் இடையில் நிலவும் வெற்றிடத்தை நாம் உணர்வதில்லை. சில போது உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பதற்கு இறக்குமதி மீதான வரியை திடீர் திடீரென அதிகரிக்கின்றது அரசு. நள்ளிரவிலிருந்து மாற்றமடையும் இந்த விலை ஏழைகளின் வயிற்றில்தான் அடிக்கின்றது. வேளாண்மைத் தொழிலாளர்களைப் பாதிக்கின்றது. முடிவில் உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்கவுமில்லை உணவுப் பொருட்களின் விலை குறையவும் இல்லை.



மேலைநாடுகளே இன்னும் தமது பொருளாதாரப் பின்னடைவிலிருந்து முழுமையாக சுதாகரித்துக் கொள்ளவில்லை. இன்று ஆசியாவின் பொருளாதார ஜாம்பவான் என்று ரணில் சிலாகிக்கும் சீனா வேகமாக சரிந்து வருகின்றது. வீழ்ச்சியடைந்து வரும் சீனப் பொருளாதாரத்தை நம்பி, இலங்கையை அடகு வைப்பது கடைந்தெடுத்த முட்டாள் தனமாகும்.







மூன்றாம் மண்டல நாடுகளை வறுமைக்குமேல் வறுமையில் தள்ளுவதை இலக்காகக் கொண்ட உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் என்பவற்றை நம்பி பாதீட்டை தயாரிக்கும் நமது அதிகார வர்க்கம் கடன்களிலேயே காலம் தள்ளுகின்றது. கடந்து 20 ஆண்டுகளில் இலங்கை பட்ட வெளிநாட்டு கடன்களின் சுமையை சாதாரண பிரஜைகள் ஏற்று வருகின்றனர். ஒவ்வொரு இலங்கைப் பிரஜையும் வெளிநாடுகளுக்கு பல மில்லியன் டொலர்களை கடனாக செலுத்த வேண்டியுள்ளது.

அயன் குலையாத நமது அரசியல் வாதிகள் எங்கோ 5000 மீற்றர் தொலைவிலுள்ள நாட்டிடமிருந்து கடன் வாங்கிக் கொண்டே பொருளாதார வளர்ச்சி கண்டு விட்டோம் என்று எக்களிக்கின்றனர். இத்தகைய காகித வளர்ச்சியைக் காட்டியே அடுத்த முறையும் அதிகாரத்திற்கு வருகின்றனர். இறுதியில் ஏமாற்றப்படுகின்றவர்கள் மக்கள்தான். பொருளாதார சுதந்திரம் நாம் இன்னும் அடையாத ஒன்று என்பதை இந்த சுதந்திர தினத்திலேனும் நாம் உணரவேண்டும்.

கலாசார சுதந்திரத்தைக்கூட நாம் இன்னும் முழுநிறைவாக அனுபவிக்கவில்லை. 1978க்குப் பின்னர் அந்நியர்களின் உற்பத்திப் பொருட்களுக்கான சந்தையாக திறக்கப்பட்ட நமது நாட்டில் முதலீடும் பண்டங்களும் மட்டும் வந்து குவியவில்லை. காலனியாதிக்க சக்திகளின் கலாசார குப்பை கூழங்களும் வந்து கொட்டின. இன்று இலங்கையில் இரவுநேர விடுதிகள், மதுபானத் தவறணைகள், மேற்கத்தேய பாணியிலான ஓய்வுமுறை, ஆடை அணிகலங்கள், உணவு முறை என்று எல்லாமே வேகமாய் மாறிவிட்டன. சமீபத்தில் கொழும்பில் நடந்த பிரமாண்டமான இசை நிகழ்ச்சியும் அதில் நடந்தேறிய காட்சிகளும் இதற்கோர் உதாரணம் மட்டுமே.

இந்நாட்டில் வாழும் சிறுபான்மை சமூகங்கள் தமது கலாசார, மத சுதந்திரத்தைத் தக்கவைப்பதில், எதிர்கொண்டுள்ள ஆபத்து குறித்தும் இந்த சுதந்திர தினத்தில் நாம் சிந்திக்க வேண்டியுள்ளது. 1850களிலிருந்தே சிறுபான்மை சமூகங்களின் கலாசார சுதந்திரத்திற்கெதிரான வேட்டைகள் தொடங்கிவிட்டன. அநகாரிக்க தர்மபால முதல் இன்றைய ஞானசாரர் வரை சிறுபான்மை மக்களின் மத சுதந்திரத்தையும் கலாசார சுதந்திரத்தையும் தாக்கி வருகின்றனர். அது இச்சமூகங்களின் பொருளாதார, சமூக சுதந்திரங்களையும் மீறக்கூடிய ஆபத்து எழுந்துள்ளது.

மேலைநாடுகளின் ஆதரவின்றி நாம் முன்னேற்றம் காண முடியாது என்று கருதும், பேசும், விவாதிக்கும் ஒரு தாழ்வு மனப்பான்மை நமக்கு எங்கிருந்து வந்தது? உலக வங்கியும் சர்வதேச நாணய நிதியமும் 'கட்டமைப்பு மாற்றம்' (Structurl Change) என்ற பெயரில் மூன்றாம் உலக நாடுகளை மேலை நாடுகளின் பொருளாதாரப் பொறியில் மாட்டி வைக்கவே செயல்படுகின்றன. உலக வங்கியின் பொருளாதார கொள்கையை வகுத்தவர் அதனைத் தெளிவாக ஏற்றுக் கொண்டுள்ளார். மலேசியா ஒரு காலத்தில் வெறும் இறப்பர் பொருளாதாரத்தைக் கொண்டிருந்த நாடு. விவசாயப் பொருளாதாரத்திலிருந்து கைத்தொழில் பொருளாதாரத்தை நோக்கி அந்நாட்டை நகர்த்தியவர் டொக்டர். மஹாத்திர் முஹம்மத்.

மஹாதிரின் வெளிநாட்டுக் கொள்கை மலேசியாவின் பொருளாதாரத்தை முன்னேற்றுவதில் மிகவும் முற்போக்கானது. நாணய நிதியத்திடமிருந்தும் உலக வங்கியிடமிருந்தும் கடன் பெறாமலேயே ஒரு நாட்டை பொருளாதார ரீதியில் முன்னேற்ற முடியும் என்பதற்கு மாஹிதிரின் கொள்கை ஒரு சிறந்த முன்னுதாரணம்.

தெற்காசிய நாடுகள் மேலைநாடுகளின் வால்களில் தொங்குவதை விட்டு, தமது நாட்டுக்கே உரிய சிறந்த பொருளாதார கொள்கையை வகுத்துச் செயற்படுமானால் அப்போதான் நாம் பொருளாதார சுதந்திரம் பெறுவோம். கலாசார சுதந்திரத்தைப் பாதுகாக்க வேண்டுமாயின் பொருளாதார சுதந்திரத்தைப் பாதுகாப்பது அவசியம். பொருளாதார சுதந்திரம் இல்லாத அரசியல் சுதந்திரமென்பது அர்த்தமற்றது. அதன் வெளிப்பகட்டு நம் கண்களைக் குருடாக்கலாம். நாம் முன்னேறிவிட்டோம் என்ற பிரமையை ஏற்படுத்தலாம். ஆனால், அது வெறும் மாயைதான். உண்மை அதற்குப் புறம்பானது.

நல்லாட்சி என்ற பெயரில் அதிகாரத்தைக் கைப்பற்றியிருப்போர் மேற்கு நாடுகள் விரிக்கும் பொருளாதாரப் பொறியில் சிக்கிவிடக் கூடாது. ஜே.ஆர்.இன் பழைய பாதையை இன்று ரணில் தெரிவு செய்வது போலவே அவரது நகர்வுகள் அமைந்துள்ளன. வெளிநாடுகளுக்குச் செல்லும் போது ரணிலை பிரமாண்டமாகக் கட்டமைப்பதும் அவர் மிகச் சிறப்பாகவே செயல்படுகின்றார் என்று மேலைய ஊடகங்கள் புகழாரம் சூட்டுவதும் மிகுந்த சந்தேகத்தை உருவாக்குகின்றது.

இந்தக் கட்டமைப்பிற்கும் புகழாரத்திற்கும் பின்னாலுள்ள சூட்சுமத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும். மாலிக் நபி சொல்வது போன்று அரசியல் சுதந்திரத்தை இழப்பதை விட கலாசார சுதந்திரத்தை இழப்பதுதான் மிகவும் ஆபத்தானது. 68ஆவது ஆண்டில் சுதந்திரத்தைக் கொண்டாடும் நாம் எல்லோரினதும் கைகளில் நுண்மையான விலங்குகள் கட்டப்பட்டுள்ளன. தளைகளை அறுப்பதும் எல்லா வகை அடிமைத் தனத்திலிருந்தும் நம்மை விடுவிப்பதுமே இன்றைய தேவையாகும். மீளவும் பைஸ் அஹமத் பைஸ் நம்மை எச்சரிக்கின்றார்.

இருள் பிரிந்து விட்டது
தூய ஒளி வந்துவிட்டது.
இலக்கை அடைந்துவிட்டோம்.
சொல்கிறார்கள் சிலர்!
நெடிய பயணம் தொடரட்டும்
இலக்கு இதுவல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பி.எம். முஜீபுர் ரஹ்மான்

# மிகப் பெரிய ஆபத்தில் முஸ்லிம் சமூகம் தூங்குகிறது

- வை.எல்.எஸ்.ஹமீத்

நாடளாவிய ரீதியில் அரசியல் அமைப்பு மாற்றம் குறித்து பேசப்படுகின்ற இச்சூழ்நிலையில், முஸ்லிம் சமூகம் இவ்வரசியல் மாற்றத்திற்கு தயாராகி இருக்கிறோமா அல்லது தயாராகிக் கொண்டிருக்கிறோமா என்ற பாரிய கேள்வி எம்மத்தியில் இருக்கிறது.

எமது சமூகத்தின் சிவில் சமூக நிறுவனங்கள், தனிப்பட்ட முக்கிய பிரமுகர்கள் இவ்வரசியல் மாற்றத்தின் பொதுப்படையான விடயங்களைப் பற்றித்தான் பேசுகிறார்கள். உதாரணமாக, அடிப்படை உரிமை மீறல் மற்றும் ஏனைய சில விடயங்கள். இதனைத்தானே ஏனையோரும் பேசுகிறார்கள். ஆகவே, முஸ்லிம்களும் இதனைத்தான் பேச வேண்டுமா? முஸ்லிம்கள் தங்களது சமூகத்தின் பிரச்சினை என்ன? அதற்கான தீர்வு எவ்வாறு அமைய வேண்டும் என்பது குறித்துச் சிந்திப்பதே இன்றைய காலத்தின் முதன்மையான விடயமாகும்.

இப்போது அமையப் போகின்ற அரசியல் அமைப்பு எவ்வாறு அமையப் போகிறது என்பது குறித்து இன்னும் சரியான முடிவில்லை. ஊகங்களின் அடிப்படையிலேயே பேசப்படுகின்றன. ஆகவே, இந்த தெளிவற்ற அரசியல் அமைப்பில் எமது சமூகத்திற்கு என்ன நன்மை இருக்கப் போகிறது? அதன் மூலம் எமது சமூகம் சந்திக்கப் போகின்ற பாதிப்புக்கள் என்ன? இப்பாரிய பாதிப்பில் இருந்து எமது சமூகத்தை எவ்வாறு காப்பது?


எனவே, சில உள்ளகத் தகவல்கள் மற்றும் கடந்த கால அனுபவங்களை வைத்து எவ்வாறான அரசியல் மாற்றம் ஏற்படப் போகின்றது. என்பது குறித்து சில முடிவுகளை எடுக்கலாம். அத்தோடு, இந்த அரசியல் அமைப்பு மாற்றம் குறித்து அறிக்கை தயாரிப்பதற்காக 24 பேர்களைக் கொண்ட ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது. அவர்கள் சில தலைப்புக்களை வெளியிட்டுள்ளார்கள். அந்தத் தலைப்புக்களை ஆய்வு செய்கின்றபோது எவ்வாறான அரசியல் அமைப்பு வரும் என்று இப்போதைக்கு கூறமுடியாது.

ஆனால், அவர்கள் எவ்வாறான அரசியல் அமைப்புமாற்றத்தை எதிர்பார்க்கிறார்கள் என்பதை அத்தலைப்புக்களின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

உதாரணமாக, அரசின் தன்மை (Nature of State), நீதிமன்ற அமைப்பு (Court Structure), அரசியல் அமைப்பு நீதிமன்றம் (Constitutional Court) ஆகியன குறித்து அதிகமாகப் பேசுகிறார்கள். இதில் நீதிமன்ற அமைப்பு (Court Structure), மற்றும் அரசியல் அமைப்பு நீதிமன்றம் (Constitutional Court) ஆகியன குறித்து மிக விரிவாகப் பேசுகிறார்கள்.

இவற்றில் இன்று இலங்கையில் உள்ள நீதிமன்ற அமைப்பைப் (Court Structure) பார்க்கின்றபோது, ஏற்கனவே நீதிமன்ற அமைப்பு ஒன்று உண்டு. அதாவது, நீதவான் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம், மேல் நீதிமன்றம், முறையீட்டு நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றம் என்ற நீதிமன்ற படிமுறை அமைப்பு ஒன்று உண்டு. ஆனால், இப்போது ஏன் இதனைப் பற்றிப் பேசுகிறார்கள்? இதற்குள் அரசியல் அமைப்பு நீதிமன்றம் என்ற ஒன்றையும் பேசுகிறார்களே, இவற்றிலுள்ள மர்மங்கள் என்ன? அரசாங்கத்தின் உள்ளக நோக்கம் என்ன? என்பது குறித்து இன்னும் முஸ்லிம் சமூகம் விழித்துக் கொள்ளவில்லை.

அடிப்படை உரிமை, அரசியல் அமைப்பு குறித்த விடயங்களை அரசியல் அமைப்பு நீதிமன்றத்தின் கீழ் கொண்டு வர முயற்சிப்பதோடு, சமஷ்டி நாடுகளில் உள்ளது போன்று ஒரு நீதிமன்ற ஒழுங்கையும் இந்நீதிமன்ற ஒழுங்கின் மூலம் அவர்கள் நாடுகிறார்கள்.



அடுத்தது, பாராளுமன்ற ஆட்சி மற்றும் ஜனாதிபதி ஆட்சி என்பன குறித்துப் பேசுகிறார்கள். இதில் அதிகாரப் பகிர்வு குறித்துப் பேசுகிறார்கள். இதில் முஸ்லிம்களை நேரடியாகப் பாதிக்கின்ற விடயம் அதிகாரப் பகிர்வாகும். உண்மையான அதிகாரப் பகிர்வை முஸ்லிம்கள் ஏற்க முடியுமா?

ஏற்கனவே ஒரு அதிகாரப் பகிர்வு ஒன்று உண்டு. ஆனால், இந்த அதிகாரப் பகிர்வு ஒரு அர்த்தமற்ற அதிகாரப் பகிர்வு என்று தமிழ்த் தரப்பு கூறுகிறது. இப்போது அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு (Meaningful Devolution) என்று கூறுகிறார்கள். அதனை பல பெயர்கள் கொண்டு அழைக்கலாம். இதன் அர்த்தம் என்ன?

இதற்கு இந்தியாவில் உள்ள சமஷ்டி முறையை எமது முஸ்லிம் சமூகத்தின் முக்கிய பிரதிநிதிகள் முன்வைக்கிறார்கள். அதிலுள்ள பொதுப் பட்டியல் (Concurrent list) பற்றிக் கேட்கின்றபோது அதனை எடுத்துவிடலாம் என்கிறார்கள். அப்பொதுப் பட்டியலை எடுத்துவிட்டால் அதிலுள்ள சாதக பாதகங்கள் என்ன? என்பது குறித்து ஆழமாக சிந்திக்க வேண்டும்.

இவற்றில் தமிழ்க் கட்சிகள் வடக்கு கிழக்கு இணைப்பு குறித்துப் பேசுகிறார்கள். சில முஸ்லிம் கட்சிகள் தங்களுக்கு தனி அலகு வேண்டும் என்கிறார்கள். மேலும் சில முஸ்லிம் கட்சிகள் அதிகபட்ச அதிகாரப் பகிர்வுக்கு ஆதரவு என்றும் கூறுகிறார்கள். ஆனால், சமஷ்டிக்கு ஆதரவா எதிர்ப்பா என்று எந்த முஸ்லிம் கட்சிகளும் வெளிப்படையாகத் தெரிவிக்கவில்லை. இப்படியான குழப்ப நிலையிலேயே முஸ்லிம் சமூகம் இருக்கிறது.

இந்நிலையில் அரசியல் அமைப்புக் குழுவில் முஸ்லிம் சிவில் சமூகப் பிரதிநிதிகள் யாரும் பங்களிப்பதில்லை. அரசியல் அமைப்பு விடயமா, அதனை அரசியல்வாதிகள் பார்த்துக் கொள்வார்கள். அது அவர்களின் வேலை என ஒதுங்கிக் கொள்கிறார்கள்.

### அதிகாரப் பகிர்வு

இப்போதுள்ள அதிகாரப் பகிர்வு ஒரு அர்த்தமற்ற அதிகாரப் பகிர்வு என்று வைத்துக்கொள்வோம். மத்தியில் அதிகாரங்கள் அனைத்தும் குவிக்கப்பட்டிருக்கின்றன. அதனை 9 மாகாணங்களுக்கும் பிரித்துக் கொடுப்பதற்கு முயற்சிக்கிறார்கள். இதன் மூலம் தற்போதுள்ள மாகாண சபைகளின் அதிகாரங்கள் மேலும் வலுப்பெறுவதன் மூலம் அங்கு ஒரு சமஷ்டி ஆட்சி நடைபெறும்.

தற்போது இந்நாட்டில் 10 வீதமான முஸ்லிம்கள் இருக்கிறார்கள். இவர்கள் நாட்டின் அனைத்துப் பாகங்களிலும் சிதறி வாழ்கிறார்கள். சிலபோது இந்நாட்டு முஸ்லிம்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஆட்சியைத் தீர்மானிக்கின்ற சக்தியாக இருக்கிறோம். சிலபோது ஜனாதிபதியைக்கூட தீர்மானிக்கிற சக்தியாக இருக்கிறோம்.

எனவே, சமஷ்டி அரசு முறைமையை விட மத்திய அரசு முறைமையில் முஸ்லிம்களுக்கு சில சாதகங்கள் இருக்கின்றன. இந்த அதிகாரங்களை எடுத்து பிராந்தியங்களில் வைத்தால், இந்த பிராந்திய அதிகாரங்களில் முஸ்லிம்கள் தாக்கம் செலுத்தக் கூடியவர்களாக இருக்கிறார்களா? சிலபோது கிழக்கு மாகாணத்தில் மாத்திரம் அதிகாரம் (பக்.14)

மெய் விளம்பி

# யோசிக்க மறந்த யோஷித்த

"இரத்தக் கடலினுள் அமிழ்த்தியேனும் சத்தியத்தை மறைக்க முடியாது"
(மாக்ஸிம் கார்க்கி)

இலங்கைச் சிறு தீவிற்குள் ஒரு குடும்பம் முன்னெடுத்த ஆட்சியில் புரியப்பட்ட பல ஏராளமான குற்றச் செயல்கள் தேர்தல் பெறுபேறுகள் போல் அவ்வப்போது வெளிவந்து கொண்டுள்ளன. ராஜபக்ஷ குழுமம் எவ்வாறு யுத்தத்தை தங்களுக்கு சார்பான உரிமைப் பத்திரமாக எழுதிக் கொண்டு அதை வைத்து பிழைப்பு நடாத்தினார்களோ, அதே பாணியில் மாற்றத்தை விரும்பியா மக்கள் புரட்சியில் உருவான நல்லாட்சி அரசாங்கமும் அவ்வெற்றியை தங்களுக்கு சார்பானதாக மாற்றிக் கொண்டுள்ளது?

ஜனவரி 8 இற்குப் பிந்திய அரசியல் மேல்தள மாற்றங்கள் போக ஏனைய அரச இயந்திரங்கள் சுத்திகரிக்கப்படவில்லை. அதன் பெறுபேறுகளையே நாம் தற்பொழுது கண்டு வருகின்றோம். யுத்த வெற்றியின் போர்வையில் ராஜபக்ஷ காலப்பகுதியில் அரங்கேற்றப்பட்ட பல குற்றச்செயல்களின் பெறுபேறுகள் தற்போதைய அரசாங்கத்திடம் உள்ளன. ஆனாலும், அவை முழுமைப் படுத்தப்படாத பெறுபேறுகளாக மக்களுக்கு காண்பிக்கப்படுவதில்லை.

இலங்கை அரசியல் தென் இந்திய சினிமாப் பாணியில் ஏனைய கட்டங்களுக்கு மெல்லக் கவனமாக நகர்த்தப்பட்டு வருகின்றது. வர்த்தகர் ஷியாம் கொலை விவகாரத்தை விசாரிக்கும் படலத்துடன் ஆரம்பிக்கப்பட்டு, பின்னர் வசீம் தாஜுதீன் கொலை சம்பவத்தை விசாரித்து முடிப்பது போல் பாசாங்கு காட்டினார்கள். பின்னர் எக்னலிகொட விவகாரத்தை கிளறினார்கள். ஹோமாகம நீதிமன்றத்தில் எக்னலிகொட வழக்கு விசாரிக்கப்பட்டு கொண்டிருக்கும் பொழுது அங்கு திடீரென ஞானசார ஆஜராகிறார். மக்களின் அவதானம் வேறு திசையில் திருப்பப்படுகிறது. நீதிமன்ற அவமதிப்பு! ஞானசார கைது!

காவியுடை தரித்த தேரர் ஒருவரின் அடாவடித்தனங்கள் குறித்த பலத்த விமர்சனங்கள் பௌத்த மதத்திற்கே இழிவெனக் கருதிய பௌத்த ஆட்சியாளர்கள் திடீரென யோஷித ராஜபக்ஷவின் கோப்



பொன்றை மேலெடுத்தார்கள். கறுப்புப் பண சுத்திகரிப்பு சட்டத்தின் கீழான குற்றங்களின் பேரில் அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். சில காலங்களின் பின்னர் அவர் பிணையில் விடுதலையாவார். அரசாங்கம் தொடர்பில் மக்களுக்கு அதிருப்தி ஏற்படும் பொழுது மற்றொரு விவகாரத்தை பூச்சாண்டி காட்டுவார்கள். இதுவே தற்போதைய இலங்கையின் அரசியல் திசைவழிப்பயணமாக உள்ளது.

இந்நிலமை இவ்வாறு இருக்க, நாமல் ராஜபக்ஷ தனது செல்வாக்கைப் பயன்படுத்தி சட்டப் பரீட்சையை எவ்வாறு குளிரூட்டப்பட்ட தனியறையில் இருந்து எழுதினாரோ அதேபோன்று எவ்வித அடிப்படை தகைமைகளுமின்றி யோஷித ராஜபக்ஷ இலங்கை கடற்படையின் நிறைவேற்றுப் பிரிவில் இணைத்துக் கொள்ளப்பட்டமைக்கான தகவல்களை ஊடகங்கள் வெளியிட்டுள்ளன.

கடற்படை நிறைவேற்றுக் குழுவில் இணைந்து கொள்வதற்கு உயர் தரப் பரீட்சையில் விஞ்ஞானம் அல்லது கணிதப் பிரிவில் அதிகூடிய திறமைப் புள்ளிகளை பெற்றிருத்தல் வேண்டும். இதுவே அடிப்படை விதியாக இருந்தது. ஆனால், யோஷித ராஜபக்ஷ நிறைவேற்றுக் குழுவில் இணைத்துக்கொள்ளப்பட்ட 2006 ஆம் ஆண்டு மேற்படி தகமைகளானது விஞ்ஞானம், கணிதம், வர்த்தகம் அல்லது கலைப்பிரிவில் சித்தியெய்திருக்க வேண்டும் என்றும் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் ஒரே தடவையில் ஆறு திறமைச் சித்திகளை பெற்றிருத்தல் வேண்டும் என்ற வகையில் மாற்றப்பட்டது. இவ்வகையில் கடற்படை வரலாற்றை சிதைத்து அரச புதல்வர் கடற்படையில் இணைத்துக் கொள்ளப்பட்டார்.

இது தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் நலிந்த ஜயதிஸ்ஸ 2015 டிசம்பர் 19ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய கேள்வியொன்றுக்கான பதிலாக யோஷிதவின் கல்விப் பின்னணி உள்ளிட்ட இன்னும் முக்கியமான தகவல்கள் கடந்த 26 ஆம் திகதி பாதுகாப்பு அமைச்சரின் உத்தரவாதத்தின் கீழ் வெளியிடப்பட்டிருந்தன.

அதன்படி யோஷித ராஜபக்ஷ முதன் முதலில் 2003இல் சாதாரணதர பரீட்சைக்கு தோற்றியுள்ளார். சிங்கள மொழியில் S சித்தியொன்றுள்ளது. இவர் 6 திறமைச் சித்திகளுடன் சாதாரண தரத்தில் சித்தியடைந்துள்ளார். 2004 இல் இவர் இரண்டாவது தடவையாக பரீட்சைக்கு தோற்றி ஆங்கில மொழியில் சிறப்புச் சித்தியையும் சிங்கள மொழியில் திறமைச் சித்தியையும் பெற்றுள்ளார்.

இக்கல்வித் தகைமைகளின் அடிப்படையில் 2006 இல் கலைப்பிரிவில் உயர் தரம் கற்ற யோஷித அரசியல் விஞ்ஞானத்திலும் புவியியலிலும் திறமைச் சித்திகளைப் பெற்றுள்ளார். ஏனைய பாடங்களில் அவர் சித்திபெறவில்லை. இவ்வகையில் பல திறமையானவர்களை துண்டித்து விட்டு 2006 டிசெம்பர் 14இல் யோஷித கடற்படையில் இணைந்து கொள்கிறார்.

அவ்விடம்தொட்டு கடற்படை எப்படி போனாலும் அவர் டிசம்பர் 31ஆம் திகதி வரையில் அதாவது 17 நாட்கள் மாத்திரமே நாட்டில் இருந்துள்ளார். 2007 ஜனவரி முதலாம் திகதி 'இளம் அதிகாரிகளுக்கான கற்கை நெறி' யொன்றில் கலந்து கொள்ள பிரித்தானிய அரச கடற்படை அகடமியில் இணைந்துகொள்கிறார். கடற்படையிலுள்ள ஒவ்வொரு படையணியிலும் கூடுதல் திறமைகளை வெளிப்படுத்துகின்ற Cadet அதிகாரிகளே குறித்த பாடநெறியில் ஈடுபடுத்தப்படுவார்கள். அப்பாடநெறிக்கு தெரிவுசெய்யப்படுவதற்குரிய நீண்ட பயிற்சிகளும் உள்ளன.

மிகவும் கட்டுப்பாட்டுடன் பயிற்சிகளில் ஈடுபடவேண்டும். பயிற்சிக்காலப் பகுதியில் அவர் இயல்பாகவே பரடே பயிற்சிகளைப் பெறுவார். ஆனால் யோஷித கடற்படையில் இணைந்து 17 நாட்களிலேயே பிரித்தானிய அரச கடற்படையில் பயிற்சிக்கு அனுப்பப்படுகிறார். குறித்த கற்கைநெறியில் யோஷித சொதப்பியுள்ளமைக்கான தகவல்களும் உள்ளன.

இப்பாடநெறியைத் தொடர்ந்து கப்பல் சமுத்திர பாடநெறி, உப லுதினன் கற்கை நெறி போன்றவற்றிலும் ஈடுபடுத்தப்பட்டுள்ளார். இக்கற்கைநெறிகளும் பிரித்தானியாவிலேயே இடம்பெற்றன. இவ்வாறு பல்வேறுபட்ட பயிற்சிக் கற்கைநெறிகள் என்ற பெயரில் 2007 ஜனவரி 1ஆம் திகதி முதல் 2008 ஒக்டோபர் 10ஆம் திகதி வரையில் பிரித்தானியாவில் தங்கியுள்ளார்.

அதன் பின்னர் 2009 ஒக்டோபர் மாதம் 29ம் திகதி தொடக்கம் 2010 ஆகஸ்ட் மாதம் 31ம் திகதிவரையில் உக்ரேனிலுள்ள தேசிய பாதுகாப்புப் பல்கலைக்கழகம் என்கின்ற நிறுவனமொன்றில் விஷேட கற்கை நெறியொன்றினையும் தொடர்ந்துள்ளார்.

இவ்வனைத்திற்கும் மெதமுலன மஹிந்தவின் பணம் செலவளிக்கப்பட்டிருந்தால் அது தொடர்பில் நிம்மதியாவது பெற்றிருக்கலாம். ஆனால் யோஷிதவின் கற்கைகளுக்காக பாதுகாப்பு அமைச்சு ஒதுக்கிய மக்கள் பணமே செலவு செய்யப்பட்டுள்ளது.

பெரிய பிரித்தானியாவில் கலந்து கொண்ட மூன்று கற்கை நெறிகளுக்கும் 1,86,49,501,06 ரூபா செலவழிக்கப்பட்டுள்ளது. பிரித்தானியாவைத் தொடர்ந்து உக்ரேன் தேசிய பாதுகாப்புக் கல்லூரியில் தொடர்ந்த கற்கைநெறிக்கு 39,73,317,06 ரூபா பணத்தொகை செலவழிக்கப்பட்டுள்ளது.

இவ்வகையில் தந்திரோபாய முறையில் கடற்படையில் இணைந்துகொண்டது முதல் மக்கள் பணத்தை மெதமுலன வீட்டுப் பணமாக நினைத்து உபயோகப் படுத்தியுள்ள முழுத்தொகை 2,22,22,81800 ரூபாவாகும். இவ்வாறு பொதுச் சொத்தை வீண்விரயம் செய்து கடற்படை சட்டதிட்டங்களை மீறி யோஷிதவின் பெயருக்கு முன்னால் பட்டத்தை சூட்டினார்கள்.

யோஷித தொடர்பில் உத்தியோக பூர்வமாக லெப்டினன் வை.கே ராஜபக்ஷ NRX 2431' என்பதாகவே பதிவாகியுள்ளது. இவரை கடற்படையில் இணைத்துக் கொண்டது முதல் சட்டவிரோதமாக வெளிநாட்டு கற்கைகளுக்கு அனுப்பப்பட்டமை மற்றும் ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவுக்கு ஈடுபடுத்தப்பட்டமைக்கு மேலதிகமாக அரசியல் நடவடிக்கைகளில் கலந்துகொள்ளல் CSN தொலைக்காட்சியில் நிறைவேற்றுச் சபையில் பதவி வகித்தல் உள்ளிட்ட பல சட்டவிரோத செயல்கள் இவர் மீது பதிவாகியுள்ளன.

இவ்விடயங்கள் தொடர்பில் பரிசோதனையொன்றை நடாத்துமாறு JVP இன் பாராளுமன்ற உறுப்பினர் நலிந்த ஜயதிஸ்ஸ முன்பு கூறியிருந்தார். விசாரணைகளை நடாத்துவதற்கு கடற்படையைச் சேர்ந்த மூன்று நபர்களைக் கொண்ட குழுவொன்றும் நியமிக்கப்பட்டு, அதன் அறிக்கையும் தற்பொழுது ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வளவு சட்டவிரோதமான செயல்களில் ஈடுபட்ட ராஜபக்ஷ புதல்வருக்கெதிராக இதுவரையிலும் இராணுவ ஒழுக்காற்று விசாரணைகளோ சிவில் நீதிமன்ற விசாரணைகளோ மேற்கொள்ளப்படவில்லை. இவ்விடயம் எதைச் சொல்ல வருகிறது என்றால், மைத்திரியின் புதல்வருக்கோ அல்லது பிறிதொரு பிரபலத்தின் புதல்வருக்கோ மேற்போந்த வகையிலான தவறுகளில் ஈடுபடமுடியும் என்பதனையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பு ரோயல் மற்றும் ஸாஹிரா கல்லூரிகளின் பழைய மாணவர்களுள் ஒருவரான ஜாவித் யூஸுப் ஒரு சட்டத்தரணி. சட்டமா அதிபர் திணைக்களத்தில் சிறிதுகாலம் பணியாற்றிய இவர் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் மூத்த ஆலோசகராகவும் சவூதி அரேபியாவுக்கான முன்னாள் தூதுவராகவும் செயற்பட்டுள்ளார். சமகால முஸ்லிம் சமூக விவகாரங்கள் மற்றும் புதிய அரசியலமைப்பு உருவாக்கம் குறித்து மீள்பார்வை அவருடன் மேற்கொண்ட நேர்காணல் இங்கு தரப்படுகின்றது.

**நேர்காணல் : ஹெட்டி ரம்ஸி**
**உதவி: மில்பர் ஸாலிஹீன்**



# கிராமிய மட்டங்களிலிருந்து முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்

**- சட்டத்தரணி ஜாவித் யூஸுப்**

**★ தற்பொழுது புதிய அரசியலமைப்பு பணிகள் எவ்வாறு இடம்பெற்றுக் கொண்டுள்ளன?**

மாதுலுவாவே சோபித தேரர் தலைமையிலான நீதியான சமூகத்திற்கான மக்கள் இயக்கத்தின் முக்கிய நோக்கங்களுள் ஒன்றாக புதிய அரசியலமைப்பு உருவாக்கம் காணப்பட்டது. பொதுவாக இந்நாட்டின் அரசியல் கலாசாரத்தை மாற்றி, நல்லாட்சியொன்றை உருவாக்குவதே அவ்வமைப்பின் குறிக்கோளாக காணப்பட்டது.

2015 ஜனவரி 8 மாற்றத்தின் பின்னர் புதியதொரு அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்ற நோக்கில் அரசாங்கம் பணியாற்றி வருகிறது. தற்பொழுது பல மாவட்டங்களில் மக்கள் கருத்துக்கள் வினவப்பட்டு வருகின்றன. பாராளுமன்றத்திற்கூடாகவே புதிய அரசியலமைப்புத் திட்டத்தை கொண்டு வரவேண்டுமென்ற நிலைப்பாட்டில் அரசாங்கம் உள்ளது.

**★ அரசியலமைப்பொன்றை உருவாக்கிக் கொள்ள பொதுவாக எவ்வளவு காலம் எடுக்கும்?**

எத்தகைய அமைப்பில் அரசியல் அமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகிறதோ அதற்கேற்றாற் போல் காலங்கள் வேறுபடலாம். மக்களிடம் கருத்து வினவப்பட்டு பின்னர் பல தடவைகள் புத்திஜீவிகளிடமும் கலந்தாலோசித்து, யோசனைகளைப் பெற்று அரசியலமைப்பொன்றை உருவாக்குவதற்கு ஒரு வருட காலம் எடுக்கலாம். அல்லது ஐந்து வருடங்களும் எடுக்கலாம்.

1994 இல் சந்திரிக்கா கொண்டு வந்த அரசியலமைப்புக்கு 1995 இல் யோசனைகள் முன்வைக்கப்பட்டு, பல தடவைகளில் கலந்தாலோசித்து, அது 1997 இல் மீள முன்வைக்கப்பட்டு, நீண்ட உரையாடலுக்குப் பின்னர் 2002 இல் கொண்டு வந்தார்கள். பின்னர் அதை கிடப்பில் போட்டு விட்டார்கள்.

**★ அரசியலமைப்பில் தமிழர்களுக்கான தீர்வுத்திட்டம் என்று வரும்போது தமிழர்கள் வடகிழக்கு இணைவை கேட்கிறார்கள். இது முஸ்லிம்களுக்கு எப்படி பாதிப்பான விடயமாக அமையும்?**

வடக்கையும் கிழக்கையும் இணைப்பதனால் முஸ்லிம்களுக்கு பாதிப்பு உள்ளது. இதனை முழு நாடும் பாதிப்பாகவே நோக்கும். வடகிழக்கு இணைவுக்கு பெரும் பாலானவர்கள் ஆதரவு வழங்குவதில்லை. ஆனால் முஸ்லிம்களைப் பொறுத்தவரை கிழக்கு மாகாணம் வேறாக இருந்தால் அரசியல் பலம் 33 வீதமாக காணப்படும். இணைந்தால் அது 16 சதவிகிதமாக குறையும். அதே போன்று பல விடயங்களில் கிழக்கிலுள்ள அரசியல் அதிகாரங்கள் இல்லாமல் போகும்.

வடக்கும் கிழக்கும் இணைத்தால் அதிகாரப் பகிர்வு என்ற கருத்துக்கு அது முரணாக அமையும். மத்தியில் இருக் கும் அதிகாரங்கள் அதிகாரப் பகிர்வுக் கூடாக மக்கள் மயப்படுத்துவதே அதன் கருத்தாகும். கிழக்கு மக்களுக்கு கொண்டு செல்லும் அதிகாரம் வட கிழக்குக்கு கொண்டு செல்லப்படும்போது அது அதிகாரப் பகிர்வுக்கு முரணான விடயமாக அமையும்.

வடக்கையும் கிழக்கையும் பிரிந்திருப்பதே சிறந்தது என்பது என்னுடைய நிலைப்பாடாகும். கிழக்கு மக்களோ வடக்கு மக்களோ எந்த மாகாணத்திலிருந்தாலும் அவர்கள் விரும்பினால் இன்னொரு மாகாணத்துடன் இணையலாம் என்கின்ற சரத்தொன்றை அரசியலமைப்பில் கொண்டு வரலாம். ஆரம்பத்திலேயே இணைத்து விடுவது ஜனநாயக விரோதமானது.

**★ புதிய அரசியலமைப்பில் சிறுபான்மையினர் தொடர்பில் எவ்வாறான விடயங்களை உள்ளடக்கலாம் என நீங்கள் கருதுகிறீர்கள்?**

அரசியலமைப்பென்பது நாட்டின் முக்கியமான சட்டம். இந்தச் சட்டத்தின் மூலமாக சகல பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண முடியாது. சகல சமூகத்தைச் சேர்ந்த பிரஜைகளும் கௌரவத்தோடும் தன்நம்பிக்கையோடும் இந்நாட்டில் வாழக்கூடிய சந்தர்ப்பங்கள் உண்டாக வேண்டும். பொலிஸ்துறை சுயாதீனமானதாக இயங்க வேண்டும். நீதவான்களுக்கு சுதந்திரமான முறையில் தீர்ப்புகளை வழங்க இடமளிக்க வேண்டும். பொதுச்சேவைகள் சுயாதீனமானதாக வேண்டும். அரசாங்க ஊழியர்களுக்கு சட்டத்தின் பிரகாரம் சுதந்திரமாக இயங்க இடமளிக்கப்பட வேண்டும். சகல மக்களுக்கும் சமமான முறையில் பாரபட்சமின்றி தீர்வுகள் வழங்கப்பட வேண்டும்.

அரசியலமைப்பு உருவாக்கப்பட்டதன் பின்பு ஒரு சமுதாயம் அது தொடர்பில் திருப்தி கொள்ளாவிட்டால் அது வெற்றிகரமான அரசியலமைப்பொன்றாக கருத முடியாது.

**★ நிறைவேற்று அதிகாரம் முழுமையாக இல்லாமல் போவது சிறுபான்மையினருக்கு பாதிப்பாகும் என்கின்ற கருத்தொன்றுள்ளது. இது பற்றி உங்களுடைய நிலைப்பாடென்ன?**

1978ம் ஆண்டுக்கு பின்னர் நிறைவேற்று அதிகாரம் கொண்டுவரப்பட்டதன் பின்னால் முஸ்லிம்களும் தமிழர்களும் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தார்கள். நிறைவேற்று அதிகாரத்தின் விளைவினாலேயே நாட்டில் யுத்தமும் இடம்பெற்றது. உண்மையில் நிறைவேற்று அதிகாரம் சிறுபான்மையினருக்கு மாத்திரமல்ல அது முழு நாட்டுக்கும் பாதிப்பாகும். பெரியளவிலான அதிகாரமொன்று தனிமனிதனின் தலையில் குவியும் போது அது அவரின் ஆரோக்கியத்திற்குகூட நல்லதல்ல. அது ஜனநாயகத்திற்கு முரணானது.

யுத்தம் முடிவுற்று ஐந்து வருட காலத்தில் நிறைவேற்று அதிகாரத்தினால் எந்தளவு பாதிப்பு ஏற்பட்டதென்றால் ஜனாதிபதி மாத்திரமல்லாமல், பிரதேச சபை ரீதியிலுள்ள உறுப்பினர்களும் ஜனாதிபதி போன்றே நடந்து கொண்டிருந்தார்கள்.

**★ தற்போதைய அரசியலமைப்பில் இனவாத பிரச்சாரங்களை தூண்டுவது சம்பந்தமாக தண்டனைகள் ஏதும் உள்ளனவா?**

அரசியலமைப்பு எப்படி இருந்தாலும் இனவாதத்தை தூண்டினால் அதற்கெதிராக நடவடிக்கை எடுப்பதற்குரிய சட்டங்கள் குற்றவியல் நீதிமன்றத்தில் (பீனல் கோட்டில்) உள்ளது. அதேபோன்று சர்வதேச அரசியல் உரிமைகளுக்கான உடன்படிக்கையிலும் இலங்கை அரசாங்கம் உலக நாடுகளுடன் இணைந்து கைச்சாத்திட்டுள்ளது. அதிலுள்ள சட்டத்தின் பிரகாரமும் நடவடிக்கை எடுக்கலாம்.

**★ நீதிமன்ற தீர்ப்பை அவமதிக்கும் ஒருவருக்குரிய தண்டணைகள் என்ன?**

நீதிமன்ற அவமதிப்புகள் பல முறைகளில் உள்ளன. நீதிமன்றத்தில் கொட்டாவி விடுவது சிலநேரம் நீதவான் அதை அவமதிப்பாகக் கருதலாம். அதே போன்று சத்தமாக இன்னொருவருடன் பேசுவது இவை சிறிய அவமதிப்புக்களாகும். ஆனால், நீதவானின் கௌரவத்திற்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் நடந்து கொள்வது பெரிய தண்டணைக்குரிய குற்றமாகும்.

**★ இனவாத பிரச்சினைகள் தலை தூக்காமல் இருப்பதற்கு புதிய அரசியலமைப்பில் எத்தகைய விடயங்கள் உள்ளடக்கப்படவேண்டும்?**

இனவாத பிரச்சாரங்களை வெளியிடுவதற்குரிய சந்தர்ப்பங்களை குறைக்க வேண்டும். அதற்கு தற்பொழுது உள்ள சட்டங்கள் பலமாக்கப்பட வேண்டும். அவ்வாறு வலுவாக்கப்படும் சட்டங்கள் ஜனநாயக விரோதமாக இருக்கக்கூடாது.

**★ முஸ்லிம் சமூகத்தின் அரசியல் குறித்து உங்களுடைய அவதானம் என்ன?**

இந்நாட்டு அரசியல் தலைவர்கள் நல்ல விடயங்களைச் செய்யும் போது அதனை நாம் ஆதரிக்க வேண்டும். அவர்கள் தவறிழைக்கும் போது விமர்சிக்க வேண்டும். 2009 தொடக்கம் 2015 வரையில் காணப்பட்ட நிலமைக்கு மக்களும் பொறுப்புச் சொல்ல வேண்டும். ஏனெனில் மக்கள் விமர்சிக்க வேண்டிய இடத்தில் விமர்சிக்கவில்லை. முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் முஸ்லிம் சமூகத்தில் ஒரு அரசியல்வாதி உருவானால் அவர் பின்னாலே சென்று வால் பிடித்து அவரை பெரியவராக்கிறார்கள். அவர் செய்யும் தவறுகளை விமர்சிக்கும் கலாச்சாரமொன்று இல்லை.

தமிழ் தேசிய கூட்டமைப்பை எடுத்துக் கொண்டால் அவர்கள் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக வேண்டி போராடுகிறார்கள். அவர்கள் அமைச்சு பதவிகளுக்குப் பின்னால் செல்வதில்லை. எமது முஸ்லிம் அரசியல்வாதிகள் அமைச்சுப் பதவிகளை பெற்றுக்கொண்டு முஸ்லிம்களுக்கு பாதிப்பு நடந்தாலும் பேச முன்வரமாட்டார்கள்.

கடந்த அரசாங்கத்தில் பொதுபலசேனாவின் நடவடிக்கைகளுக்கு இவர்கள் எவ்வித எதிர்ப்புக்களையும் காட்டவில்லை. இறுதியில் அவ்வரசாங்கத்தை விட்டு வெளியேறுவதற்குக் கூட தயங்கினார்கள். பொது வேட்பாளரை ஆதரிக்க முஸ்லிம் மக்கள் சுயமாகவே முன்வந்தார்கள்.

முஸ்லிம் அரசியல்வாதிகள் இறுதி நேரத்தில் தயங்கித் தயங்கி மைத்திரிபால வெற்றி பெறுவார் என்ற நிலையேற்பட்ட பொழுது தான் பொது எதிரணியில் இணைந்து கொண்டார்கள். சமுதாயத்திற்கு சேவையாற்றாவிட்டால் அமைச்சுப் பதவிகளை வைத்துக் கொள்வதில் எவ்வித பிரயோசனமுமில்லை.

முஸ்லிம் அரசியல்வாதிகள் அமைச்சுப் பதவிகளை பெரிதாக நினைத்து சமுதாய நலன்களில் கவனம் செலுத்துவதில்லை என்பதாக ஒரு தடவை ஆர். சம்பந்தனும் கூறியிருந்தார். அதை நான் 100 வீதம் ஏற்றுக் கொள்கிறேன். (பக்.14)




# எட்டி உதைக்கும் எட்டப்பர்கள்

ஊர்களின் கட்டுப்பாடுகள் பள்ளிவாசல்களிடம் இருந்த காலம் வரைக்கும் ஊரினது நிர்வாகம் சிறந்த முறையில் இயங்கியது. பள்ளிவாசல் களின் நிர்வாகம் ஊரை விட்டும் தூரமாகத் தொடங்கியதில் இருந்து மக்கள் பள்ளிவாசல்களில் இருந்து தூரமாகத் துவங்கிவிட்ட பரிதாப நிலைதான் சமூகத்திலே காணப்படுகிறது.

ஊர் மக்களது தேவைகளை நிவர்த்திக்கின்ற வகையில் அல்லது ஊர்மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு சொல்லுகின்ற வகையில் பள்ளிவாசல்கள் இயங்காதபோது பள்ளி நிர்வாகத்துக்குக் கீழால் ஒத்துழைத்துச் செயற்படுவதற்கு ஊர்மக்கள் இசைவதில்லை.

மறுதலையாக பள்ளிவாசல் நிர்வாகங்கள் அளவுக்கதிகமான கட்டுப்பாடுகளை தேவைக்கில்லாமல் விதித்து மக்களை கஷ்டப்படுத்துகின்ற பொழுது ஒன்றில் மக்கள் பள்ளிவாசல்களை தமது மையமாக கொள்வதில் இருந்து விலகிக் கொள்கிறார்கள். அல்லது கட்டுப்பாடுகளை மீறி தொழிற்படுவார்கள். இரண்டிலுமே மக்கள் தவறைத் தான் செய்கிறார்கள். ஆனால் இந்தத் தவறை ஊர்மக்கள் செய்ய நேரிட்டதன் பாவத்தை பள்ளிவாசல் நிர்வாகம் தான் சுமக்க வேண்டியிருக்கிறது.

கம்பஹா மாவட்ட பள்ளிவாசலொன்று இப்படியானதொரு நிலைக்கு தமது ஜமாஅத்தவர்களை உள்ளாக்கியிருக்கிறது. ஊருக்கு வெளியில் எந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வதாக இருந்தாலும் அதற்கு பள்ளிவாசல் நிர்வாகத்தின் ஆலோசனையைப் பெற வேண்டும் என பள்ளிவாசல் நிர்வாகம் கட்டளை பிறப்பித்திருக்கிறது.

உலகக் கல்வி விடயத்தில் அதனை பாடசாலை பார்த்துக் கொள்ள வேண்டும். ஆனால் மார்க்க விவகாரங்களில் ஊருக்கு வெளியே செல்வதானால் பள்ளிவாசல் நிர்வாகத்திடம் ஆலோசனை பெறப்பட வேண்டும் என அந்தப் பள்ளிவாசல் ஊர் ஜமாஅத்தினரைப் பணித்திருக்கிறது. தமக்குத் தெரிந்ததல்லாத வேறு புதிய சிந்தனைகள் ஊரின் எல்லைக்குள் வந்துவிடக் கூடாது என்பதுதான் இந்த ஆணை பிறப்பிக்கப்படக் காரணமாக இருந்திருக்கிறது. ஏனெனில் தனியாகச் செல்வதானால் ஆட்சேபனையில்லை. குழுக்களாக செல்வதானால் பள்ளிவாசலின் ஆலோசனை பெறப்பட வேண்டும் என இந்தப் பள்ளிவாசல் வரையறுத்திருக்கிறது.

காதியானிகள், ஷீஆக்கள் பிரச்சினைகளில் இருந்து மக்களைப் பாதுகாக்க இந்த முயற்சி எடுக்கப்பட்டதாக பள்ளிவாசல் நிர்வாகம் நினைத்துக் கொண்டாலும் தனிநபர்களாகச் செல்வதற்கு ஆட்சேபனையில்லை என்கின்ற விடயம், உலகக் கல்விக்காக வெளியேறிச் செல்லலாம் என்கின்ற ஷரத்துகள், மக்களைப் பாதுகாப்பதற்காக எடுத்த முடிவாக இதனை நியாயப்படுத்த முடியாமல் செய்கிறது.

பெரும்பாலும் மாணவர்கள் தான் தலைமைத்துவப் பயிற்சிகள் என்றும் வழிகாட்டல் பயிற்சிகள் என்றும் ஊருக்கு வெளியில் செல்கிறார்கள். அனாதைச் சிறுவர்கள் தமக்கு உதவி வழங்குபவர்கள் நடத்துகின்ற நிகழ்ச்சிகளுக்காக குழுக்களாக ஊருக்கு வெளியே செல்கிறார்கள். இவர்களெல்லாம் பள்ளிவாசல் நிர்வாகத்தின் ஆலோசனைப்படியே வெளியே செல்ல வேண்டும் என்று நிர்ப்பந்தித்தால் இவர்கள் பொய்யைச் சொல்லிவிட்டு வெளியே சென்றுவிடுவார்கள். இதற்கும் பள்ளிவாசல் நிர்வாகம் தான் பொறுப்புச் சொல்ல வேண்டும்.

பள்ளிவாசலின் பணி என்ன, சமூகத்தை வழிநடத்துவது எப்படி என்ற தெளிவில்லாமல் பள்ளிவாசல் நிர்வாகத்தினை செய்ய முற்படும் பொழுது இவ்வாறான இக்கட்டுகளில் ஊர்மக்கள் மாட்டிக் கொள்ள வேண்டியேற்படுகிறது. இதற்கும் மேலாக இஸ்லாத்தின் சிந்தனை என்ன, வழிகெட்ட சிந்தனைகள் என்ன, இஸ்லாத்துக்கு எதிரான சிந்தனை என்ன என்பதை புரிந்து கொள்ளத் தெரியாதவர்கள் பள்ளிவாசல் ஊடாக ஊரை ஆள நினைக்கும் போது தமக்குப் பழக்கமான குட்டையிலேயே ஊர்மக்களும் ஊறவேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர். இது ஊர்மக்களது சிந்திக்கும் மனப்பாங்குக்கு தடைபோடும் முட்டுக்கட்டையாகும். அத்தோடு இது அல்லாஹ்வுடைய கட்டளைக்கும் ரஸூலுல்லாஹ்வின் வாழ்க்கை முறைக்கும் மாறானதாகும்.

நம்மில் குழந்தை வளர்ப்பவர்களும் இப்படித்தான் செயற்படுகிறார்கள். அங்கே ஓடி இங்கே ஏறி அது துள்ளி வளர்வதை அருகே இருந்து கவனித்து வழிகாட்டுவதற்கு சோம்பல்படுகின்ற பெற்றோர், அதனை கட்டிப் போட்டது போல தமக்கு அருகே வைத்துக் கொள்ள முயற்சிப்பதான புத்திசாலித்தனம்தான் இது.

சமூகத்தை நிர்வகிப்பது எப்படி, இஸ்லாமிய விழுமியங்களை, சிந்தனைகளை மக்களிடம் கொண்டுவருவது எப்படி என்பதனை நம்பர்களுக்குள் அடக்க முடியாமல் சமூகத்தை கட்டுப்பாட்டால் மட்டும் வளர்க்க முயல்வது அடக்கு முறையின் வெளிப்பாடு. இவற்றைத் தாண்டி, இல்லாத சட்டத்தினாலும் அளவுக்கு மிஞ்சிய கட்டுப்பாடுகளினாலும் மக்களை ஆள்வதை விட அவர்களுக்கு சிந்தனைச் சுதந்திரமும் செயல் சுதந்திரமும் வழங்குவதனூடாக புதிய மாற்றங்களை உருவாக்குவதற்கு தலைமைகள் முயல வேண்டும்.

உலகத்தின் எல்லை விரிந்தது. இஸ்லாத்தின் பரப்பு விசாலமானது. இது எதனையும் புரிந்து கொள்ளாமல் நிர்வாகம் செய்ய நினைக்கின்ற எட்டப்பர்களின் கொட்டங்களுக்கு முடிவு கட்ட சமூகம் திரண்டெழ வேண்டும். எமக்குள்ளே நாங்கள் வீறு கொண்டழுவதற்கு எந்தப் பயமுமிலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரியாவில் 100 ரஷ்ய துருப்பினர் மரணம்



இத்லிப், ஹமா, லதாகியா போன்ற மாகாணங்களிலுள்ள கிராமங்களில் ரஷ்யத் துருப்பினர் அரச படைகளோடு இணைந்து கிளர்ச்சியாளர்களைத் தாக்கி வருகின்றனர். லத்தாகியா புறநகர்ப் பகுதிகளில் கிளர்ச்சியாளர்கள் மேற்கொண்ட தாக்குதல்களில் இதுவரை 109 ரஷ்யப் படையினர் கொல்லப்பட்டுள்ளனர். "டமஸ்கஸ், அல் ஹஸாக்கா, ஹூம்ஸ் ஆகிய நகரங்களில் ரஷ்ய விமானங்கள் தாக்குதல் நடத்தி வருகின்றன. துருக்கின் எல்லைப் புறமான பகுதிகளிலும் ரஷ்யா தாக்குதல் நடத்தி வருகின்றது. ரஷ்யாவின் இராணுவ ஹெலிகொப்டர் ஒன்றும் கிளர்ச்சியாளர்களால் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளது.

20 செப்டம்பர் 2015 மொஸ்கோ சிரியாவின் மீது கட்டுப்பாடட்ட இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்தது முதல் இதுவரை 109 ரஷ்ய துருப்பினர் கொல்லப்பட்டுள்ளதாக சிரிய அரசாங்கத்திற்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. வான்வழியாக மட்டுமென்றி தரைவழியாகவும் ரஷ்ய துருப்பினர் சிரியாவின் அரசாங்கத்திற்காதரவாக போராடிவருகின்றனர்.

# பிரஜைகள் சமத்துவ சட்டத்தை இஸ்ரேலிய பாராளுமன்றம் நிராகரிப்பு



இஸ்ரேலின் அனைத்து குடிமக்களையும் இஸ்ரேலிய அரசாங்கம் சமத்துவமாக நடத்த வேண்டும் எனக் கோரும் சட்ட மூலமொன்று இஸ்ரேலிய பாராளுமன்றத்தினால் (நெசட்) நிராகரிக்கப்பட்டுள்ளது. பாராளுமன்ற உறுப்பினர் ஜமால் சஹல்கா இப்பிரேரணையை கொண்டு வந்தார். மனித கண்ணியம், மனித சுதந்திரம் என்பவை தொடர்பான இஸ்ரேலின் அடிப்படை சட்டத்தில் யூதர்களையும் அறபுகளையும் சமமாக நடத்தக் கோரும் இச்சட்ட மூலத்தை இஸ்ரேல் நிராகரித்துள்ளதன் மூலம் அது ஒரு இனவாத நாடு என்பதை நிரூபித்துள்ளது.

லிக்யூட் கட்சியின் பெரும்பான்மை உறுப்பினர்களும் ஹெரடி, குலானு கட்சிகளின் கணிசமான உறுப்பினர்களும் இப்பிரேரனைக்கெதிராக வாக்களித்தனர். Yair Lapid என்பவர் தலைமை வகிக்கும் யெஷ் அத்தீட் கட்சியும் எதிராக வாக்களித்துள்ளது.

பிரேரணையை முன்வைத்த ஜமால் கருத்து வெளியிட்ட போது, நவீன நாடுகளில் இயற்றப்படும் அனைத்து அரசியல் சாசனங்களும் அந்நாடுகளிலுள்ள அனைத்து பிரஜைகளும் சமமானவர்கள் என்ற சமத்துவ அடிப்படையை உள்ளடக்குகின்றது. ஜனநாயக மற்ற நாடுகள் கூட இந்த அடிப்படையைப் பின்பற்றுகின்றன. நவீன அரசியல் முறையில் இது ஒரு அடிப்படையாகும். சமத்துவமில்லாத ஜனநாயகம் சாத்தியமற்றது அர்த்தமற்றது.

சமத்துமென்பது தன்னளவில் ஓர் அடிப்படையாகும். அது வேறெந்த அடிப்படைகளையும் சார்ந்தது அல்ல. மனித உரிமைகள் அதிலிருந்தே மேலெழுகின்றது. ஒரு நாட்டின் அடிப்படை சட்டத்தில் சமத்துவம் இல்லையெனில் அது நீதித்துறையை மிக மோசமாக பாதிக்கும். அடிப்படை சட்டங்களிலிருந்து சமத்துவம் எவ்வாறு இல்லாமல் போகும் எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

அடிப்படை சட்டத்தில் சமத்துவத்தைத் தெளிவாக உள்ளடக்க வேண்டும். சமத்துவத்துவத்துக்கு எதிராக வாக்களித்த ஒவ்வொருவரும் ஜனநாயகத்திற்கெதிராக வாக்களிக்கின்றனர். இனவாதத்தையும் பாகுபாட்டையும் வளர்க்கின்றனர். முழு உலகும் அடிப்படை சட்டங்களில் சமத்துவத்தை பின்பற்றுகின்றது. இஸ்ரேல் மாத்திரம் இதற்கு விதிவிலக்காகவுள்ளது. இதன் மூலம் இஸ்ரேலின் இயல்பை நாம் புரிந்துகொள்ளலாம் எனவும் ஜமால் சஹல்கா வலியுறுத்தினார்.

# சர்வதேசப் பார்வை

# போர் நிறுத்தமில்லாத பேச்சுவார்த்தை அபத்தமானது

## அர்தூகான் தெரிவிப்பு



சிரியாவில் பொதுமக்களுக்கெதிராக நடைபெறும் ஈரான், ரஷ்யா, சிரியா ஆகியவற்றின் யுத்தம் நிறுத்தப் படாமல் சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடாத் துவது அபத்தமானது என துருக்கிய ஜனாதிபதி ரஜப் தையிப் அர்தூகான் தெரிவித்துள்ளார்.

தற்போது ஐ.நா சமாதான வரைபட திட்டத்தின் படி சிரியாவின் நெரு க்கடியை முடிவுக்கு கொண்டு வரும் வகையில் பேச்சுவார்த்தைகள் நடைபெறுகின்றன. ஆனால், தேசிய எதிர்க்கட்சிகளின் கூட்டமைப்பு இப்பேச்சுவார்த்தைக்கு அழைக்கப்படவில்லை. ரஷ்யாவும் ஏனைய நாடுகளும் கிளர்ச்சியாளர்களை அடக்கி வருகின்றன. பிரச்சினையின் முக்கிய பங்காளர்களான கிளர்ச்சித் தலைவர்களை உள்ளடக்காத பேச்சுவார்தை அர்த்தமற்றதென அவர் தெரிவித்தார்.

வெள்ளக்கிழமை தொழுகையைத் தொடர்ந்து நடைபெற்ற செய்தியாளர்களுக்கான சந்திப்பின்போதே அர்தூகான் இவ்வாறு கருத்து வெளியிட்டார். இதே வேளை 24ஆம் திகதி சவூதியின் தலைநகர் றியாதில் சந்தித்த எதிர்க்கட்சி யின் பேராளர்கள், தற்போது ஜெனீவாவில் நடைபெறும் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்வதில்லை என தீர்மானித்துள்ளனர். வான்வெளி தாக்குதல்களை சிரிய அரசாங்கம் நிறுத்தும்வரை இதுவே தமது தீர்மானம் என அவர்கள் அறிவித்துள்ளனர்.

சிரிய எதிர்க்கட்சியின் சமாதான பேச்சுவார்த்தைக் குழு (Syrian Opposition High Negotiations Committee) இத்தீர்மானத்தை வெளியிட்டுள்ளது. அதன் தலைவர் றியாத் ஹிஜாப் அல் அறேபியா தொலைக்காட்சிக்கு வழங்கிய நேர்காணலில், ''பேச்சுவார்த்தையில் தாம் கலந்துகொள்வதா இல்லையா என்பது குறித்தான தீர்மானம் அரசாங்கத்தின் அடுத்த கட்ட நடவடிக்கைகளைப் பொறுத்ததே'' என்று தெரிவித்துள்ளார்.

# பலஸ்தீனர்களுக்கு தொடர்ந்தும் ஆதரவளிப்போம் - ஆபிரிக்க தேசிய காங்ரஸ்

பலஸ்தீனர்களின் சுதந்திரத்திற்காக தென் ஆபிரிக்காவின் ஆளும் கட்சியான ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தொடந்தும் ஆதரவளிக்கும் என அதன் பேச்சாளர் தெரிவித்துள்ளார். பலஸ்தீனர்களின் உரிமைகளுக்கு ஆதரவளிக்கும் சர்வதேச தினத்தன்று தென்ஆபிரிக்காவின் ஜொஹான்ஸ்பேக் நகரில் நடைபெற்ற நிகழ்வில் ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் பேச்சாளர் குசலா சங்கோணி மேலும் கருத்து வெளியிடுகையில், ''நாம் எமது முழு ஆதரவையும் பலஸ்தீன் மக்களுக்கு வழங்குகின்றோம். உலகில் முன்னேற்றகரமான மக்களாக அவர்களை மாற்றுவதற்கும் பலஸ்தீனர்களின் சுதந்திரம் அங்கீகரிக்கப்படுவதற்கும் எம்மை நாம் அர்ப்பணிக்கின்றோம். உலகில் ஒடுக்கப்பட்ட மக்களின் பக்கம் நாம் உரிமைக்காக குரல் கொடுத்து நிற்போம், உலகில் எங்கேனும் மனித உரிமைகள் மீறப்பட்டால் அதனை மிகுந்த அக்கறையுடன் தட்டிக் கேட்போம் எனவும் குறிப்பிட்டார்.

ஆபிரிக்க காங்கிரஸின் சர்வதேச உறவுகள் குழுத் தலைவர்; நொமன்டு அங்கு கருத்து வெளியிடுகையில், 'நாம் அங்கு பலஸ்தீன அரசுக்கும் பலஸ்தீன் மக்களுக்கும் வழங்கும் ஆதரவை தொடர்வோம். தென்ஆபிரிக்காவிற்கும் பலஸ்தீனத்திற்குமான உறவு மிகவும் பழமையானது. ஆபிரிக்காவில் நிறவெறி தாண்டவமாடிய காலத்திற்கு சமமானது.''

நாம் நிற வெறிக்கெதிராக போராடியவர்கள் என்ற வகையில் எப்போதும் பலஸ்தீனர்களின் உரிமைக்காக போராடுவோம். நாம் இப்போது எமது சுதந்தி ரத்தை உணர்கின்றோம். எமக்காக குரல் கொடுத்த, ஆதரவளித்த பலஸ்தீன் மக்களை நாம் மறந்து விடோம்.

தென்ஆபிரிக்காவுக்கான பலஸ்தீன தூதர் ஹாஸிம் தீஜானி அரபு பிரஜைகளை இஸ்ரேல் அடக்கி வருவது குறித்து சர்வதேச சமூகம் இஸ்ரேல் மீது அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டும் என கூறினார்.

# ஐரோப்பாவில் 10000 அறபு சிறுவர்கள் காணாமல் போயுள்ளனர்



ஐரோப்பாவிற்கு இடம்பெயர்ந்த அறபு நாடுகளைச் சேர்ந்த 10000 சிறுவர்கள் காணாமல் போயுள்ளார்கள் என ஐரோப்பிய பொலிஸ் முகவர் நிறுவனம் (Europol) தெரிவித்துள்ளது. ஐரோப்பிய நாடுகளுக்கு அகதிகளாக வெளியேறிச் சென்ற குடும்பங்களைச் சேர்ந்த சிறுவர்களே இவ்வாறு காணாமல் போயுள்ளனர். இவர்கள் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு அல்லது அடிமைத் தொழிலுக்கு உட்படுத்தப்பட்டிருக்கலாமென ஐரோப்பிய பொலிஸ் அச்சம் வெளியிட்டுள்ளது.

பிரிட்டனிலிருந்து வெளிவரும் 'ஒப்சேவர்' பத்திரிகை இது குறித்த செய்திகளை வெளியிட்டுள்ளது. ஐரோப்பிய நாடுகளின் அரச நிறுவனங்களில் பதிவுசெய்யப்பட்ட பின்னரே இவர்கள் அகதிகள் வலயமைப்பிலிருந்து தூரப்படுத்தப்பட்டுள்ளனர். இவர்களில் 5000ம் பேர் இத்தாலியில் மட்டும் காணாமல் போயுள்ளனர். அவர்களில் எத்தனை சிறுவர்கள் தமது பெற்றோரிடம் திரும்பியுள்ளனர் என்ற தகவல் இதுவரை பெறப்படவில்லை.

ஐரோப்பாவில் ஆள் கடத்தும் குழுக்களிடம் இவர்கள் சிக்கியிருக்கலாமென ஒப்சேவர் பத்திரிகை தெரிவிக்கின்றது. ஜேர்மனியிலும் ஹங்கேரியிலும் சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டுள்ள அகதிகளின் சிறுவர்களும் இவ்வாறு காணாமல் போயுள்ளனர். பெரும்பாலானவர்கள் சிரியாவிலிருந்து ஐரோப்பாவிற்குள் வந்தவர்கள்.

# துருக்கியின் வான்வெளியை மதித்து நடக்குமாறு ரஷ்யாவிற்கு அமெரிக்கா வேண்டுகோள்

துருக்கியின் வான் எல்லைப் பரப்பில் அத்துமீறி நுழைய வேண்டாம் என்றும் துருக்கியின் வான் எல்லை உரிமையை மதித்து நடக்குமாறும் அமெரிக்கா ரஷ்யாவைக் கோரியுள்ளது. ரஷ்ய போர் விமானங்கள் மீளவும் துருக்கியின் வான் எல்லைப் பரப்பில் ஊடுருவி வருவதாக துருக்கிய வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளதை அடுத்து அமெரிக்கா இக்கோரிக்கையை விடுத்துள்ளது.

ஏற்கனவே, ரஷ்ய விமானங்கள் சர்வதேச சட்டத்தை மீறி துருக்கியின் வான் எல்லைப் பரப்பில் ஊடுருவியதால் ஒரு விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகள் பாதிக்கப்பட்டன. தற்போது ரஷ்யா மீண்டும் துருக்கியைச் சீண்டத் தொடங்கியுள்ளது. துருக்கியுடன் இணைந்து பணியாற்ற நேட்டோ தயாராகவுள்ள நிலையில், அமெரிக்கா இந்த அறிவித்தலை விடுத்துள்ளது.

பிராந்தியத்தில் மீண்டும் பதற்ற நிலையை உருவாக்கும் வகையிலையே ரஷ்யாவின் அத்துமீறல் அமைந்துள்ளதாக அமெரிக்கா தெரிவிக்கின்றது. இதேவேளை ரஷ்யாவின் ஆத்திரமூட்டும் இச்செயலை துருக்கி தொடர்ந்து பொறுத்துக் கொள்ளாது என அந்நாட்டின் ஜனாதிபதி அர்துக்கான் தெரிவித்துள்ளார். மேலும் சுட்டு வீழ்த்தப்பட்ட விமானத்தின் நஷ்ட ஈட்டை துருக்கி வழங்க மாட்டது எனவும் அர்துக்கான் தெரிவித்துள்ளார்.



கடந்த 29ஆம் திகதி ஜனவரி மாதம் ரஷ்யாவின் SU34 எனப்படும் போர் விமானம் துருக்கியின் வான் எல்லையில் ஊடுருவியதை அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சு அறித்திருந்தது. இது குறித்து துருக்கியின் விமானப்படை ரஷ்ய அதிகாரிகளுக்கு எச்சரிக்கை எழுப்பியிருந்தது. ஆனால், ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு இதனை மறுத்துள்ளது. ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுடன் பேச்சுவார்த்தை நடத்த துருக்கி பல முயற்சிகளை மேற்கொண்ட போதும் இதுவரை எந்த பதிலையும் ரஷ்யா வழங்கவில்லை என துருக்கி தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எகிப்து: புரட்சியின் ஐந்தாண்டுகள்





யுவோன் ரிட்லி

எகிப்தில் அரபு வசந்தம் நிகழ்ந்து ஐந்து ஆண்டுகள் நிறைவடைகின்றன. தூனீசியாவில் தொடங்கிய அரபு வசந்தம் எகிப்தினூடாக லிபியா யெமன், சிரியா என்பவற்றிக்குப் பரவியது. மக்கள் புரட்சி நடைபெற்ற எல்லா நாடுகளிலும் அதிகாரத்திலிருந்தோர் தூக்கி வீசப்பட்டனர்.

எகிப்தில் 30 ஆண்டுகளாக இரும்புச் சர்வதிகாரியாக நீடித்த ஹுஸ்னி முபாரக் பதவியிலிருந்து அகற்றப்பட்டார். லிபியாவில் கடாபி, யெமனில் அலி அப்துல்லாஹ் ஸாலிஹ், தூனீசியாவில் பின் அலி என பல தசாப்தங்களாக அதிகாரம் செலுத்துவோர் ஆட்சிக் கட்டிலிலிருந்து இறக்கப்பட்டனர்.

இவர்கள் அனைவரும்போல் மேற்கின் விசுவாசிகள். அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளின் நெருங்கிய நண்பர்கள். இவர்களுக்கெதிரான மக்கள் எழுச்சியைக் கண்டு மேற்குலகம் அதிர்ந்தது. தமது நண்பர்களாக இருக்கும் இவர்களை இழப்பதில் உள்ள வலியை அவர்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

எவ்வாறாயினும் மக்கள் எழுச்சிக்கு முன்னால் ஆட்சியாளர்களால் ஈடுகொடுக்க முடியவில்லை என்பதை உணர்ந்த மேற்குலகு, நமது நண்பர்களைப் பதவி விலகுமாறு பணித்தனர். எகிப்தில் பதவியிலிருக்கும் வரை முபாரக் இஸ்ரேலுக்குக்கும் அமெரிக்காவுக்கும் நண்பராக இருந்தவர். அவர் பதவி கவிழ்க்கப்பட்டபோது ஒபாமாவினாலும் டேவிட் கெமரூனினாலும் சர்வதிகாரி என்று பேசப்பட்டவர்.

ஜனநாயகத்தில் இரட்டை வேஷம் போடும் மேற்குலகு, அரபு நாடுகளில் ஒருபோதும் அதனை அங்கீகரித்ததில்லை. இதற்கு எகிப்து தெட்டத் தெளிவான உதாரணமாகும். 2011 ஜனவரி 25 இல் அங்கு நடந்த மக்கள் புரட்சியின் மூலம் முபாரக் பதவி கவிழ்க்கப்பட்டார். தொடர்ந்து நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் கலாநிதி முர்ஸி வெற்றியீட்டியதோடு சகோதரத்துவ அமைப்பின் உறுப்பினர்கள் பாராளுமன்றத்தின் பெரும்பான்மை யைக் கைபற்றினர். ஊழல் மோசடி அற்ற, வெளிப்படையான, வன்முறைகள் இல்லாத தேர்தலொன்றின் மூலமே இந்த மாற்றம் அங்கு நிகழ்ந்தது.

இந்த ஜனநாயக மாற்றத்தை அமெரிக்காவும் அதன் பிற சகாக்களும் ஏற்கவில்லை. அல்லது ஜீரணிக்கவில்லை 2013 நடுப்பகுதியில் முர்ஸிக்கு எதிராக திட்டமிட்டவகையில் இராணுவத்தை களமிறக்கி ஸீஸியைத் தலைவராக்கினர்.

இராணுவ தளபதியான ஸீஸி தானே எகிப்தின் ஜனாதிபதியென்று தற்பிரகடனம் செய்தார். வழக்கம் போல் கண்துடைப்புக்காக நடத்தப்படும் தேர்தலில் அறுதிச் சிறுபான்மை வாக்கையே அவரால் பெற முடிந்தது. 80 வீதமான மக்கள் வாக்குச் சாவடிக்கே செல்லவில்லை. மக்கள் ஆதரவற்ற இராணுவத் தளபதியை மேற்குலகம் மெல்ல மெல்ல எகிப்தின் தலைவராக ஏற்றுக் கொண்டது. அவர்களது திட்டமும் அதுவாகவே இருந்தது.

ஒரு காலத்தில் பிரிட்டனின் வெளிவுறவுக் கொள்கையை மையமாக இருந்தது மனித உரிமை விவகாரங்களே. ஆனால் இன்று அது மங்கி விட்டது. தொழிக்கட்சித் தலைவர் ஜெறமி கோபின் குறிப்பிடுவது போன்று, ஜனநாயக உரிமைகள், மனித உரிமைகளுக்கான பிரிட்டனின் அக்கறை முற்றாகவே தூர்ந்து விட்டது. அதனால் எகிப்திய ஆட்சியாளர்கள் இன்று நடாத்தி வரும் காட்டு தர்பாரில் மனித உரிமைகள் வேட்டையாடப்படுவது குறித்து பிரிட்டன் மௌனம் காக்கின்றது.

இவ்விடயத்தில் அமெரிக்காவின் நிலைப்பாட்டை விளக்க வேண்டியதில்லை. இஸ்ரேல் கூட எகிப்தின் அதிகாரபீடத்தோடு ராஜதந்திர உறவுகளைப் பலப்படுத்தியுள்ளது. இத்தனைக்கும் மத்திய கிழக்கின் ஒரேயொரு ஜனநாயக நாடு அதுதான் என்று வொஷிங்டன் கூறுகின்றது.

எகிப்தில் நடந்த அரபு வசந்தம் முழுவதுமாக தோல்வி கண்டு விட்டதாக எல்லோரையும் ஊடகங்கள் நம்பச் செய்கின்றன. ஆனால், உண்மை அதுவல்ல. ஸீஸி எகிப்தை தொடந்தும் ஆள்வதிலுள்ள சங்கடங்களை உணரத் தொடங்கியுள்ளார். ஒக்டோபர் 31 இல் ரஷ்ய பயணிகள் விமானமொன்று எகிப்தின் செங்கடலில் அமைந்துள்ள ஷறம் அஷ்ஷெய்க் உல்லாச விடுதியிலிருந்து புறப்பட்டபோது விபத்துக்குள்ளாகியது. அதில் பயணித்த 224 பேர் உயிரிழந்தனர். இதற்கு தாங்களே பொறுப்பு என்று தாயிஷ் அமைப்பு உரிமைகோரியது.

இச்சம்பவத்தை அடுத்து செங்கடல் உல்லாச ஹோட்டல்களுக்கான விமான சேவைகளை அனேக நாடுகள் நிறுத்திக் கொண்டன. எகிப்தின் உல்லாசக் கைத்தொழிலுக்கு இது பெரும் அடியாகும். மட்டுமன்றி எகிப்தின் பல்வேறு உல்லாச விடுதிகள் தொடந்தும் பயங்கரவாதிகளின் தாக்கு தலுக்கு உள்ளாகி வருகின்றன. ஹுர்தாதா, கிசா போன்ற பகுதிகளிலுள்ள ஹோட்டல்களில் இவ்வாறான தொடர் குண்டுவெடிப்புக்கள் இடம்பெற்றுள்ளன. இதற்கும் தாயிஷ் எனப்படும் ஐ.சிஸ் பயங்கரவாதிகளே உரிமைகோரியுள்ளனர்.

இப்போது ஷறம் அஷ்ஷெய்க் பிராந்தியம் வெறுச்சோடிக் கிடக்கின்றது. பிரிட்டனின் உல்லாசத் துறை அமைச்சும் பொதுநலவாய அலுவலகமும் எகிப்துக்கு உல்லாசப் பயணம் செல்வது குறித்து மேற்கு நாட்டவர்களை எச்சரித்துள்ளன. இது ஸீஸிக்கு பெரும் தலையிடியாக மாறியுள்ளது. எகிப்தின் அந்நியச் செலாவணியில் உல்லாசக் கைத்தொழில் முன்னணியில் உள்ளது. முபாரக்கினாலும் பின்னர் வந்த ஸீஸியின் இராணுவ கும்பல்களாலும் கொள்ளை அடிக்கப்பட்டுள்ள எகிப்தின் சொத்துக்கள் பற்றிய மக்கள் அக்கறை வெளிப்பட தொடங்கியுள்ள நேரத்தில் உல்லாசக் கைத் தொழில் துறை பின்னடைவது ஸீஸியின் அரசுக்கு பேரிடியாகும்.

இதேவேளை எகிப்தின் எல்லைகளிலும் எல்லைப் புறமாக உள்ள சினாய் போன்ற பகுதிகளிலும் தாயிஷ் பயங்கரவாதிகள் ஊடுருவியிருப்பது ஸீஸி எதிர்கொண்டுள்ள மற்றொரு சவாலாகும். ஸீஸியின் அரசாங்கம் போன்றே இஸ்லாமிய அரசு அமைப்பும் மிக குரூரமானது. ஸீஸி போன்றே சித்திரவதை செய்தல், துப்பாக்கியால் சுட்டுக் கொல்லல், சிறையில் அடைத்தல் போன்ற அதே குற்றங்களையே இந்த அமைப்பும் மேற்கொண்டு வருகின்றது. ஸீஸியின் கொடூரமான அடக்குமுறை குறுத்து ஜனநாயகத்தின் காவலர்கள் எதுவும் பேசுவதில்லை. ஆனால், இன்று ஐசிஸின் நடவடிக்கைகள் மேற்கு ஊடகங்களில் பெருமளவு விவாதிக்கப்படுகின்றது.

எகிப்தில் மக்கள் புரட்சியென்பது இன்னும் ஓயவில்லை. புரட்சியின் 5 ஆம் ஆண்டு பூர்த்தியை நினைவுகூர்வதற்கு இலட்சக்கணக்கான மக்கள் வீதியில் திரண்டனர். அதனை கண்ணுற்ற ஸீஸிக்கு அச்சம் திரண்டது. மக்கள் வீதிக்கு இறங்குவதற்கு முன்பாகவே 544 பேரை எகிப்திய இராணுவம் கைதுசெய்திருந்தது. எகிப்தில் மீண்டுமொரு அரபு வசந்தம் எந்தவேளையிலும் எழலாம் என்பதற்கான சமிக்ஞையாகவே தற்போதைய நிகழ்வுகள் பார்க்கப்படுகின்றன.

தொடந்தும் ஸீஸியினால் எகிப்தை கொண்டு செல்ல முடியாது என்பதை மக்கள் எழுச்சி மீளவும் அவருக்கு நினைவுபடுத்தியுள்ளது. முர்ஸியை ஸீஸி பதவி கவிழ்த்தபோது ஐரோப்பாவும் வொஷிங்டனும் மகிழ்ச்சிப் பிரகாதத்தில் ஆழ்ந்தனர். மேற்கு அங்கீகரிக்கும் வரையே ஜனநாயகம் மத்திய கிழக்கில் சகிக்கப்படும். 2006 இல் பலஸ்தீன் அதிகார சபைக்கு நடந்த தேர்தலில் ஹமாஸ் அமோக வெற்றியீட்டியது. ஹமாஸின் இந்த ஜனநாயக வெற்றியை மேற்குலகம் ஜீரணிக்கவில்லை. காஸா மீது இஸ்ரேல் பொருளாதார தடை விதித்ததை மேற்குநாடுகள் மறைமுகமாக ஊக்குவித்தன. பிராந்தியத்திலுள்ள பொம்மை அரசுகளும் இது குறித்து மௌனம் காத்தன.

காஸா மீது பொருளாதாரத் தடைவிதிக்கப் பட்டு இவ்வருடத்துடன் சுமார் 10 ஆண்டுகள் நிறைவடைகின்றன. இப்பத்தாண்டு கால இடை வெளியில் மூன்று முறை இஸ்ரேல் காஸா மீது குரூரமான இராணுவத் தாக்குதல்களை நடாத்தியுள்ளது. பசியினாலும் பட்டியினியினாலும் ஜீவ மரணப் போரில் தள்ளப்பட்டுள்ள காஸா மக்கள் மீது இஸ்ரேலின் கனதியான ஆயுதங்கள் திருப்பப்பட்டதனால் பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல் லப்பட்டனர். மேற்கில் மனித உரிமை ஆர்வலர்கள் இது குறித்து எதுவும் பேசுவதில்லை.

கடந்த ஆண்டில் எகிப்தின் பாதுகாப்பு தலைமை அலுவலகத்திற்கு சமீபத்தில் நடத்தப்பட்ட தாக்குதல்களில் ஒரு நீதிபதி கொல்லப்பட்டமை பெரும் உலகச் செய்தியாக வலம் வந்தது. ஒரு வகையில் அது முக்கியமான செய்தியே. ஹிஸாம் பறக்கத்தை கொன்று 29 பேரைக் காயப்படுத்திய இந்த தாக்குதல் ஸீஸியின் அரசாங்கத்தின் பாது காப்புத் துறைக்கு விடுக்கப்பட்ட பெரும் அச்சுறுத்தலாகும்.

எகிப்தின் உள்ளே செயற்படும் அன்சார் பைதுல் முகத்திஸ் எனப்படும் இராணுவ இயக்கம் ஐ.சிஸ் பயங்கரவாதிகளுக்கு ஆதரவளித்து வருகின்றது. இவ்வியக்கம் ஸீஸியின் இராணுவத் துறைக்கு பெரும் சவாலாக மாறியுள்ள நிலையிலேயே ஐசிஸ் பயங்கரவாதிகள் எகிப்தில் ஊடுருவியுள்ளனர். தற்போது எகிப்தின் சினாய் மாகாணம் இவர்களால் கட்டுப்படுத்தப்படுகின்றது.

இன்று எகிப்தில் 40 ஆயிரம் அரசியல் கைதிகள் சிறையிடப்பட்டுள்ளனர். அவர்களில் 20 ஆயிரம் பேர் இஸ்லாமிய சகோதரத்துவ அமைப்பைச் சேர்ந்தவர்கள். ஸீஸி அபூபக்கர் பக்தாதியின் ஐ.சிஸ்

(பக்.14)

# சிரியா: சமாதானத்திற்கான பாதை வரைபடம்




சிரியாவில் பஸார் அல் அஸர் எனப்படும் ஆட்சியாளருக்கு எதிரான மக்கள் எழுச்சி ஆரம்பமாகி நான்கு ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில், ஐ.நா பாதுகாப்புச் சபை நிறைவேற்றியுள்ள 2254 ஆம் தீர்மானம் சிரியாவின் எதிர்காலம் குறித்த நம்பிக்கையை தருவதாக அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

நான்கு ஆண்டுகளாக கள்ள மௌனம் காத்த ஐ.நா மூன்றரை இலட்சம் மக்கள் கொல்லப்படும் வரை அமைதியாய் இருந்ததேன்? 42 லட்சம் மக்கள் அகதிகளாய் வெளியேறி, 76 லட்சம் மக்கள் உள்நாட்டில் அகதிகளாக்கப்பட்ட பின்னரே ஐ.நா கண் திறந்துள்ளது.

முஸ்லிம் நாடுகளில் உடனடியாக தலையீடு செய்வதில் ஐ.நா எப்போதும் இவ்வாறான மெத்தனப் போக்கையே கையாண்டு வருகின்றது. ஒரு நாடு பெருமளவு அழிக்கப்பட்ட பின்னரே, காலம் தாமதித்து ஐ.நா தலையீடு செய்வது அதன் நம்பகத் தன்மையை கேள்விக்குள்ளாக்குகின்றது.

தற்போது பாதுகாப்புச் சபை நிறைவேற்றி யுள்ள தீர்மானம் முழுமையாக அமுலுக்கு வர இன்னும் ஒன்றரை ஆண்டுகள் செல்லும். அந்த இடைவெளியிலேயே இன்னும் 25 லட்சம் மக்கள் அகதிகளாக்கப்படலாம்; அரை லட்சம் மக்கள் கொல்லப்படலாம். இரத்தம் சிந்தப்படும் சிரியாவில் ஐ.நாவின் தலையீடு இன்னுமே வினைத்திறன் உள்ள வகையில் அமையவில்லை என்ற குற்றச்சாட்டு இங்குதான் நியாயமாகப் பார்க்கப்பட வேண்டும்.

பாதுகாப்புச் சபை 2254 தீர்மானம் சிரியாவுக் கான சமாதான வரைபடத்தை முன்வைக்கின்றது. ஒரு மாதத்திற்குள் போர் நிறுத்தத்தையும் ஆறு மாதத்திற்குள் புதிய நல்லிணக்க அரசாங்கத்தையும் சாத்தியப்படுத்து மாறு கோருகின்றது. ஆனால், இதன் பங்காளர்கள் யார் என்பதுதான் இங்குள்ள முக்கிய கேள்வியாகும்.

இதன் பிரகாரம் ஜனவரி முடிவுக்குள் பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும். இக்கட்டுரை எழுதப்படும் வரை அதற்கான முயற்சிகள் எதுவும் தொடங்கப்பட்டதாகத் தெரியவில்லை. குறிப்பிட்ட பேச்சுவார்த்தையில் பங்கேற்பதற்குத் தயார் என சிரியாவின் அரசாங்கம் அறிவித்திருக்கின்றது. ஐ.நா. தீர்மானத்திற்கு சிரியா அரசாங்கம் எடுத்த எடுப்பிலேயே பச்சை விளக்கு காட்டியிருப்பது எதிர்க் கட்சியினரிடம் பலத்தை சந்தேகத்தை உருவாக்கியுள்ளது.

சிரியாவின் ஆயுதமோதல் இன்று உள்ளக மோதல் கட்சிகளுடனும் குழுக்களுடன் மாத்திரம் சுருங்கிய விவகாரம் அல்ல. அமெரிக்கா, ரஷ்யா உள்ளிட்ட மேற்கு சக்திகள் அதில் தொடர்புபட்டுள்ளன. அவற்றின் பகுதியளவிலான நலன்களில் அவை எப்போதும் குறியாய் இருக்கின்றன. சிரியாவில் இவற்றின் தலையீட்டால் ஏற்பட்ட அழிவுகள் பாரதூரமானவை.

தற்போது அனைத்து சக்திகளும் அமைதிப் பேச்சுவார்த்தையொன்றுக்கு இணக்கம் தெரிவித்திருப்பது நம்பிக்கையளிக்கின்றபோதும் நெருக்கடியில் சம்பந்தப்பட்ட நாடுகளின் எதிர்கால நிலைப்பாடுகள் என்னவாக இருக்கும் என்பதுதான் கேள்விக்குறியாகும்.

இப்பாதை வரைபடத்திட்டத்தில் பல பிரச்சினைகளும் சவால்களும் உள்ளன. பஷ்ஷார் அல் அஸதை பதவி கவிழ்க்க வேண்டும் எனக் கோரி வந்த அமெரிக்கா பேச்சுவார்த்தைக்கு இணக்கம் தெரிவித்துள்ளது. இதேவேளை, அஸதைத் தொடந்தும் அதிகாரத்தில் தக்கவைக்க வேண்டும் என விரும்பும் ரஷ்யாவும் அமைதிப் பேச்சுவார்த்தைக்கு இணங்கியுள்ளது. ஆட்சிக்கெதிராக போராடிவரும் ஆயுதக் குழுக்கள் அஸதை பதவி கவிழ்ப்பதே பிரச்சினைக்கான தீர்வு என்பதில் தெளிவாக உள்ளன.

இதேவேளை, சிரியாவில் ரஷ்யாவின் கடற்படைத் தளம் அமைந்துள்ளது. எந்த சந்தர்ப்பத்திலும் அதற்கு பாதிப்பு ஏற்பட்டு விடக்கூடாது என்பதில் ரஷ்யா அதிக அக்கறை கொண்டுள்ளது. ரஷ்யா கடந்த காலங்களில் தனது போர் விமானங்களை அனுப்பி சிரிய அரசாங் கத்தை பாதுகாத்தது. இந்த வகையில் அஸதை கைவிடும் நோக்கம் ரஷ்யாவுக்கு இல்லை.

இத்தகைய கொதிப்பான சூழலில் பிராந்திய சக்திகள் ஒன்றுக்கொன்று முரண்பட்ட நோக்கங்களோடும் நலன்களோடும் செயற்படும் ஈரான் அஸதை காப்பதற்கு நேரடியான இராணுவ உதவிகளை வழங்குகின்றது. சிரிய விவகாரத்தில் ரஷ்யா, ஈரான், சிரிய அரசாங்கம், லெபனான் ஹிஸ்புல்லாஹ் என்பன ஓரணியில் நிற்கின்றன. அஸதின் அரசாங்கத்தை தக்கவைப்பது இவற்றின் பொதுக் குறிக்கோளாகும்.

இதேவேளை 90 வீதம் சுன்னி முஸ்லிம்கள் வாழும் சிரியாவில் ஆட்சி மாற்றமொன்றை கொண்டு வர வேண்டும் என்பதில் ஏனைய அறபு நாடுகள் எவ்வகையான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது என்பது தெளிவற்றது. வேறு வகையில் கூறுவதாயின் ரஷ்ய அணிக்கு எதிரணி யார் என்பது மங்கலானது.

யெமனில் சவூதி - ஈரானின் நிழல் போர் அல்லது பனிப்போர் நிகழ்வது போன்று சிரியாவில் நடைபெறவில்லை. ஆயுதக் குழுக்களும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட நோக்குகளோடு போராடி வருகின்றன. இந்நிலையில் ஐ.நா பாதுகாப்புச் சபை முன்வைத்துள்ள சமாதானத்திற்கான பாதை வரைபடத்தை அது எவ்வாறு சாத்தியப்படுத்தப் போகின்றது என்பதே முக்கிய கோள்வியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போதைய இன முறுகல்களுக்கு மிக நீண்ட வரலாறு உண்டு. இது தமிழ்-சிங்கள உறவை மாத்திரமன்றி தமிழ்-முஸ்லிம் உறவையும் பாதித்தன. இவ்வாறு நீண்ட கசப்பான வரலாற்றைக் கொண்ட தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களின் உறவு மீளக் கட்டி எழுப்பப்பட வேண்டியதன் அவசியத்தை தமிழ்த் தரப்புக்கள் மாத்திரமல்ல முஸ்லிம் தரப்புக்களும் உணர்ந்திருக்கின்றன.

ஆகவே, இரு தரப்பினரும் தமது கடந்தகால நிகழ்வுகளை இவ்'வாத மேடை'ப் பகுதியில் குறிப்பிடுகின்றனர். அதன் அடிப்படையில் இம்முறை எமக்குக் கிடைத்த கருத்துக்களை இங்கு பிரசுரிக்கிறோம்.

இதில் கடந்த மீள்பார்வையில் வெளியான ஜோசப் மைக்கல் (மட்டக்களப்பு) என்பவரின் கருத்துக்கு மேலும் வலுச் சேர்க்கும் வகையில், இம்முறையும் ஒரு வாசகர் எழுதி அனுப்பியுள்ளார். அத்துடன் மேலும் சில வாசகர்களின் மாறுபட்ட கருத்துக்களையும் நாம் இங்கு பிரசுரிக்கிறோம்.

அன்பின் தமிழ், முஸ்லிம் உறவுகளே!, தமிழர்களினாலோ, முஸ்லிம்களினாலோ உங்களுக்கு ஏதாவது அநியாயங்கள், அடக்குமுறைகள், குரோதங்கள் நடைபெற்றிருந்தால் அதனை மீள்பார்வைக்கு எழுதியனுப்புங்கள்.

உங்களது ஆக்கங்களை 'வாத மேடை'ப் பகுதியில் பிரசுரிப்போம். இதன் மூலம் சமூகங்களுக்கிடையில் புரிதலையும், சகவாழ்வையும் ஏற்படுத்துவதே எமது நோக்கமாகும்.

இப்படிக்கு
வாத மேடை
மீள்பார்வை
49, Sri Mahinda Dharma Mawatha,
Colombo - 09, Sri Lanka.
Email: meelparvai@gmail.com

# இஸ்லாமியத் தமிழர்களே, உங்கள் நிலை என்ன?

(மீள்பார்வையின் 'வாதமேடை'ப் பகுதி புதிய ஒரு அத்தியாயத்தை ஆரம்பித்துள்ளது. இது சமூக நல்லிணக்கத்தையும், புரிந்துணர்வையும் ஏற்படுத்த ஒத்துழைக்கும் என நம்புகிறேன்.)

வடகிழக்கிலும் நாட்டின் ஏனைய பாகங்களிலும் வாழும் இஸ்லாமியத் தமிழர்களுக்கு நான் ஒன்றை செல்ல வேண்டும். நன்றாகத் தெரிந்து கொள்ளுங்கள், நாம் இருக்கக் கூடிய நிலை இழிவிலும் இழிவான நிலை. தாம் அடிமை என்பதை உணராமல், அடிமையாக வாழப் பழகிக் கொண்டிருக்கிறோம். ஒரு அடிமை வாழ்க்கையில் இருப்பதைப் பெருமையாக நினைத்துக் கொண்டிருக்கிறோம்.

எனவே, அடிப்படையான சில உண்மைகளை சரியாகப் புரிந்து கொள்ளத் தவறிவிட்டால், நமது சமூகத்தைக் காப்பாற்றுவது இயலாத விடயமாக மாறிவிடும்.

நான் இங்கு சொல்வது தமிழ் பேசுகின்ற சிறுபான்மையினருக்குத்தான். எங்களது நாடாக இலங்கை இருக்கிறது. இங்கு வாழும் தமிழ் இஸ்லாமியர்களே, நீங்கள் தமிழர்கள், உங்களது மதம்தான் இஸ்லாமாக இருக்கிறது. இந்த பெரும்பான்மையின அரசு சிறுபான்மையினருக்கு எதிரான அரசாகத்தான் கட்டமைக்கப்பட்டுள்ளது.

இனிமேலும் இந்நாட்டில் தமிழர்கள், இஸ்லாமியர்கள் என்ற வேறுபாடு கிடையாது. சிறுபான்மையினர் பெரும்பான்மையினர் என்ற இரு பதமே இருக்கும். அதில் பெரும்பான்மை சிறுபான்மையை ஒடுக்கும். அப்போது, இஸ்லாமியர்களின் நிலைப்பாடு என்ன? தமிழர்கள் என்ன செய்வார்கள்? இஸ்லாமியர்களும் தமிழர்களும் என்ன செய்யப் போகிறார்கள்?

அன்பின் இஸ்லாமியத் தமிழர்களே! தமிழர்கள் ஒருபோதும் இஸ்லாமியர்களுக்கு எதிரானவர்களாக இருந்ததில்லை. இருக்கப் போவதுமில்லை. தமிழ் சமூகத்தில் வாழும் பிராமணர்கள் மற்றும் வேளாளர்கள்தான் இஸ்லாமியர்களை எதிர்த்து வருகிறார்கள். அப்படியானால், தமிழ்த் தேசத்தில் வாழ்ந்த இஸ்லாமிய மக்களை, அதாவது அளிஞ்சிப்பொத்தானை, காத்தான்குடி, வாழைச்சேனை, இறுதியாக வடக்கு முஸ்லிம்களை வெளியேற்றியது என்பது எல்லாம் என்ன? என்பது குறித்து நீங்கள் சிந்திப்பதற்கு நியாயம் உண்டு.

உண்மையில் அதற்குப் பின்னால் உள்ளது இந்த பிராமணர்களும் வேளாளர்களும்தான். அதனை ஒத்துத்தான் இன்றைய தமிழ்த் தேசிய கூட்டமைப் பாகட்டும், விடுதலைப் புலிகளாக இருக்கட்டும், எல்லாம் அந்த பிராமணர்கள் மற்றும் வேளாளர்களின் வடிவம்தான்.

இந்த பிராமணர்கள் மற்றும் வேளாளர்கள் என்றால் யார்? அவர்கள் யூதர்களின் ஒரு பிரிவினர். இவர்கள் எப்போதும் இஸ்லாமியர்களுக்கு எதிரானவர்கள்தான். இதனை நீங்கள் புரிந்துள்ளீர்களோ இல்லையோ. ஆனால், இதுதான் உண்மை.

எனவே, வடகிழக்கில் வாழும் இஸ்லாமியத் தமிழர்கள், தமிழ்த் தேசியத்தை ஆதரித்தால் மட்டும்தான் அவர்களுக்கு விடிவு இருக்கிறது. இது இல்லாமல் வேறு வழியே இல்லை என நான் நினைக்கிறேன். இந்த இஸ்லா மியத் தமிழர்களுக்கான பாதுகாப்பும், இறையாண்மையும் தமிழர்களால் மட்டும் தான் வழங்க முடியும்.

ஏனெனில், இன்றைய சூழ்நிலையில் தமிழ்த் தேசியத்தின் அரசியல் தமிழர் கூட்டணியிடமோ அல்லது ஏனைய கட்சிகளிடமோ இல்லை. தமிழ்த் தேசியத்தின் அரசியலை தீர்மானிப்பவர்கள் பிற தேசத்தவர்கள். அதிலும் இந்தியா, பிராமணர்கள் மற்றும் வேளாளர்கள்தான் இதனைத் தீர்மானிக்கிறார்கள்.

. ஆகவே, எதிர்வரும் காலங்களில் ஏற்படவுள்ள அரசியல் யாப்பு மாற்றமாக இருக்கலாம், எல்லை நிர்ணயம் தொடர்பான விடயமாக இருக்கலாம் மற்றும் வடக்கு கிழக்கு இணைப்பு குறித்த கருத்தாக இருக்கலாம் அனைத்திலும் வடகிழக்கு இஸ்லாமியத் தமிழர்கள் தமிழ்த் தேசியத்தை ஆதரிப்பதே ஒரே வழி.

இல்லையேல் தற்போதைய சர்வதேச மற்றும் உள்ளக பொறிமுறை அரசியலில் இஸ்லாமியத் தமிழர்கள் இரு பக்கங்களாலும் தாக்கப்படலாம். ஆகவே, தனித்துவ அரசியலை விட்டு விட்டு இணைந்த சமூக அரசியல் நீரோட்டத்திற்குச் செல்வதே சிறந்த வழியாகும்.

ஜே.போல்ராஜ்
திருகோணமலை




# மட்டக்களப்பு முஸ்லிம்களின் ஆக்கிரமிப்பு

(22, ஜனவரி மீள்பார்வை பத்திரிகையில், ''இன்றைய சமூகங்களுக்கிடையிலான பிரச்சினைகளுக்கு முஸ்லிம்களே காரணம்'' என ஜோசப் மைகல் எழுதிய பத்தி மிகவும் யதார்த்தமானதாக இருந்தது. அவரின் கருத்துக்கு மேலும் சில விடயங்களைச் சேர்ப்பதற்காக இம்முறை ''வாதமேடை''ப் பகுதிக்கு எனது கருத்தை முன்வைக்கிறேன். சமூகங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில், கருத்துப் பரிமாற்றப் பகுதியை ஆரம்பித்துள்ள மீள்பார்வையின் முயற்சியைப் பாராட்டுகிறேன்)

மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்களே...! தமிழர்களின் வாழ்விடங்களையும் தங்களையும் அடிமைத்தனமாக்குவதும், தங்களது சொத்துக்கள் மற்றும் ஏனையவற்றை தம்வசப்படுத்து வதில் உங்களுக்குள்ள ஆனந்தம் என்ன?

ஏனெனில், கிரான் பிரதேச செயலாளர் பிரிவில் அடங்கும் ஊத்துச்சேனை, புனானை, வடமுனை, கள்ளிச்சை, வாகனேரி ஆகிய ஐந்து தமிழ் கிராமங்களையும் முஸ்லிம்களை பெரும்பான்மையாக கொண்ட ஓட்டமாவடியுடன் இணைக்க வேண்டும் என முஸ்லிம் அமைப்புக்கள், மாவட்டத்தில் உள்ள அனைத்து முஸ்லிம் அரசியல்வாதிகள் உட்பட்டோரால் முன்வைக்கப் பட்டுள்ளது.

அத்துடன், வாகரை பிரதேசத்தில் உள்ள புனானை கிழக்கு கிராம அதிகாரி பிரிவின் றெஜிதென்னை, ஜெயந்திய உட்பட்ட கிராமங்களை கோறளைப்பற்று மத்தி என்னும் முஸ்லிம் பிரதேச செயலகத்துடன் இணைக்க வேண்டும் எனவும் அறிக்கை சமர்ப்பித்துள்ளனர்.

அத்தோடு ஏறாவூர், செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள தன்னாமுனை, மயிலம்பாவெளி, சவுக்கடி ஆறுமுகத்தான் குடியிருப்பு, குமாரவேலியார் கிராமம் உட்பட்ட தமிழ் கிராமங்களை ஏறாவூர் நகரம் என்னும் முஸ்லிம்களை பெரும்பான்மையாக கொண்ட பிரதேச செயலகத்துடன் இணைக்கவும் அறிக்கை சமர்ப்பித்துள்ளனர்.

மேலும், மண்முனை வடக்கு, மஞ்சந்தொடுவாய்த் தமிழ் கிராமத்தின் எல்லையில் காத்தான்குடி பிரதேச எல்லையை உட்படுத்தவும் ஏற்பாடுகள் மேற்கொண்டிருந்தனர்.

இவ்வாறு, முஸ்லிம் அரசியல்வாதிகள் மற்றும் முஸ்லிம் அமைப்புக்கள் இங்கு சமர்ப்பித்த விடயங்களின் நோக்கம் தமிழ் கிராமங்களை தமக்கும் இணைப்பதன் மூலம் தமிழ் பகுதியில் உள்ள காணிகளை சுவீகரிப்பதும் அவர்களது வளத்தை சுவீகரிப்பதுமாகும். கடந்த காலங்களில் முஸ்லிம்கள் இனவாத அடிப்படையில் கல்வி வலயம் ஒன்றை (மட்டக்களப்பு மத்தி) உருவாக்கியிருந்தனர். இதனை முஸ்லிம் அமைச்சர் ஒருவர் மேற்கொண்டிருந்தார்.

ஓட்டமாவடியுடன் கிரான் பிரதேச செயலாளர் பிரிவின் ஐந்து தமிழ் கிராமம் இணைப்பதும், புணானை கிழக்கு கோறளைப்பற்று மத்தியுடன் இணைப்பதும், ஏறாவூர் நகர பிரதேசத்தின் தமிழ் கிராமங்களை இணைத்து பிரதேச சபையை பெருப்பிப்பதும், மஞ்சந்தொடுவாய் கிராமம் அமைந்துள்ள மண்முனை, வடக்கு எல்லைக்குள் காத்தான்குடி எல்லையை புகுத்துவதும் உட்பட்ட நடவடிக்கைகள் முடிவு எடுக்க முடியாத வகையில் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

இவ்வேளை, கோறளைப்பற்று பிரதேசத்தில் இருந்து ஐந்து கிராம சேவையாளர் பிரிவை எடுத்தும், வாகரை பிரதேசத்தில் இருந்து மூன்று கிராம சேவையாளர் பிரிவை எடுத்தும் எட்டு கிராம சேவையாளர் பிரிவுடன் முஸ்லிம் அமைச்சர் இன ரீதியாக ஆரம்பித்த ஒரு பிரதேச செயலகமே கோறளைப்பற்று மத்தி என்பது குறிப்பிடத்தக்கது.

இன்று கிழக்கு மாகாணத்தில் பெரும் யுத்தத்தை எதிர் கொண்டு, உயிர் அழிவு, சொத்தழிவு, காணிகள், வாழ்விடங்கள், கிராமங்களை தமது அரசியலை பயன்படுத்தி அரசுடன் இயங்கும் முஸ்லிம் அரசியல்வாதிகள் சுவீகரித்து வருவது தமிழ் மக்களை வேதனைப்படுத்தி வருகின்றது.

இவ்வேளை அரசின் பின்னணியில் முஸ்லிம்களின் காணி சுவீகரிப்பு தமிழர்களை பல வகையிலும் அநாதைகளாக்கியுள்ளது. அரசாங்கத்தினதும், முஸ்லிம் அரசியல்வாதிகளினதும், அமைப் புக்களினதும் செயற்பாட்டுக்கு மறைமுகமாக ஆதரவு வழங்கி தமிழ் மக்களை பழிவாங்குவது தமிழ் மக்களுக்கு வேதனையை ஏற்படுத்தி வருகின்றது. இவர்கள் எப்போது திருந்துவார்கள் என தமிழ் மக்கள் ஏங்குகின்றனர்.

எனவே, தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல், சிவில் பிரதிநிதிகள் ஒன்றிணைந்து, சிறந்ததீர்வைப்பெற்று, இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த என்றும் ஒற்றுமையாக இருந்து பாடுபட வேண்டும். இவர்களைப் பிரித்து விட அரசாங்கமும், சுயநல அரசியல்வாதிகளும் சதி செய்வார்கள். இதில் கவனமாக நடந்து கொள்ள வேண்டும் எனவும் தெரிவிக்கின்றேன்.

க. சுகந்தன்
மட்டக்களப்பு

# ஊதிப் பெரிசாக்கப்படும் தமிழ்-முஸ்லிம் உறவு

ஒரு காலத்தில் தமிழர்களும், முஸ்லிம்களும் எவ்வாறு உயிருக்குயிராக நேசித்து, உறவு கொண்டாடி, பரஸ்பர நன்மை தீமைகளில் பங்குகொண்டு வாழ்ந்தார்களோ, அதே உயிரோட்டமான உறவை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும் என்ற நன்நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டுள்ள இக்கருத்துப் பரிமாற்றப் பகுதி, அதன் உரிய பங்களிப்பை மேற்கொள்ளும் என எதிர்பார்க்கிறேன்.

வடக்கு கிழக்கு தமிழ் மற்றும் முஸ்லிம்களின் தாயக பூமி, அதில் பூர்வீகமாக இரண்டு சமூகத்தவர்களும் வாழ்ந்து வருகின்றனர். அஹிம்சை போராட்டம், ஆயுதப் போராட்டம் இந்த இரண்டு போராட்டங்களினதும் வலியினால் இந்த இரண்டு சமூகமும் நொந்து, வெந்து போயுள்ளது. இந் நிலையில், இன்று ஜனநாயக நீரோட்ட போராட்டத்தில் குதித்து, அதன் மூலம் சமூக மாற்றமொன்றை கொண்டுவர முனைப்புக் கொண்டு முன்னேறி வருகின்ற இன்றைய காலகட்டத்தில் தமிழ், முஸ்லிம், சிங்கள சமூகங்களின் இன உறவை கட்டியெழுப்பும் அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இன்னும் இன்னும் மக்களுக்கு உணர்ச்சி பலூன்களை ஊதி வெடிக்க விடாமல், அரசியல் நீரோட்டத்துக்கு தாமும் தயாராகி, மக்களையும் தயார்படுத்த வேண்டிய பாரிய பொறுப்பு நம் எல்லோருக்கும் உள்ள நிலையில், தமிழ் - முஸ்லிம் உறவுகளின் வரலாற்று ஆழம் தெரியாமலும், இரு சமூகங்களின் ஒற்றுமையை பிற்கால சந்ததிகளுக்கு ஞாபக மூட்டிக் கொண்டே இருக்க வேண்டும். இது இன்றைய காலத்தின் முதன்மைத் தேவையாக உள்ளது.

வடக்கிலும் கிழக்கிலும் வாழும் முஸ்லிம்கள் ஒரு மொழி 'பேசுகின்ற சமூகம் என்ற ரீதியில், ஒற்றுமையாகவே வாழ வேண்டும் என்று எண்ணி வாழ்ந்தும் இருக்கிறார்கள்; வாழ்ந்தும் வருகிறார்கள். தமிழ் மக்களின் அரசியல் போராட்டத்தில் ஒரே மொழி பேசும் சமூகம் என்ற ரீதியில் முஸ்லிம்களும் பங்களிப்புச் செய்திருக்கிறார்கள்.

ஆனால், தமிழ் மக்கள் தாக்கப்பட்ட போதும், தமிழ் மக்கள் பாதுகாப்புத் தேடி வந்தபோதும் முஸ்லிம்கள் அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்திருக்கிறார்கள்; உதவிக் கரம் நீட்டியிருக்கிறார்கள். 1983 ஆம் ஆண்டு தமிழ் மக்கள் மீது தாக்குதல்கள் கட்டவிழ்த்து விடப்பட்ட போது தமிழ் மக்கள் பலரை முஸ்லிம் மக்கள் காப்பாற்றியிருக்கிறார்கள்.

முஸ்லிம் அரசியல் தலைமைகள் தமிழ் மக்களுக்காக குரல் கொடுத்திருக்கிறார்கள். இது போன்று தமிழ் அரசியல் தலைமைகள் முஸ்லிம் மக்களுக்காக குரல் கொடுத்திருக்கிறார்கள். தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களை காப்பாற்றி உள்ளனர். இவையெல்லாம் வரலாற்று உண்மைகளாகும்.

ஆண்டாண்டு காலமாக ஒற்றுமையாக வாழ்ந்து வந்து, தமிழ் தரப்பினரது அரசியல் போராட்டங்களில் பங்குகொண்ட முஸ்லிம்கள் தமிழ் ஆயுதக் குழுக்களினால் சந்தேகக் கண்கொண்டு பார்க்கப்பட்டு, தமிழ் ஆயுதக் குழுக்களின் ஆயுதங்கள் முஸ்லிம்களுக்கு எதிராக திசை திருப்பப்பட்டது. இரவோடு இரவாக வடக்கிலிருந்து முஸ்லிம்கள் விரட்டப்பட்டனர். அதனைத் தொடர்ந்து அப்பாவி முஸ்லிம்கள் மீது பல தாக்குதல் தொடர்ந்து கொண்டிருந்தன. இதனால்தான் இணைக்கப்பட்ட வடக்கு கிழக்கு பிரிக்கப்பட வேண்டும். கிழக்கிலாவது முஸ்லிம்கள் மாத்திரமல்ல தமிழ் மக்களும், சிங்கள மக்களும் நிம்மதியாக வாழ வேண்டும் என்ற கருத்தும், அதற்கான அழுத்தங்களும் மேலோங்கின.

வடக்குக் கிழக்கில் வாழ்ந்த சமூகங்களின் கருத்துக்கள் கேட்கப்படாமல் இணைக்கப்பட்ட வடகிழக்கிலிருந்து கிழக்கை பிரிப்பதுதான் சிறந்தது. வடக்கும் கிழக்கும் இணைந்திருந்தபோது கிடைத்த அனுகூலங்கள் என்ன என்பதும், கிழக்கும் வடக்கும் பிரிந்திருப்பதனால் கிடைத்துள்ள நன்மைகள் எவை என்பதையும் கிழக்கு வாழ் தமிழ் மக்கள் நன்கு உணர்ந்திருப்பார்கள். அதனை அவர்களால் வெளிப்படையாகச் சொல்ல முடியாவிட்டாலும் அவர்களின் மனட்சாட்சி யதார்த்தத்தை உணர்த்திக் கொண்டிருக்கும்.

பழைய பல்லவிகளைப் பாடிப் பாடி தமிழ் மக்களையும் முஸ்லிம் மக்களையும் பிரித்தாளும் கைங்கரியத்தை விட்டு விட்டு, இன்று 'சிறுபான்மை சமூகத்தை இந்த நாட்டிலிருந்து துரத்த வேண்டும் என்றும், இது பௌத்தர்களுக்கு மட்டும் சொந்தமான நாடு' என்றும் சிங்கள கடும்போக்கு அமைப்புக்கள் இனவாத உணர்வுகளை பெரும்பான்மை மக்கள் மத்தியில் ஊட்டி முஸ்லிம்களுக்கு எதிராக செயல்பட்டுக் கொண்டிருக்கும் இக்கால கட்டத்தில், தமிழ் மக்கள் மத்தியில் இனவாத உணர்வுகளைத் தூண்டி வடக்கு, கிழக்கு மாகாணம் தமிழர்களுக்கு மாத்திரம் சொந்தமான பூமி என்ற கருத்தினை விதைத்து முஸ்லிம், தமிழ் சமூகங்களின் உறவுகளில் விரிசல்களையும் காயங்களையும் ஏற்படுத்தி வருவது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

அப்துல் மலிக்
அட்டாளைச்சேனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சுதந்திரக் காற்றை சுவாசிப்போம்



**உஸ்தாத் ஆஸாத் அப்துல் முஈத்**
(தலைவர், ஜமாஅதுஸ் ஸலாமா)

இலங்கை சுதந்திரம் அடைந்து 68 வருடங்கள் ஆகிவிட்டது. மக்களுக்குக் கிடைக்கும் மிகப் பெரிய அருள்களில் சுதந்திரம் பிரதானமானது. அதன் பெறுமதியை பணத்தால் தீர்மானிக்க முடியாது. இதனால் சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக உயிர்களைக் கூட தியாகம் செய்கின்றோம்.

சுதந்திரம் ஒரு நாட்டின் கௌரவத்துடன் தொடர்பானது. மக்கள் தலை நிமிர்ந்து வாழ்வதற்கு அது வழியேற்படுத்திக் கொடுக்கின்றது. அந்நிய நாடுகளுக்கு அடிமைப்படாது தான் சுயமாக முடிவெடுக்கும் அதிகாரம் அந்நாட்டுக்கு கிடைக்கின்றது. நாடு அபிவிருத்தியை நோக்கி பயணிப்பதற்கு இது அடிப்படையானது. இதன் மூலமாக நாட்டு மக்கள் பரஸ்பரம் நட்புடன் வாழும் நிலை உருவாகின்றது.

இவ்விடத்தில் இலங்கை சுதந்திரத்திற்காக உழைத்த அனைவரையும் நன்றியுடன் நினைவுகூற இலங்கை மக்களாகிய நாம் கடமைப்பட்டுள்ளோம். அதே போன்று நாம் இன, மத, மொழி வேறுபாடின்றி அனைவரும் கைகோர்த்து இலங்கையின் அபிவிருத்தி, வளர்ச்சிக்காக ஈடுபட கடமைப்பட்டுள்ளோம்.

சுதந்திரம் என்று சொல்லும் போது அதன் பிரதானமான பொருள் அந்நிய ஆதிக்கத்தில் இருந்து நாடு விடுதலையாகுவது என்பதாகும். அதாவது பிற நாட்டின் நிர்வாக ரீதியான ஆதிக்கத் தில் இருந்து நாட்டை விடுதலை செய்து, தாம் சுயமாக நாட்டை ஆட்சி செய்வதைக் குறிக்கின்றது.

எனினும் இன்று சுதந்திரம், அல்லது விடுதலை என்ற சொல்லை விரிந்த பார்வையில் நோக்க வேண்டியுள்ளது. அதாவது சுதந்திரம் என்பது வெறுமனே நிர்வாக ரீதியான விடுதலையை மாத்திரம் குறிக்காது. பல நாடுகள் நிர்வாக ரீதியாக விடுதலையைப் பெற்றுக் கொண்டாலும் வேறு பகுதிகளில் விடுதலையடையாமல் உள்ளதை அவதானிக்கலாம். அது பொருளாதார ஆதிக்கம், அரசியல், இராணுவ ஆதிக்கம், கலாச்சார, சிந்தனா ரீதியான ஆதிக்கம் என பல வடிவங்களில் காணப்படுகின்றது.

எனவே சுதந்திரம் என்று கூறும் போது மேற்சொன்ன ஆதிக்க வடிவங்களில் இருந்தும் நாடு விடுதலை அடைய வேண்டும் என்பது கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

சுதந்திரத்தின் முக்கியமான பரப்பு மதச் சுதந்திரமாகும். ஒவ்வொரு பிரஜையும் தான் விரும்பும் மதத்தை பின்பற்ற முடியும். அதன் கிரியைகளை அவர் செய்து கொள்ள முடியும். மற்றவர்களது மார்க்கத்தை கேலிக்கு உட்படுத்துவது கூடாது. பிறரது மார்க்க உணர்வுகளை மதிக்கும் வகையில் அடுத்தவர்கள் நடந்துகொள்ள வேண்டும். இதில் மத வழிபாட்டுத் தலங்களும் உள்ளடங்கும்.

உண்மையான சுதந்திரக் காற்றை சுவாசிக்கும் நாட்டில் நல்லவர்களுக்கு இடம் இருக்கும். நாட்டை வளப்படுத்தும் உற்பத்தித் துறையில் ஈடுபடுவோருக்கு தூண்டுதல் காணப்படும். தமக்குத் தேவையான ஆதரவை அவர்கள் அதிகாரிகளிடம் பெற்றுக் கொள்வார்கள்.

இதன் மூலமாக தேசிய உற்பத்தி அதிகரிக்கும். அது தரமுடையதாக மாற்றமடையும். நாடு வளம் பெறும். மக்களுக்கு மத்தியில் நம்பிக்கை வளரும். பலபோது தன்னிறைவு நிலையை அடைந்து கொள்ளும். இதற்கு ஏற்ற வகையில் நாட்டின் கொள்கைகள் வகுக்கப்பட வேண்டும்.

இதற்கு மாற்றமாக அநீதி இழைப்போர், தீயவர்கள் போற்றப்படுமாயின், அவர்கள் அதிகாரிகளுக்கு நெருக்கமானவர்களாகக் காணப்பட்டால், அவர்கள் செய்யக்கூடிய தீய செயல்களுக்கு ஆதரவு காணப்படுமாக இருந்தால் தீயவர்களது கை நாட்டில் ஓங்கிவிடும். தேசம் அழிவை நோக்கிச் செல்லும்.

ஒவ்வொரு மனிதனுக்கும் கருத்துச் சுதந்திரம் உள்ளது. தான் ஏற்றுக் கொண்டுள்ள கருத்துக்களைப் பேசலாம். அவற்றை எழுதலாம். பிறரை கௌரவமாக விமர்ச்சிக்கலாம். விமர்சிக்கப்படுபவர்கள் நாட்டுத் தலைவனாக இருக்கலாம். அரசியல் வாதிகளாக இருக்கலாம். ஏனைய அதிகாரிகளாக இருக்கலாம். ஆனால் விமர்சனத்துக்கான வரையறைகள் பேணப்பட வேண்டும்.

அடுத்தவர் பின்பற்றும் கருத்தை தான் பின்பற்ற வேண்டும் என்ற, கட்டாயப்



படுத்தல் கூடாது. இவ்வகையில் ஊடகச் சுதந்திரம் உத்தரவாதப் படுத்தப்பட வேண்டும். சுதந்திரம் என்ற பெயரில் ஊடகச் சுதந்திரம் துஷ்பிரயோகம் செய்யப்படவும் கூடாது. மக்கள் பிழையாக வழிநடாத்தப்படவும் கூடாது.

பொதுச் சொத்துக்கள் பாதுகாக்கப்பட வேண்டும். அவை நாட்டின் அனைத்துப் பிரஜைகளின் சொத்துக்களாகும். அதனை நினைத்தவாறு பயன்படுத்த எவருக்கும் உரிமை கிடையாது. குறிப்பாக அதிகாரிகள் இவற்றைப் பாதுகாத்து வளர்க்கும் வகையில் செயற்பட வேண்டும். இதனைத் தான் இஸ்லாம் அமானிதம் என்ற சொல்லின் மூலமாக விளக்குகின்றது.

இன்று அரசியல் என்பது வியாபாரத்திற்கான இடமாக மாறியுள்ளது. அதிகமான இலாபங்களை ஈட்டித் தரும் சிறந்த சந்தையாக அரசியல் பார்க்கப்படுகின்றது. சமூக சேவை என்ற பெயரில் அரசியலுக்கு வருகின்றவர்கள் காலப் போக்கில் அரசியல் மேடைகளில் வழங்கிய வாக்குறுதிகளை மறந்து விடுகின்றனர். தமக்கு வாக்களித்த மக்களின் நலன்களை நிறைவேற்றுவதை விட்டுவிட்டு தமது சொந்த நலன்களை நிறைவேற்றும் கலாச்சாரம் வளர்ந்துள்ளது.

இக்கலாச்சாரம் மாற்றப்பட வேண்டும். இது தொடர்பாக மக்கள் எழுப்பும் கருத்துக்கள் உள்வாங்கப்பட வேண்டும். அப்போது தான் உபதேசம் செய்யும் அழகிய கலாச்சாரத்தை வளர்க்க முடியும்.

பாதுகாப்பு மிகப் பெரிய ஒரு அருளாகும். எந்த சந்தர்ப்பத்திலும் அச்சமில்லாது நடமாட முடியுமான சூழல் காணப்பட வேண்டும். ஏழையாக இருக்கலாம். பணக்காரனாக இருக்கலாம். ஒவ்வொருவரும் சுதந்திரமாக தான் உழைத்த சொத்துக்களை அனுபவிக்க உரித்துடையவர்கள். அவற்றில் மற்றவர்கள் கண்வைத்து அவற்றை இலக்காகக் கொள்ளக் கூடாது. உழைக்கும் சுதந்திரம் அனைவருக்கும் வழங்கப்படுவது கடமை போன்று அவற்றைப் பயன்படுத்துவது உடமையாளர்களின் உரிமையாகும்.

எனவே சுதந்திரக் காற்றைச் சுவாசிப்போம். அதற்காக ஆரோக்கியமான சூழலை உருவாக்க அனைவரும் ஒன்றாய் உழைப்போம். இலங்கை தாய்நாட்டின் புகழை உலகமெல்லாம் எடுத்துச் செல்வோம். நாட்டுப் பற்றுடன் அதன் வளர்ச்சிக்காக அனைவரும் செயற்படுவோம். நாம் அனைவரும் இலங்கைப் பிரஜைகளே.

## மஹிந்தவின்... (1 ம் பக்கத் தொடர்)



கிருலப்பனை பூர்வாராம விகாரையின் விகாராதிபதி பத்பேரிய விமலஞான தேரர் இந்த மனுவை தாக்கல் செய்திருந்தார். அபயாராம விகாரையின் விகாராதிபதி முருத்தெட்டுவே ஆனந்த தேரர் இந்த மனுவில் பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டுள்ளார்.

அபயாராம விகாரை தற்போது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசியல் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் அதேபோன்று தொழிற்சங்க நடவடிக்கைகளுக்காகவும் பயன்படுத்தப்படுவதாகவும் அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது.

இதன் காரணமாக அப்பகுதி மக்களுக்கு சுதந்திரமாக தங்களது வழிபாடுகளை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகக் கூறியுள்ள விமலஞான தேரர், அச்சம் காரணமாக இது தொடர்பில் முறையிடுவதற்கு மக்கள் தயக்கம் காட்டி வருவதாகவும் தெரிவித்தார்.

இந்த முறைப்பாட்டை ஆராய்ந்த கொழும்பு மாவட்ட நீதிபதி, மனுவை தொடர்ந்தும் விசாரிப்பதற்கான அனுமதியை வழங்கினார். விசாரணைகளை எதிர்வரும் 15-ம் திகதி வரை ஒத்திவைத்த நீதிபதி, அன்றைய தினம் இது சம்பந்தமாக விளக்கம் அளிக்குமாறும் பிரதிவாதியான முருத்தெட்டுவே ஆனந்த தேரருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இதனிடையே, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மனைவி ஷிரந்தி ராஜபக்ஷ, பாரதூரமான ஊழல் மோசடிகள் சம்பந்தமாக விசாரிக்கும் ஜனாதிபதியின் விசேட ஆணைக்குழு முன்னிலையில் ஆஜரானார். அவரது மகன் யோஷித ராஜபக்ஷ தற்பொழுது விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

## அரபு மொழியிலும்... (1 ம் பக்கத் தொடர்)

ஆங்கில மொழியில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு, தமிழையோ, சிங்களத்தையோ சரியாக உச்சரிக்க முடியாது. நாங்கள் ஆங்கிலத்தில்தான் தேசிய கீதம் பாடவேண்டும் என கோரிக்கை விடுப்பார்களாயின் என்ன செய்வது என கேள்வி எழுப்பினார்.

எதிர்காலத்தில் அரபு மொழியிலும் இலங்கையின் தேசிய கீதத்தை பாட வேண்டும் என்று கேட்பார்கள் என்பதில் சந்தேகமில்லை என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமது பதிலில் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், இந்தியாவை மகிழ்ச்சிப்படுத்துவதற்காகவே இலங்கையில் தமிழில் தேசிய கீதம் பாடப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## தென்கிழக்குப்... (1 ம் பக்கத் தொடர்)



தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் குட் செபர்ட் இளைஞர் சங்கத்தின் ஏற்பாட்டில் நிகழ்த்தப்பட்ட தேவாலயத்துக்கான அடிக்கல் நாட்டு விழாவில் காரைத்தீவு தேவாலய பாதிரியார் ப்ரயன் செல்லார் உட்பட பல்கலைக்கழக நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.

## கோத்தா... (04ம் பக்கத் தொடர்)

பொதுபல சேனாவைச் சூழ பெரும் திரளான பௌத்த மக்கள் ஒன்று குழுமியுள்ளார்கள் என்பதனை ஏனைய மக்களுக்கு காண்பிப்பதற்காகவே அத்தகைய முயற்சியினை அவர்கள் மேற்கொண்டிருந்தார்கள். இதுதவிர, பொதுபலசேனா அமைப்பு நாட்டின் பல பாகங்களில் நடாத்திய கூட்டங்களை ஏற்பாடு செய்திருந்தது மாத்திரமல்லாமல், சிவில் உடை அணிந்து, அக்கூட்டங்களின் கலந்து கொண்ட பெரும்பாலானவர்களுள் அரச உளவுப் பிரிவைச் சார்ந்தவர்கள் இருந்தார்கள்.

பொதுபல சேனா சிஹல ராவய போன்ற அமைப்புகளுக்கு ராஜபக்ஷ ஆட்சிக் காலப்பகுதியில் நிதியுதவி மற்றும் வாகன வசதிகள் எவ்வாறு கிடைத்தன? அவற்றை வழங்கி வைத்த இடைத்தரகர்கள் யார்? பலசேனாவின் முதன்மை அந்தஸ்திலுள்ள தேரர்களின் கடந்த கால தற்கால கணக்குகளை பரீட்சித்துப் பார்த்தால் அவர்களுக்கு நிதியுதவி கிடைத்த வழிமுறைகளும் அம்பலமாகும்.

அத்தோடு இவர்களின் தொலைபேசி அழைப்புகளும் பரிசோதிக்கப்பட வேண்டியுள்ளது. இவ்விடயம் தொடர்பில் கட்டாயமாக இரகசிய பொலிஸ் விசாரணையொன்று அவசியமாகிறது. சிஹல ராவயவிற்கு அரசாங்க புலனாய்வுப் பிரிவு சாரதிகளுடன் வாகனங்களை வழங்கியுள்ளமைக்கான சான்றுகளும் உள்ளன. இது பொய்யென்று நிரூபிக்குமாறு நிமல் சந்திரா வாக்கிஸ்டவிற்கு சவால் விடுக்கிறோம்.

போதைத்தூள் (குடு) விற்பனையாளர்களுக்கெதிராக பொதுபல சேனா அமை



ப்பு கூக்குரலிட்டு வந்த போதிலும் வெல்லம்பிட்டியவில் இடம்பெற்ற பல சேனாவின் கூட்டத்திற்கு தெமட்டகொட போதைத்தூள் மன்னனாக குறிப்பிடப்படுகின்ற பாரத லக்ஷ்மன் பிரேமசந்திரவின் கொலையாளி தெமட்டகொட சமிந்த என்பவனே நிதியுதவிகளை அளித்துள்ளான். இராணுவ புலனாய்வுப் பிரிவினரே இதற்குரிய தொடர்புகளையும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளனர்.

இதற்குப் பின்னால் பிரகித் எக்னலிகொட கொலை விவகாரம் தொடர்பில் தற்பொழுது கைதுசெய்யப்பட்டுள்ள கேர்ணல் சம்மி குமார ரத்ன என்பவரே செயற்பட்டு வந்துள்ளார் என்பற்கான தகவல்களும் உள்ளன. இவர் தெமட்டகொட சமிந்தவிடமிருந்து வருவாய்களை பெற்று வந்த, வெள்ளைவான் கடத்தல்களில் ஈடுபட்டு வந்த கோத்தாபய கோஷ்டியைச் சேர்ந்த பிரபலமான ஒருவர்.

ராஜபக்ஷ அரசாங்கத்தினால் சீவித்து வந்த பலசேனாக்கள் 2015 ஜனவரி 8ஆம் திகதியின் பின்னர் அலைந்து திரிவதற்கு இடமில்லாமல் அனுசரணை உதவிப் பாதைகள் துண்டிக்கப்பட்டு அநாதரவற்றுப் போயிருந்தன. அண்மைக் காலம் தொட்டு மீண்டும் பலசேனா களத்தில் குதித்துள்ளது. அன்று ராஜபக்ஷ ஆட்சிக் காலத்திற்குள் இத்தகைய அமைப்புகளை வழிநடாத்திய இராணுவ புலனாய்வுத்துறை பிரதானி, மைத்ரி-ரணில் ஆட்சிக் காலப்பகுதியிலும் தொடர்ந்தும் அப்பதவிகளில் நிலைத்து வருவதன் காரணத்தினாலேயே அவ்வமைப்புகளுக்கு ஒக்ஸிஜன் கிடைத்துள்ளது. இராணுவ புலனாய்வுத் துறை பிரதானியின் அடிவருடிகள் மறைநிழலில் செயற்பட்டு வருவதனை இவ்வரசாங்கம் புரிந்து கொள்ளாமல் இருப்பது பாரியதொரு துரதிஷ்டமாகும்.

ஊடகவியலாளர் எக்னலிகொடவை கடத்திச் சென்று கொலை செய்தது யார்? இராணுவப் புலனாய்வு தகவல் பிரிவின் லுத்தினன் கேர்ணல் சம்மி குமார ரத்ன என்பவனாவான். இவ்வரசாங்கம் இன்று புலிப் பயங்கரவாதிகளிடமிருந்து நாட்டை பாதுகாத்த இராணுவ வீரர்களை சிறையில் தள்ளிவருவதாக கூக்குரலிடுவது யார்? பொதுபல சேனா அமைப்பும் விமல் வீரவன்ச கோஷ்டியினருமாவர்.

இத்தகைய பலசேனாக்களுக்கு தெமட்கொட குடு அரசனுக்கூடாக உதவி புரிந்தது சம்மி குமார ரத்ன என்பராவர். இந்நிலையும் இன்று கொலை குற்றவாளியொருவனான சம்மி குமார ரத்ன என்பவனை இராணுவ சிப்பாய் ஒருவனாகக் காண்பித்து விடுவித்துக் கொள்வதற்கு பொதுபல சேனாவும் விமல் வீரவன்ச குழுவினரும் குரலெழுப்புவதன் இரகசியம் என்ன என்பதை இலகுவில் புரிந்து கொள்ள முடிகிறது.

விடுதலைப் புலிகளுக்கெதிரான யுத்தத்தின் போர்வையில் இராணுவ புலனாய்வுப் பிரிவு பாரதூரமான குற்றங்களில் ஈடுபட்டுள்ளது. அவர்கள் யுத்தத்திற்கு வழங்கிய பங்களிப்பை மதிக்க வேண்டிய அதேநேரம், அதன் போர்வையில் அவர்கள் கொலை, கொள்ளை, கப்பம் பெற கடத்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தால் அதற்கு மன்னிப்பு வழங்குவது இலகுவானதல்ல. அவர்களின் செயல்கள் இன்று அம்பலமாகும் பொழுது உளவுத்துறை அதிகாரிகளுக்கு மாத்திரமல்லாமல் அவர்களிடமிருந்து பண உதவிகளை பெற்று வந்த தேரர்களும் கூட மண்ணெண்ணெய் படிந்த சாரைப் பாம்புகளாக தடுமாற ஆரம்பித்துள்ளார்கள்.

ராஜபக்ஷாக்களின் குற்றங்களை புரிந்த புலனாய்வுத்துறை அதிகாரிகள் சட்டத்தின் பிடியில் சிக்கிக் கொண்டுள்ளனர். இத்தகைய பின்புலத்தைக் கொண்ட இராணுவ வீரனை விடுதலை செய்யு மாறு தேரர்கள் இன்று கூக்குரலிட்டு வருகின்றார்கள்.

பௌத்த சிந்தனையின் பிரகாரம் இத்தகைய பாவச்செயல்களை புரிந்த ஒருவரை விடுவித்துக்கொள்வதற்கு சட்டத்தை வலியுறுத்துவதென்பது எந்தளவுக்கு உசிதம் என்பதை சிந்தித்து பார்க்க வேண்டியுள்ளது. ராஜபக்ஷ ஆட்சிக் காலப்பகுதிக்குள் இராணுவத்தினர் இழைத்த குற்றங்களுக்கு சட்டத்தினால் வேலிகட்டப்படுகின்ற பொழுது பிக்குகளின் பலசேனாக்களை உசுப்பேற்றி விட்டு தங்களுடைய பிழைப்பை பாதுகாத்துக்கொள்ள இராணுவ புலனாய்வுத் துறையினர் ஒக்ஸிஜன் வழங்கி வருகிறார்கள்.

எனவே இத்தகைய நடவடிக்கைகள் அரசாங்கத்தையும் உளவுப் பிரிவையும் தர்ம சங்கடத்தில் ஆழ்த்துவதற்காக அரங்கேற்றப்படுகின்ற சூழ்ச்சித் திட்டங்களாகும். அதனால் விரைவாக இராணுவ உளவுப்பிரிவு சீர்திருத்தப்படாவிட்டால் நீண்டகாலம் செல்லும் முன்னரே இவ்வரசாங்கம் பாரிய பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க நேரிடும் என்பதில் ஐயமில்லை.

கோத்தாபய நியமித்த உயர் அதிகாரிகளே இன்னும் சூழ்ச்சிகளில் ஈடுபட்டு வருகிறார்கள். இன்னும் உள்ளார்கள். இன்றும் அவர்கள் திருட்டுத்தனமான முறையில் கோத்தாபய போன்றவர்களுக்கு கூஜா தூக்குகிறார்கள்.

கடந்த தினமொன்றில் அநுரகுமார திஸாநாயக்க ஆற்றிய உரையொன்றில் இரகசியமான உளவுத்துறை அறிக்கைகள் அரசாங்கத்தின் பொறுப்பு வாய்ந்த இடங்களுக்குச் செல்வதாகவும் முன்னரே எதிர்த் தரப்பினர்களின் கரங்களுக்கு கிடைப்பதாகவும் அவை தனக்கும் கிடைப்பதாகவும் தெரிவித்திருந்தார். இதன் மூலம் இவ்வரசாங்கத்தின் பாதுகாப்பிலுள்ள ஓட்டைகளை இலகுவில் புரிந்துகொள்ள முடிகின்றது.

அன்று கோத்தாபய ராஜபக்ஷாக்கள் நியமித்த பதவிகளில் உள்ளவர்களே மறுபுறத்தால் அரச தகவல்களை விசுவாசிகளுக்கு வழங்கி வருகின்றனர். முப்படைகளின் தளபதியாகவுள்ள மைத்ரிபால சிறிசேன இன்னும் இவற்றை வேடிக்கை பார்த்து காத்துக் கொண்டு மௌனியாக இருப்பது அவரின் எதிர்கால இருப்புக்கு அவ்வளவு ஆரோக்கியமானதல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடுநிலைச் சிந்தனை:

## மனித குலத்திற்கு இஸ்லாம் வழங்கிய பெரும் பேறு



அஷ்ஷெய்க் அக்ரம் அப்துஸ் ஸமத்

மனித குலத்திற்கு வழிகாட்டியாய் அமையும் 'வஸதிய்யா' எனும் நடுநிலை சிந்தனை தொடர்பில் கலாநிதி யூசுப் அல் கர்ளாவி அவர்களது சில மேற்கோள்களைத் தொகுத்து நோக்கிய போது, கலாநிதி யூசுப் அல் கர்ளாவி, 'வஸதிய்யா' எனும் இஸ்லாத்தின் நடுநிலை குறித்து ஆழ்ந்து பேசியவர்களில் முக்கியமானவர். வஸதிய்யாவின் ஆழ அகலங்களை ஆதாரபூர்வமாய் வெளிக்கொண்டு வந்ததில் அவரது பங்கு மகத்தானது.

வஸதிய்யா குறித்து அவர் பேசிய பரிமாணங்களில் வஸதிய்யா என்பது ஒரு மனித குலத் தேவை என்பது மிக முக்கியமான ஒரு பகுதி. அதாவது பக்கம் சாராத, நீதியான, இலக்கு நோக்கிய, ஸ்தீரமான ஒரு வாழ்வு முறை மனித இனத்தின் அத்தியவசியத் தேவைகளில் ஒன்று. அந்த வாழ்வு முறையைத்தான் அல்குர்ஆன் மனிதர்களுக்குக் கற்றுக் கொடுக்கிறது. 'ஹுதன் லின்னாஸ்' மனிதர்களுக்கான வழிகாட்டி என அல்குர்ஆன் தன்னை அறிமுகப்படுத்தியது இந்தப் பின்புலத்தினாலாகும்.

இந்த வாழ்வு முறையை, மனித இனத்திற்கு அறிமுகப்படுத்தும் பொறுப்பு முஸ்லிம்களிடம் இருக்கின்றது. அதனையே அல்குர்ஆன் இவ்வாறு கூறியது: 'நீங்கள் மக்களுக்கு சாட்சியாளர்களாக இருக்க வேண்டும் என்பதற்காக' (பகரா: 143 ) என்கிறது.

இந்த இடத்தில் கலாநிதி கர்ளாவி அவர்கள், வஸதிய்யா எனும் பண்பின் மூலம் மனித குலத் தேவை மிகச் சரியாக நிறைவேற்றப்படுவதற்கான ஒரு நிபந்தனையைக் குறிப்பிடுகின்றார். அதாவது, வஸதிய்யா எனும் நடுநிலை வாழ்வு முறையை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு சமூகக் கட்டமைப்பு காணப்படல் வேண்டும். அந்த முன்மாதிரியிலிருந்தே மனித இனம் கற்றுக் கொள்கிறது என்கிறார்.

இஸ்லாமிய முன்மாதிரியிலிருந்து மனித இனம் கற்றுக் கொண்டமை மிகத் தெளிவாக இஸ்லாத்தின் ஆரம்ப நூற்றாண்டுகளில் நடைபெற்றிருக்கிறது. சாட்சியாக இருத்தல் என்று அல்குர்ஆன் குறிப்பிட்டமையின் பொருள் இக்கருத்தையே பிரதிபலிக்கின்றது. ஏனெனில் இதன் அறபுப் பதமான 'ஷஹாதா' என்பது 'கண்களால் பார்த்தல்' உடன் கலந்திருத்தல்' போன்ற அடிப்படைக் கருத்துக்களை உள்ளடக்கிய சொல்லாகும். எனவே, பார்த்துப் பின்பற்றுதல் அல்லது கலந்து வாழ்ந்து கற்றுக் கொள்ளுதல் என்றே இங்கு பொருள் கொள்ளப்படுகிறது. அந்த வகையில் முஸ்லிம் சமூகத்தின் ஷஹாதத், ஒரு முன்மாதிரியான சமூகமாக வாழ்வதன் மூலமே மிகச் சரியாக நிறைவேற்றப்படுகிறது.

அந்த முன்மாதிரி சமூகக் கட்டமைப்பைப் பற்றி கலாநிதி கர்ளாவி அவர்கள் கூறும்போது, ''அந்த உம்மத்தில் இஸ்லாத்தின் பிரதிபலிப்பு, தூய்மையான ஏகத்துவமாகவும், உண்மையான ஈமானாகவும், பயனுள்ள அறிவாகவும், ஸாலிஹான செயலாகவும், சிறந்த ஒழுக்கமாகவும், நன்மையை நோக்கிய அழைப்பாகவும், சத்தியத்தையும் பொறுமையையும் மையப்படுத்திய பரஸ்பர உபதேசமாகவும், தக்வாவையும் நன்மையையும் மையப்படுத்திய பரஸ்பர ஒத்துழைப்பாகவும், அன்பையும் தயாளத்தையும் மையப்படுத்திய பரப்புரையாகவும் இவை அனைத்துக்குமான உழைப்பாகவும் காணப்படல் வேண்டும். அப்பொழுதுதான் இது மக்களுக்காக அனுப்பப்பட்ட சிறந்த சமூகமாகக் காணப்படும்.'

தொடர்ந்து கூறுகையில், 'அது மத்திமத்தை பிரதிபலிக்கும் சமூகம், வலதையோ இடதையோ சாராத சமூகம், கிழக்கின் கம்யூனிஸத்தையோ மேற்கின் முதலாளித்துவத்தையோ சாராத சமூகம். அது தனித்துவமான போக்கும் சுதந்திர ஆளுமையும் உடைய சமூகம்'.

மேலும் கூறுகையில், 'அது தனக்காக மாத்திரம் வாழாத ஒரு சமூகம். தனது வயிற்றை மாத்திரம் நிரப்பவும், அதனது ஆசைகளை மாத்திரம் நிறைவேற்றவும் தனது தேவைகளை மாத்திரம் செய்து கொள்ளவும் நினைக்காத சமூகம். பிறருக்காக வாழும் சமூகம். அவதிப்படும் மனித இனத்தின் கவலைகளை தனது தோள்கள் மீது சுமக்கும் சமூகம். அது சர்வதேச தூதைச் சுமந்த சமூகம். மனிதர்களுக்காகவே அனுப்பப்பட்ட சமூகம். அதன் தூதுவர் உலகத்தாருக்கு அருள், எல்லோருக்குமான வழிகாட்டி. 'அவரை நாம் உலகத்தாருக்கான அருளாகவே அனுப்பினோம்' (அன்பியா: 107)' என்றார்கள்.

இவ்வாறான முன்மாதிரியான ஒரு சமூகமாக வாழ்வதன் மூலமே மனித இனத்தின் வழிகாட்டி என்ற பாத்திரப் பங்களிப்பை முஸ்லிம் உம்மத் மிகச் சரியாக வழங்க முடியும்.

அடுத்து கலாநிதி கர்ளாவி அவர்கள் முன்வைக்கின்ற மற்றொரு நிபந்தனை இருக்கின்றது. மனித குலத்திற்கு வழிகாட்டியாய் இஸ்லாத்தின் வஸதிய்யா அமைய வேண்டும் எனின், அதன் அமுலாக்கம் இரு தீவிர வடிவங்கள் அற்றதாய்க் காணப்படல் வேண்டும்.



அந்த இரண்டு வடிவங்களையும் கலாநிதி கர்ளாவி அவர்களுடைய வார்த்தைகளிலேயே கூறினால், 'முதல் வகையினர், தீவிர கடும்போக்கு கொண்டவர்கள். இவர்கள் மனிதர்களை சிரமத்திற்குள்ளாக்குவர். ஹராம்களின் வட்டம் இவர்களிடத்தில் விசாலமாகக் காணப்படும். இலகுவானதை விடவும் எப்பொழுதும் பேணுதலானதையே முற்படுத்துவர். சட்ட வசனங்களின் நேர்க் கருத்தையே எடுப்பர். ஷரீஆவின் நோக்கங்களைப் பார்க்க மாட்டார்கள். சமூகத்தை பெரும் சங்கடத்தில் தள்ளி விடுவர். அல்லாஹ் இலகுபடுத்தியதை மக்களுக்குக் கஷ்டமாக்குவர். மார்க்கம் எளிதாக்கியவற்றை சிக்கல்படுத்தி விடுவர். ஷரீஅத் விசாலமாக்கியவற்றை குறுகியதாக்கி விடுவர். மக்களுக்கு சலுகைகளை வழங்க மாட்டார்கள். நிர்ப்பந்த நிலையிலும் எதனையும் அனுமதிக்க மாட்டார்கள். சலுகை நிலைகளை ஏற்றுக் கொள்ளவும் மாட்டார்கள். கால், இட, சூழமைவுகளுக்கு ஏற்ப பத்வா மாற்றடைய முடியும் என்பதை அவர்கள் ஏற்பதில்லை. அவர்கள் இறந்த காலத்திற்குள்ளேயே தம்மை குறுக்கிக் கொண்டு விட்டனர். நிகழ்காலத்தில் வாழவுமில்லை. எதிர்காலம் பற்றிய ஒரு தூரப் பார்வையும் இல்லை. அவர்களது ஆழ்ந்த தத்துவம் என்னவெனின், முன்னோர் பின்னோருக்கு எதனையும் மீதம் வைக்கவில்லை. முன்னர் செய்யப்பட்டவற்றை விடவும் புதிதாக எதுவும் செய்வதும் சாத்தியமற்றது என்பர்.'

தொடர்ந்தும் கூறுகையில், 'அவர்கள் பிறரை அங்கீகரிக்க மாட்டார்கள். அவர்களுடன் கருத்துப் பரிமாறவும் மாட்டார்கள். முரண்படுவோருடன் விட்டுக் கொடுத்துச் செல்ல மாட்டார்கள். உலகை கறுப்புக் கண்ணாடி கொண்டுதான் பார்ப்பார்கள். எல்லா மனிதர்களையும் - அவர்கள் தீங்கிழைக்காதோராக இருந்தாலும் கூட - இஸ்லாத்தின் எதிரிகள் என்றே நோக்குவர். அவர்கள் தமது பூமியில் வாழும் நிலையிலேயே, இஸ்லாத்தைத் தழுவும் வரை அல்லது மண்டியிட்டு ஜிஸ்யா தரும்வரை, அவர்கள் எதிர்த்துத் தாக்கப்பட வேண்டும், என்பர். முஸ்லிம்களுக்கும் ஏனையோருக்கும் இடையிலான உறவு, அடிப்படையில் யுத்தமாகவே அமையும்; சமாதானமல்ல என்பர்'.

இரண்டாவது வகையினர் பற்றிக் கூறுகையில், 'இரண்டாம் வகையினர், பொருட்படுத்தாத கவனயீன போக்குக் கொண்டோர். இவர்களிடம் அகீதா, வாஜிப், ஹராம் போன்ற வரையறைகள் இருப்பது போலவே தென்பட மாட்டாது. தீன் இவர்கள் கைகளில் பிசைந்த மாவு போல்தான் இருக்கிறது. அதனை எப்பொழுது வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் வடிவமைப்பார்கள். இவர்களிடத்தில் தீனில் மாறாதது என்று ஒன்றுமில்லை. அனைத்துமே புதிய இஜ்திஹாதுகளுக்கும் புதிய வாசிப்புகளுக்கும் உட்படக் கூடியவையே என்பர்.

இடப்புறத்திலிருந்து வலப்புறத்திற்கும் வலப்புறத்திலிருந்து இடப்புறத்திற்கும் மார்க்கத்தை இவர்கள் மாற்றிக் கொண்டிருப்பர். மார்க்கத்தில் நிறுவப்பட்ட ஒன்றும் மறுக்கப்படும். மறுக்கப்பட்ட ஒன்றும் நிறுவப்படும். சத்தியம் அசத்தியமாகலாம். அசத்தியம் சத்தியமாகலாம். ஏன் இல்லை? இவர்கள் பிக்ஹையும் அதன் அடிப்படைகளையும் அதன் இமாம்களையுமே மறுக்கின்றனர். சுன்னாவோடு விளையாடுகின்றனர். அல்குர்ஆனோடு அதன் விளக்கங்கள் என்ற பெயரில் கேலிக் கூத்தாடுகின்றனர்.'

தொடர்ந்து கூறுகிறார்: 'அல்குர்ஆனையும் சுன்னாவையும் 'புதிய வாசிப்பு' செய்ய நினைப்போர், நபியவர்கள் ஸஹாபாக்களுக்குக் கற்பிக்காத, ஸஹாபாக்கள் தாபிஈன்களுக்குக் கற்பிக்காத ஒரு புதிய மார்க்கத்தையே கொண்டு வர நினைக்கின்றனர்.

கடந்த பதினான்கு நூற்றாண்டுகளாக இந்த உம்மத் ஹலால் என்று நம்பியதை ஹராமாக்கும். அதுபோல் ஹராம் என்று நம்பி வந்ததை ஹலாலாக்கும். புதிய மார்க்கம் அது. அங்கு நம்பிக்கைகள் மாறலாம். விழுமியங்கள் மாற்றப்படலாம். வாஜிப்கள் இல்லாது போகலாம். அல்லாஹ் அனுமதிக்காதவையும் சட்டமாகலாம்'.

மேலும் சொல்கிறார், 'இதன் மூலம் ஒவ்வொரு காலத்திற்கும் ஒரு மார்க்கம், ஒவ்வொரு ஊருக்கும் ஒரு மார்க்கம், ஒவ்வொரு குழுவினர்க்கும் ஒரு மார்க்கம். ஏன் ஒவ்வொரு தனிநபர்க்கும் ஒரு மார்க்கம் என்ற நிலையே ஏற்படப் போகிறது. உம்மத்தை ஒன்றிணைக்கும் காரணியாக அங்கு மார்க்கம் இருக்காது.

இவ்வாறான ஒரு மார்க்கத்தின் மூலம் ஒரே நம்பிக்கையுடன் ஒரே ஷரீஅத்துடன், ஒரே விழுமியங்களுடன், ஒரே தூதுடன் ஒரு உம்மத் தோற்றம் பெறுவது சாத்தியப்பட மாட்டாது. மாற்றமாக இங்கு மார்க்கம் பிரிக்கும் காரணியாகவே இருக்கும்; சேர்க்க மாட்டாது. தூரமாக்கும் காரணியாகவே இருக்கும்; நெருக்க மாட்டாது. தகர்க்கும் காரணியாகவே இருக்கும்; கட்ட மாட்டாது' என்கிறார்.

மார்க்க அமுலாக்கத்தின்போது இந்த இருவகை வடிவங்களும், வஸதிய்யாவைப் பிரதிபலிக்க மாட்டாது. எனவே மனித குலத்திற்கான ஒரு வாழ்வு முறையாக இவை அமைவது சாத்தியமற்றது. மனித குலத்திற்கான வாழ்வு முறை வழிகாட்டி இந்த இரண்டு வடிவங்களும் தவிர்ந்த வேறோர் வடிவமே.

அதுபற்றிக் கலாநிதி கர்ளாவி அவர்கள் கூறுகிறார்கள். 'இஸ்லாத்தில் வஸதிய்யா என்பது இரண்டு தரப்புகளுக்கு மத்தியில் நடுநிலை பேணுவதாகும். நடுநிலை என்பது ஒவ்வொரு தரப்புக்கும் உரிய உரிமையையும் இடத்தையும் வழங்குவதாகும். ஒன்று மற்றையதை மீறக் கூடாது. உதாரணமாக தெய்வீகம் - மானுடம், ஆன்மீகம் - லௌகீகம், உலகம் - மறுமை, வஹி - பகுத்தறிவு, இறந்தகாலம் - எதிர்காலம், தனிமனிதன் - சமூகம், யதார்த்தம் - இலட்சியம், உரிமைகள் - கடமைகள், நிலையானது - மாறும் தன்மை, சட்ட வசனம் - இஜ்திஹாத், நேரடிப்பார்வை-இலக்கு மையப்பட்ட பார்வை, நஸ்ஸும் பகுத்தறிவும் போன்றவற்றிற்கு மத்தியில் ஒன்று மற்றையதை மீறாமல், ஒவ்வொன்றுக்கும் உரிய இடம் வழங்கப்படுதல் நடுநிலை எனப்படும்' என்கிறார்.

தொடர்ந்தும் கூறுகிறார்: 'நாம் எதிர்பார்க்கும் இஸ்லாம் அது நடுநிலை உம்மத்தின் இஸ்லாம். அதுதான் முதல் இஸ்லாம். குர்ஆனினதும் சுன்னாவினதும் இஸ்லாம். இலகுபடுத்தும் இஸ்லாம் சிரமப்படுத்துவதல்ல. நன்மாராயனம் சொல்லுதல் - வெறுப்பு ஏற்படுத்துவதல்ல. நளினம் -வன்முறையல்ல. புரிந்துணர்வு - வெறுத்தல் அல்ல. விட்டுக் கொடுத்தல் - வெறி கொள்ளுதல் அல்ல. உள்ளடக்கம் - புறத்தோற்றமல்ல. செயற்பாடு - வாதாட்டமல்ல. கொடுத்தல் - சொல்லிக் கொள்ளுதல் அல்ல. இஜ்திஹாத் - தக்லீத் அல்ல. புனரமைத்தல் - தேக்க நிலையல்ல. கட்டுக்கோப்பு - வரையறையின்மையல்ல. நடுநிலை - தீவிரம் அல்ல' என்கிறார்.

மேலும் கூறுகிறார்: 'அகீதாவின் மீது எழுந்த இஸ்லாம், அந்த நம்பிக்கையின் உயிர்நாடி ஏகத்துவம். இபாதாவின் மீது எழுந்த இஸ்லாம், அதன் உயிர்நாடி இஃலாஸ். பண்பாட்டின் மீது எழுந்த இஸ்லாம், அதன் உயிர்நாடி நன்மை. ஷரீஆத்தின் மீது எழுந்த இஸ்லாம், அதன் உயிர் நாடி நீதி. ஒற்றுமைப் பிணைப்பின் மீது எழுந்த இஸ்லாம், அதன் உயிர் நாடி சகோதரத்துவம்.

இவை அனைத்தினதும் விளைவு ஒரு நாகரிகம் அதன் உயிர் நாடி சமநிலையும் முழுமையும், அதன் கட்டுப்பாட்டுச் சக்தி நடுநிலையும் புனர்நிர்மாணமும், அதன் திறவுகோள் பொருத்தமான பழமையிலிருந்து பயன் பெறலும் பயனுள்ள புதியதை வரவேற்றலும்' என்கிறார்.

இன்னும் சொல்கிறார்: 'இந்த இஸ்லாம் மாத்திரமே, எம்மையும் மனித குலத்தையும் காக்க வல்லது, நாகரிகக் கப்பல் மூழ்கி விடாமலும், அதனோடு சேர்ந்து நாங்களும் மூழ்கி விடாமலும் பாதுகாக்கும் சக்தி இஸ்லாத்திடம் மாத்திரமே இருக்கிறது.'

எனவே, வஸதிய்யா என்பது ஒரு சமூகத்தின் எழுச்சிக்கு மாத்திரமன்றி, முழு மனித இனத்தினதும் எழுச்சிக்கு வழியமைக்கிறது. தீவிரமற்ற நடுநிலைப் போக்கு, சிறந்த உயர்ந்த தெரிவு, ஸ்திரமான வாழ்வொழுங்கு, இலக்கு நோக்கிய நேரான வழி, நீதி போன்ற கருத்துக்களை வஸதிய்யா குறிக்கிறது. இவையனைத்தும் மனித இனத்தின் சுபீட்சத்திற்கும் சந்தோசத்திற்கும் உரிய காரணிகளாகவே அமைகின்றன.

நீதி, சமாதானம், பாதுகாப்பு, சமத்துவம், சுதந்திரம், இஸ்திரப்பாடு போன்ற மானுட விழுமியங்கள், வஸதிய்யாவின் உள்ளார்ந்த கருத்தினுள்ளே மிகத் தெளிவாக உட்பொதிந்து காணப்படுகின்றன. எனவே வஸதிய்யா என்பது ஒரு மானுட எழுச்சிச் சிந்தனை. இதனைத்தான் கலாநிதி கர்ளாவி அவர்கள் வஸதிய்யா ஒரு மனித குலத் தேவை என்று குறிப்பிட்டார்கள்.


இறுதியாக, கலாநிதி கர்ளாவி அவர்கள் பேசிய கருத்துக்களை சாரம்சப் படுத்தினால் இவ்வாறு கூறலாம். மனித குல எழுச்சி சிந்தனையான வஸதிய்யா இஸ்லாத்தில் மாத்திரமே மிகச் சரியாக உட்பொதிந்திருக்கிறது. ஏனெனில், அது அல்லாஹ்விடமிருந்து வந்தது. அந்த வகையிலேயே இஸ்லாம் மனித குல வழிகாட்டியாக மாறுகிறது.

இந்த வழிகாட்டும் பணி வெறுமனே சிந்தனைப் பரிமாற்றமாக மாத்திரம் நடைபெற மாட்டாது. மாற்றமாக ஒரு முன்மாதிரியைப் பார்த்து அதனோடு கலந்து வாழ்ந்து பெற்றுக் கொள்ளும் வகையிலும் காணப்படல் வேண்டும். அதுவே நிலையானதும் நீண்ட கால விளைவைத் தரக்கூடியதாகவும் காணப்படும். இங்குதான் முன்மாதிரியான முஸ்லிம் உம்மத்தின் இருப்பு ஒரு முக்கிய நிபந்தனையாகிறது.

அந்த உம்மத்தில் இஸ்லாத்தின் பிரதிபலிப்பு பழமைக்கும் புதுமைக்கும் நடுவில் அதன் மூலவேர் சிதையாமலும் கால வளர்ச்சி மாற்றங்களை முறையாகக் கையாளும் விதத்திலும் அமைய வேண்டும். அப்பொழுதுதான் அது மனித குல வழிகாட்டியாய்க் காணப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன ஒருமைப்பாடு:



# உருவாக்குவதற்கான உத்திகள்

ஏற்கனவே நாம் கவனத்தின் முக்கியத்துவம் குறித்து விரிவாக விளக்கினோம் கவனம் சாத்தியமாயின் அடுத்த கட்டம் மன ஒருமைப்பாடாகும். மன ஒருமைப்பாடு இல்லாத மாணவர்கள் கற்றலில் சோபிப்பது சாத்தியமில்லை. இன்று அனேக மாணவர்கள் எதிர்நோக்கும் பாரிய கற்றல் பிரச்சினை; மன ஒருமைப்பாடு இன்மையே. இதனால், அவர்கள் அவதிப்படுகின்றனர்.

மன ஒருமைப்பாடு சாத்தியமாயின் சிறிய சிறிய சத்தங்களுக்கு மத்தியிலும் கற்றலைத் தொடர முடியும் என கல்வி உளவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர். பாடத்தை மனதால் வாசிப்பதற்கும் கிரகிப்பதற்கும் மன ஒருமைப்பாடு இன்றியமையாதது. மன ஒருமைப்பாட்டை வளர்ப்பதற்கு அல்லது ஏற்படுத்துவதற்கு மாணவர்கள் கைக்கொள்ளவேண்டிய சில நடைமுறைகள் குறித்து இங்கு நோக்குவோம்.

### 1. உடற்பயிற்சி / யோகாசனம்

பாடசாலை முடிந்ததும் பகல் உணவை எடுத்துக் கொண்டு மேலதிக வகுப்புக்களுக்குச் செல்லும் மாணவர்கள் மாலை வேளைகளில் ஆக குறைந்தது ஒரு மணிநேரமாயினும் உடற்பயிற்சியில் ஈடுபடவேண்டும். விளையாட்டுகளும் உடற்பயிற்சியும் உடல் புத்துணர்ச்சிக்கும் சீரான இரத்த ஓட்டத்திற்கும் வழி வகுக்கின்றது. மூளைக்குத் தேவையான அளவு இரத்தம் சீராகப் பாய்வதன் மூலம் உடல் உற்சாகமடைந்து களைப்பு நீங்குகின்றது.

மன ஒருமைப்பாட்டில் உடலை உற்சாகமாக வைத்திருத்தல் முக்கியமானது. இது போன்றே யோகாசனங்களிலும் ஈடுபடலாம். அவை உள ஆரோக்கியத்திற்கும் மன ஒருமைப்பாட்டிற்கும் உறுதுணையாக இருக்கின்றன. விளையாட்டில் ஈடுபடாத அல்லது உடற்பயிற்சியில் ஆர்வமற்ற மாணவர்கள் இலகுவில் சோர்வடைவர். அது அவர்களின் மன ஒருமைப்பாட்டை எதிர்மறையாகப் பாதிப்பதோடு கற்றலையும் பாதிக்கின்றது.

### 2. கற்றலுக்கு தெரிவு செய்யும் இடம்.

பாடசாலைகள் நகர்ப்புறங்களின் மையப்பகுதிகளிலிருந்து சற்று தூர உள்ள அமைதியான இடங்களில் அமைய வேண்டும். இது கல்வியியலாளர்களின் வேண்டுகோள். வாகனங்கள் செறிவாகச் செல்லும் வீதிகளுக்கு அருகாமையில் வகுப்பறைகள் அமைக்கப்படுவது மாணவர்களின் கற்றலை வெகுவாக பாதிக்கின்றது. நகர்ப்புறப் பாடசாலைகளில் சில, இவ்வாறு தூர நோக்கின்றி ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. இது பாடசாலை வகுப்பறைக் கற்றலை நிச்சயம் பாதிக்கின்றது.

மாணவர்கள் கற்கும் வீட்டுச் சூழலும் அமைதி நிறைந்ததாக இருக்க வேண்டும். சத்தங்கள், சந்தடிகள் ஏனைய இடையூறுகள் இல்லாமல் இருப்பது மனதை ஒருமுகப்படுத்த உதவியாக இருக்கும். அமைதியைக் குலைத்து, கவனத்தை கலைப்பவை மன ஒருமைப்பாட்டிற்கு பெரும் அச்சுறுத்தலாகும். வீட்டு பாடங்களை மீட்பதிலோ குறிப்புக்களை விளங்குவதிலோ பரீட்சைக்குத் தயாராகுவதிலோ கற்கும் இடத்தின் அமைதியான சூழலுக்கு பெரும் பங்குள்ளது.

ஒரு மாணவன் சீரியசாக இருந்து மிகுந்த உற்சாகத்துடன், தேவையை உணர்ந்து, ஆசையுடனும் ஆவர்வத்துடனும் பாடக் குறிப்புக்களைப் புரட்டுகின்றான். துரதிஷ்டமாக, பக்கத்து வீட்டு வானொலி அலறும் சத்தம் அல்லது சினிமா படங்களில் வரும் சண்டைக் காட்சிகளின் சத்தம் அவன் காதுகளுக்கு எட்டினால் நிச்சயமீ அவனது மன ஒருமைப்பாடு குலைந்து விடும். அதன் தொடராகவுள்ள கிரகித்தல், நினைவில் வைத்தல் என்பவற்றுக்கும் பங்கம் விளைவிக்கும்.

வீட்டில் ஒரு அறையில் இருந்து மாணவன் படிக்கின்றான். வீட்டிலோ அயல் வீட்டிலோ தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் நாடகத் தொடர்கள் கவனக் கலைப்பானாக மாறும்போது அங்கும் மன ஒருமைப்பாடு சாத்தியமில்லை. வானொலிகளையும் தொலைக்காட்சிகளையும் அயல் வீட்டிலிருந்துதான் மாணவர்கள் எதிர்கொள்ள வேண்டுமென்பதில்லை. சொந்த வீட்டிலேயே பெற்றோர்களோ அடுத்த சகோதரர்களோ பயன்படுத்தும்போது கற்றலில் ஈடுபடும் மாணவனுக்கு அது இடைஞ்சலாக மாறிவிடும்.

பெற்றோர்கள் இத்தவறை இழைப்பார்களாயின் வயது வந்த மாணவர்கள் இதனை அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவது முக்கியமானது. இந்த வகையில் கற்றலில் மன ஒருமைப்பாட்டைப் பாதிக்க கூடிய தடைகள் வீட்டுச் சூழலில் பல உள்ளன.

வானொலி, தொலைக்காட்சி, கணனிகள், அவற்றின் இணைய வசதிகள், ஸ்மாட் கைபேசிகள், டிஜிடெல் கமராக்கள் என்பவற்றில் மாணவர்களுக்குள்ள அபரிமிதமான ஈடுபாடும் நிச்சயம் மன ஒருமைப்பாட்டைப் பாதிக்கும். இத்தகைய மின்னியல் உபகரணங்களையும் இலத்திரனியல் கருவிகளையும் வீட்டில் கவனமாக கையாள்தல் வேண்டும்.

பிள்ளைகளுக்கு முன்பாக கணவன்-மனைவிக்கிடையில் இடம்பெறும் சச்சரவுகள், கைகலப்புக்கள், மோதல்கள், குடும்பப் பிணக்குகள், வாய் முறுகல்கள், வன்முறைகள் என்பனவும் பிள்ளைகளின் மன ஒருமைப்பாட்டை பெரிதும் பாதிக்கலாம். இதனை பெற்றோர் உணர்ந்து செயற்பட வேண்டும்.

வளரிளம் பருவ மாணவர்கள் இந்த சவாலைக் கடந்து செல்லும் வகையில் மன உறுதியும் தைரியமும் கொண்டிருக்க வேண்டும். நல்ல பெறுபேற்றைப் பெற வேண்டும் என்ற இலக்கு தெளிவாக இருந்தால், இந்தச் சவாலை இலகுவாக தாண்டிச் செல்லலாம்.

மாணவன் கற்கும் இடத்திற்குச் சமீபமாக இடம்பெறும் தகராறுகள், சத்தம் நிறைந்த வாய்த்தர்க்கங்கள்கூட மன ஒருமைப்பாட்டைப் பாதிக்கும். பொருட்களை கூவி விற்கின்றவன் மதுபான போதையில் தர்க்கிப்பவன், வீதிகளில் காட்டுக்கூச்சல் போடுபவன் இவர்களின் சத்தங்களிலிருந்தும் கற்கும் மாணவன் விடுபட வேண்டும்.

சில மாணவர்களுக்கு மெல்லிய சத்தம் கூட கற்பதற்குத் தடையாக இருக்கும். அவர்கள் ஒன்றை மிகத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். 100 வீத அமைதி என்பது என்தொவாரு சூழலிலும் சாத்தியமற்றது. அதற்குரிய எந்த உத்தரவாதமும் தருவதற்கில்லை. அது சாத்தியப்படப் போவதுமில்லை.

எனவே, மெல்லிய சத்தங்களுக்கிடையிலும் சிறப்பாக படிக்க வேண்டுமென்ற மனோ நிலையை மாணவர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும் அது அவர்களின் மானசீக பலத்தைப் பொறுத்தது. கற்றலின் தேவையை உணரும் அளவிற்கு அங்கும் நாம் மன ஒருமைப்பாட்டை சாத்தியமாக்கலாம்.

### 3. சீரான மெய்நிலை

ஒரு மாணவன் அல்லது பிள்ளை ஆசிரியர் வகுப்பறையில் கற்றுத் தரும் போதும் வீட்டில் தனியாக இருந்து கற்கும்போதும் அவனது மெய்நிலை சீராகவும் ஒழுங்காகவும் வைத்திருப்பது அவசியம் ஏனெனில் சீரான மெய்நிலைக்கும் மன ஒருமைப்பாட்டிற்கும் இடையில் நெருங்கிய தொடர்பு உள்ளது. இதனை ஆய்வுகள் நிறுவியுள்ளன.

ஸ்கொட்லாந்து பல்கலைக்கழக உளவியல் பேராசிரியர் ஒருவர் இது குறித்து விரிவாக ஆராய்ந்துள்ளார். அதாவது, மன ஒருமைப்பாட்டில் உடலின் சீரான அமைப்பும் தாக்கம் செலுத்துகின்றது என்பதே அவரது ஆய்வாகும். மேசை கதிரையில் அமர்ந்திருக்கும் முறை சீரானதாக இருக்க வேண்டும். கால் பாதங்களை முன்னே உள்ள மேசைமேல் வைத்துக் கொண்டு, கதிரைகளை இரண்டு காலில் வைத்தவாறு குறிப்பு புத்தகத்தின் மீது கைகளை தாங்கிக் கொண்டு வாசிக்கும்போது அங்கு மன ஒருமைப்பாடு கைகூடாது.

பார்வை பாடக் குறிப்பின்மீது நிலைத்திருக்க முழு அவதானமும் பாடக் குறிப்பில் விள கிரகித்தல் தெளிவாக இடம்பெற்று செவிமெடுத்த அல்லது கண்களால் பார்த்த விடயங்களை மூளையில் சேமித்து பாதுகாக்க ஒரு மாணவனின் மெய்நிலை சீரானதாக இருக்க வேண்டும்.

கதிரையை மேசைக்கு சமீபமாக ஆக்கி கால்பாதங்களை மேசையின் கீழ் வைத்து முதுகை நேராக நிமிர்த்தி வைத்து சற்று தளர்வாகவும் வசதியாகவும் கைகளை மேசையின் மேல் வைத்து அமர்ந்து படிக்க வேண்டும். இங்கு தளர்வும் வசதியும் சீரான உடல் நிலையும் அவசியம். இது மாணவர்களின் மன ஒருமைப்பாட்டிற்கு துணை செய்கின்றது.

### 4. படிக்கும் சூழல்

படிக்கும் சூழல் சுத்தமாகவும் நேர்த்தியாகவும் ஆரோக்கியமானதாகவும் இருப்பதும் மன ஒருமைப்பாட்டிற்கு உதவ முடியும். நருமணங்களை படிக்கும் மேசைக்கு சமீபமாக தூவுவது கசக்கி வீசக்கூடிய குப்பைகளை போடுவதற்கு சிறிய குப்பை தொட்டியொன்றை பேணுவது முன்னை உள்ள சுவர்களை மெல்லிய வர்ணங்களால் தீட்டுவது போன்றன. இதமான மன ஒருமைப்பாட்டிற்கு வழி கோலுகின்றது. (பக்.14)

# மீள்பார்வை 20 ஆவது ஆண்டு நிறைவில்...

## சில நினைவுகள்

வாசகர்கள் கவனத்திற்கு, தவிர்க்க முடியாத காரணங்களால் அடுத்த இரு மாதங்களுக்கு மீள்பார்வை பத்திரிகை வெளிவராது என்பதனை வாசகர்களுக்கு அறியத் தருகின்றோம்.

இது 2000 டிசம்பர் மாத இதழ் (54) பக்கம் 13 இல் இடம்பெற்ற ஓர் அறிவித்தல். 2000 களில் மீள்பார்வை பத்திரிகை ஸ்டேஸ் வீதியிலுள்ள நஸார் நானாவின் வீட்டில் 2 ஆம் மாடியில் இயங்கி வந்தபோது, பத்திரிகைக்குப் பொறுப்பாக இருந்தவர் சகோதரர் இஸ்மத். பத்திரிகை அலுவலகத்தின் சில ஒழுங்குமுறைகள் மற்றும் நிதிப் பற்றாக்குறை குறித்த நீண்ட கலந்துரையாடலொன்று 1999 ஆகஸ்ட் 02 இல் இதே அலுவலகத்தில் இடம்பெற்றது. அதில் நான், யூ.எல். நியாஸ், ஜனூஸ், அய்யூப் கான், இஸ்மத் நானா, இம்தாத் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அன்றைய தினம் பகல் பொழுதொன்றில் ஆரம்பித்த கலந்துரையாடல், அடுத்த நாள் இரவு வரை நீடித்தது. அலுவலக ஒழுங்குகளே அதன் மையப் பொருளாக இருந்தது. மாறுபட்ட கருத்துக்கள் விவாதிக்கப்பட்டன. அனல் பறக்கும் சொற் போர் நடந்தது. விவாதம் முற்றுவதைக் கண்டபோது கைகலப்பாக முடியுமோ என்ற அச்சம் கூட ஏற்பட்டது. அந்தக் கலந்துரையாடல் ஆரோக்கியமான தீர்மானங்கள் எதுவும் இல்லாமலேயே முடிவுக்கு வந்தது.

அடுத்த மூன்று மாதங்களும் பொறுப்பாளருக்கும் பணியாளர்களுக்கும் இடையில் எவ்வித தொடர்பும் இல்லாமலேயே பத்திரிகை வெளிவந்தது. இம்மூன்று மாதங்களும் பத்திரிகையை தொடர்ந்தும் வெளியிடுவது பற்றிய விவாதங்கள் மேல் மட்டத்தில் நடைபெற்று வந்ததை பின்னர்தான் அறிய முடிந்தது.

டிசம்பர் மாத இதழில் ஜனவரி, பெப்ரவரி மாதங்களுக்கான பத்திரிகை வெளிவராது என்ற அறிவித்தலை பிரசுரிக்குமாறு மேலிடத்திலிருந்து கட்டளை வந்தது. அதன்படி 2000 ஜனவரி இதழ் வெளிவரவில்லை. மீள்பார்வை பத்திரிகை வரலாற்றில் இரு முறை இரு இதழ்கள் வெளிவரவில்லை. பத்திரிகை வெளியீடு முதன் முறையாக நிறுத்தப்பட்டமை ஜனவரி 2000 இல்தான்.

மேல் மட்ட முடிவு பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதை அடுத்து உஸ்தாதிடமிருந்து எனக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில், விரும்பினால் ஏதேனும் ஓர் ஊருக்கு முழு நேர ஊழியராகச் செல்லலாம். அல்லது இரு மாதங்கள் ஓய்வெடுத்துக் கொள்ளலாம் என்று குறிப்பிட்டிருந்தார். அந்தக் கடிதம் அப்படியே பாதுகாப்பாக இன்றும் எனது கோப்பில் உள்ளது.

நான் உடனே ஊருக்குக் கிளம்பினேன். இரு வாரங்களின் பின்னர், அம்பாறையில் பணியாற்றிக் கொண்டிருந்த அக்கரைப்பற்றைச் சேர்ந்த என்ஜினியர் றுமைஸ், என்னை இறக்காமத்தில் சந்தித்து மீள்பார்வையை தொடர்ந்தும் முன்னெடுக்கும் பொறுப்பை நான் ஏற்க வேண்டும் என்று வற்புறுத்தினார். அவர் அப்போது ஆலோசனை சபையின் அங்கத்தவர்.

சுமார் மூன்று வாரங்கள் கடந்த நிலையில், 2000 ஜனவரி மாதத்தில் இரவு 9.00 மணியளவில் ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. சம்மாந்துறை கலீல் நளீமிய்யின் வீட்டிலிருந்து உஸ்தாத் என்னோடு தொடர்பு கொண்டார். நாளை காலை 9.00 மணியளவில் சம்மாந்துறைக்கு வர முடியுமா என்று கேட்டார். சரி என்று கூறிவிட்டு, மறுநாள் காலை கலீல் நளீமியின் வீட்டில் வைத்து உஸ்தாதை சந்தித்தேன்.

மீள்பார்வை பத்திரிகையில் அடுத்த இரு மாதங்களுக்கு பத்திரிகை வெளிவராது என்ற செய்தி பிரசுரிக்கப்பட்ட சூழமைவு மிகவும் பதட்டமாக இருந்தது. ஏதோ ஒரு நம்பிக்கையீனம், நிராசை அங்கு நீடித்தது. பத்திரிகை இத்துடன் நின்று விட்டது என்றே எண்ணத் தோன்றியது.

இச்சூழ்நிலையில் உஸ்தாத் என்னை ஏன் அழைக்கின்றார் என்ற குழப்பம் என்னைச் சூழ்ந்தது. ஒரு மாதம் பத்திரிகை வெளிவராத நிலையில், பத்திரிகையைத் தொடர்ந்தும் வெளிக்கொணர வேண்டும் என்ற கோரிக்கைகளும் அழுத்தங்களும் பல தரப்பிடமிருந்தும் வந்த வண்ணம் இருந்தன.

மீள்பார்வை அப்போது வெறும் 16 பக்கங்களைத்தான் கொண்டிருந்தது. வர்ணப் பக்கம் எதுவுமில்லை. வடிவமைப்புக் கூட மிகக் கவர்ச்சியாய் இல்லை. ஆனால், அது வெளிவந்த தருணம் முக்கியமானது. இலங்கை முஸ்லிம்களிடையே எந்தப் பத்திரிகையும் இல்லாத ஒரு காலகட்டத்தில், முஸ்லிம்கள் பேரினவாத சக்திகளாலும் தமிழ் குறுந் தேசியவாதிகளாலும் ஒடுக்கப்பட்ட ஒரு காலகட்டத்தில் அது வெளிவந்ததால் சமூக மட்டத்தில் அதற்கென்று ஒரு தனி இடத்தை அது பிடித்திருந்தது.

பத்திரிகை நின்று விட்டது என்றவுடன் இலங்கை வாசகர்களிடமிருந்து மட்டுமன்றி, வெளிநாட்டு தமிழ்ச் சூழலிலிருந்தும் தொலைபேசி அழைப்புகள், கடிதங்கள் வந்து குவிந்தன. மலேசியாவிலிருந்து வெளிவரும் 'நம்பிக்கை' இதழின் ஆசிரியர் டத்தோ முஹம்மத் இக்பால், 'விடியல்' சஞ்சிகையின் ஆசிரியர் குலாம் போன்றோர்களும் பத்திரிகையைத் தொடர்ந்தும் கொண்டு வருமாறு வேண்டினர்.

இந்நிலையில்தான், உஸ்தாத் என்னை அழைத்திருக்கிறார் என்பதைப் பின்னர்தான் புரிந்துகொள்ள முடிந்தது. கலீல் நளீமியின் வீட்டில் உரையாடல் தொடர்கிறது. பத்திரிகையை பெப்ரவரி மாதத்திலிருந்து கொண்டு வர வேண்டும். ஸ்டேஸ் வீதியிலிருந்து **Editorial Unit** திஹாரிக்கு மாற்றப்படும். இதன் பின்னர் **Editorial Incharge** ஆக நீங்கள் இருக்க வேண்டும் என்றார் உஸ்தாத்.

அப்போது இரு மாதங்களுக்கு வெளிவராது என்ற அறிவித்தலின்படி, மார்ச் மாதம் தானே பத்திரிகை வெளிவர வேண்டும் என்றேன். இல்லை, ஏற்கனவே பல தொலைபேசி அழைப்புகளும் கோரிக்கைகளும் வந்த வண்ணமுள்ளன. உடனடியாக பத்திரிகைப் பணிகள் தொடங்க வேண்டும் என்றார் உஸ்தாத்.

புதிய திஹாரிப் பொறுப்பாளராக ஸபீர் சேர் நியமிக்கப்பட்டதோடு, ஆலோசனை சபைப் பொறுப்பாளராக டொக்டர் ஸைபுல் இஸ்லாம் நியமிக்கப்பட்டார். 2000 ஜனவரி மாதத்தின் கடைசிப் பகுதியில் 'ரிபாத் கலாசார நிலையத்தின் முன் பகுதியில் அமைந்துள்ள ஓர் சிறிய அறை மீள்பார்வை பணிகளுக்காக ஒழுங்குபடுத்தப்பட்டது.

ஆசிரியர் ஸபீர் மற்றும் பாக்கிர் நானா ஆகியோர் இதை ஒழுங்குபடுத்துவதில் மும்முரமாக ஈடுபட்டனர். ஏற்கனவே ரிபாத்தில் இருந்த தொலைபேசி மீள்பார்வை பாவனைக்காக ஒதுக்கப்பட்டதோடு, சகோதரர் ராபிக் வழங்கிய ஒரு குளிரூட்டியும் அங்கு பொருத்தப்பட்டது.

என்னுடன் பணியாற்றுவதற்கு கஹடோவிடயைச் சேர்ந்த ஹிஷாம் நளீமியும் நியமிக்கப்பட்டார். சகோதரர் பர்ஸான் தட்டச்சு வேலைகளில் பெருமளவு பங்கெடுத்தார். அப்போது அவர் அஸ்லம் ஆசிரியரின் கணினி பயிற்சி நிறுவனத்தில் ஒரு போதகராகப் பணியாற்றி வந்தார். மீள்பார்வையின் பக்க வடிவமைப்பு அஸ்லம் ஆசிரியரிடம் வழங்கப்பட்டது. நான் கொழும்பிலிருந்து மூன்று நாட்கள் ரிபாத்திற்கு செல்ல வேண்டும் என பணிக்கப்பட்டேன். சிறிது காலத்தின் பின்னர், நான் அங்கு தங்கியிருந்தே பணிகளைக் கவனிக்க வேண்டியதாயிற்று. இப்படி 2000 ஜனவரி கடைசி வாரத்திலிருந்து 152/4, ஏ.ஆர்.எம். ஜுனைத் மாவத்தை, திஹாரி என்ற முகவரியிலிருந்து மீள்பார்வை இயங்கத் தொடங்கியது.

அபூ ஆகிப் ஸெய்ன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மிகப் பெரிய ஆபத்தில்... (6ம் பக்கத் தொடர்)

செலுத்தக் கூடிய வர்களாக இருக்கலாம். ஆனால், ஏனைய மாகாணங்களில் வாழும் முஸ்லிம்களின் நிலமை என்ன?

உதாரணமாக மத்திய அரசாங்கத்தில் தற்போது சுமார் 20 பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பல அமைச்சர்கள் இருக்கிறார்கள். ஆனால், பிராந்தியங்களில் கிழக்கு மாகாணத்தைத் தவிர ஏனைய எந்த மாகாணத்திலாவது ஒரு முஸ்லிம் அமைச்சர் இருக்கிறாரா? இதன் அர்த்தம் என்ன? நாம் இந்த நாட்டின் அனைத்துப் பாகங்களிலும் சிதறி வாழ்கிறோம். எனவே, அழுத்தம் செலுத்தக் கூடிய ஒரு சமூகமாக இல்லாத சூழ்நிலையில், அந்தப் பிராந்தியங்களுக்கு அர்த்தமுள்ள அதிகாரங்கள் வருமாக இருந்தால், இந்த சமூகத்தின் நிலமை என்ன?. எனவே, அதிகாரப் பகிர்வு எங்களுக்கு கூடுமா? கூடாதா? என்பதை நாம் உடனடியாக முடிவெடுக்க வேண்டும். அதற்காக மிக வேகமாக செயற்பட வேண்டும்.

### பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள்

அதேபோல், இந்த அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வுக்குள் பொலிஸ் அதிகாரங்கள் வருமாக இருந்தால், நாட்டில் சிதறி வாழும் சிறுபான்மை முஸ்லிம்களின் நிலமை என்ன? இதனை கடந்த அரசாங்கத்தில் அழகாகக் கண்டோம். அதாவது, கட்டளையிடுபவர் நல்லவராக இருந்தால் நிம்மதி, இல்லையேல் இந்த சிறுபான்மை முஸ்லிம்களின் நிலையோ பரிதாபம்தான். இது மிகப் பெரிய ஆபத்தான நிலை.

காணி அதிகாரங்களும் இவ்வாறே நோக்கப்பட வேண்டும். உதாரணமாக புலிகளால் ஆக்கிரமிக்கப்பட்ட எத்தனையோ காணிகள் இன்னும் முஸ்லிம்களுக்கு வழங்கப்படவில்லை. புலிகள் அழிக்கப்பட்டு விட்டார்கள். இருந்தும் இக்காணிகளை செல்வாக்குள்ள கிழக்கு மாகாணத்திலேயே மீளப் பெற்றுக் கொள்ள முடியாவிட்டால், ஏனைய பிரதேசங்களில் சிறுபான்மையாக வாழும் முஸ்லிம்களின் நிலை என்ன? இவ்வாறான சந்தர்ப்பத்தில் மாகாணங்களுக்கு இவ்வதிகாரங்கள் வழங்கப்பட்டு சமஷ்டி என்ற முறையை முஸ்லிம்கள் ஆதரிக்கலாமா?

இந்த அரசியல் அமைப்பு மாற்றத்தில் முஸ்லிம் சமூகம் மூன்று கோணங்களில் ஆபத்துக்களை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறது. எனவே, நாம் விழித்துக் கொள்ள வேண்டும்.

1. இவ்வளவு காலமாக மத்தியில் குவிக்கப்பட்டிருந்த அதிகாரங்கள் பிராந்தியங்களுக்குக் கொடுக்கப்படப் போகின்றது. அந்தப் பிராந்தியங்களில் எங்களுக்கு செல்வாக்கில்லாத சூழ்நிலையில் இவ்வதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படலாமா?



2. பாராளுமன்றம் - இன்றுள்ள சூழ்நிலையில், எந்தக் கட்சியும் தனித்து ஆட்சியமைக்க முடியாத நிலை. எனவே, முஸ்லிம்களின் பாராளுமன்ற பிரதிநிதிகளுக்கு ஒரு பெறுமதி இருக்கிறது.

அதாவது, தேர்தல் முறையின் மூலம் முக்கிய சில மாற்றங்களை மேற்கொள்ள முயற்சிக்கிறார்கள். இப்போதுள்ள முறையின் மூலம் ஒரு தனிக்கட்சி ஆட்சியமைப்பதற்கான சந்தர்ப்பம் இல்லை. எனவே, சிறுபான்மையினரான முஸ்லிம்களுக்கு இதில் முக்கிய பங்கு இருக்கிறது. இதனை மாற்றிவிட்டால் இதுவும் இல்லாமல் போய்விடும்.

3. ஜனாதிபதி ஆட்சி முறை - ஜனாதிபதியைத் தீர்மானிக்கின்ற சக்தி முஸ்லிம்களிடம் இருக்கிறது. இதனை இல்லாமற் செய்வதற்காக முயற்சிக்கிறார்கள். இதனை முஸ்லிம்களின் பக்கத்தில் இருந்து சிந்தித்தால், ஜனாதிபதியைத் தீர்மானிக்கின்ற பங்கு இல்லாமல் போகப் போகின்றது.

எனவே, முஸ்லிம் சமூகம் ஆழமாக சிந்தித்து மிக வேகமாக செயற்பட வேண்டியுள்ளது. இச்சந்தர்ப்பத்தில் முஸ்லிம் சமூகத்தின் கல்வியலாளர்கள், சிந்தனையாளர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள் அவசரமாக செயற்பட வேண்டியுள்ளது. இல்லையேல் இப்பாரிய பாதிப்பில் இருந்து எமது சமூகத்தைக் காப்பாற்ற முடியாது.

## தேரவாத பௌத்தத்தின்... (01ம் பக்கத் தொடர்)



இலங்கையை மத்திய தள மாகக் கொண்டு மீண்டும் தென் கிழக்கு ஆசியாவில் தேரவாத பௌத்த மதத்தைப் பரப்புவதற்கு என்ன செய்ய வேண்டும் என பிக்குமார்கள் எமக்கு அறியத்தந்தால் அதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

தேரவாத பௌத்தத்தை நிலைநாட்டு வதற்கு அரசாங்கம் செய்ய வேண்டியவைகள் தொடர்பில் ஒரு அறிக்கையை தயாரித்து தர முடியுமாக இருந்தால் எம்மால் அதனை நடைமுறைப்படுத்த முடியும். இது தொடர்பில் வெளிநாட்டிலுள்ள பிக்குமார்களையும் அழைத்து ஆலோசனை பெற்றுக் கொள்ளவும் முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

எந்த மதத்தினதும் சட்டதிட்டங்களிலோ, ஆன்மீக விடயங்களிலோ அரசாங்கம் தலையிட முடியாது என டி.எஸ். சேனாநாயக்க கூறியுள்ளார். பௌத்தம் தொடர்பிலான அனைத்து விடயங்களையும் நாங்கள் மகா நாயக்க தேரர்களின் விருப்பத்துடனேயே செய்கிறோம். கிறிஸ்தவ மத விவகாரங்களாக இருந்தாலும் அதனையும் கிறிஸ்தவமதத்தலைவர்களின்விருப்பத்தின்பேரிலேயேநடைமுறைப்படுத்துகிறோம். கத்தோலிக்க மகா சபைக்கு பிரச்சினைகள் இருந்தன. பாப்பரசர் அவர்களை ரோமாபுரிக்கு அழைத்து அவற்றுக்குத் தீர்வு வழங்கினார் எனவும் பிரதமர் தெரிவித்தார்.

## பாரிய நிதிமோசடி... (1 ம் பக்கத் தொடர்)




மேன்முறையீட்டு நீதிபதி பிரீதிபத்மன் சூரசேனவின் தலைமையில் நியமிக்கப் பட்டுள்ள இந்த ஐவர் அடங்கிய குழு இதற்கான பணிகளில் ஈடுபடவுள்ளது. பாரிய ஊழல் மோசடி, அரச சொத்து துஷ்பிரயோகம் தொடர்பில் ஆராய 2015 மார்ச் மாதம் ஜனாதிபதியினால் ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.

இதனூடாக கடந்த காலத்தில் இடம்பெற்ற பல்வேறு மோசடிகள் குறித்து விசாரணை முன்னெடுக்கப்பட்டு வருகிறது. ஆணைக்குழுவுக்கு கிடைக்கும் முறைப்பாடுகளின் தன்மைக்கேற்ப அவை தொடர்பில் செயற்படுவதற்காக அதிகாரங்களை அதிகரிக்குமாறு ஆணைக்குழுவினால் கோரிக்கை விடுக்கப்பட்டது. இதன் பிரகாரம் பெப்ரவரி முதலாம் திகதி வெளியிடப்பட்ட 195212 ஆம் இலக்க வர்த்தமானியினூடாக ஆணைக்குழுவின் அதிகாரங்கள் ஜனாதிபதியினால் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இந்த ஆணைக்குழு உறுப்பினர்களாக மேல் நீதிமன்ற நீதிபதிகளான மென்திஸ் செனவிரத்ன, குலதுங்க கிஹான் ஹிமான்சு, ஓய்வுபெற்ற கணக்காய்வாளர் பி.ஏ. பிரேமதிலக மற்றும் மேல் நீதிமன்ற நீதிபதி விகும் அதுல களு ஆரச்சி ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஏதும் நபர் தொடர்பில் விசாரணை முன்னெடுக்கையில் குறித்த நபரினதும் மட்டுமன்றி அவரது மனைவி, பிள்ளைகள் ஆகியோரின் வங்கிக்கணக்குகள் ஆவணங்கள் என்பவற்றை வழங்குமாறு வங்கி முகாமையாளர்கள் மற்றும் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் ஆகியோருக்கு வர்த்தமானி ஊடாக பணிக்கப்பட்டுள்ளது.

## சமூகம் தழுவிய... (3ம் பக்கத் தொடர்)



மாற்றங்கள், வட்டாரம் - தொகுதி எல்லை மீள்நிர்ணயம் தொடர்பான முயற்சிகள் குறித்தும் எமது கவனத்தைச் செலுத்துவது, இன்றுள்ள அரசியல் சூழலில் மிகவும் இன்றியமை யாத ஒரு விடயமாகும்.

இந்நாட்டில் உள்ள பிரதான இரண்டு சமூகங்களுக்கு மத்தியிலும் இணக்கப்பாடான சூழலொன்றை உருவாக்க வேண்டிய வரலாற்றுக் கடப்பாடும் எம்முன்னே உள்ளது.

புதிய அரசியலமைப்பு பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர், பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்புக்கு விடப்படவுள்ளது. இந்த பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பு என்ற விடயம் எமக்கு முன்னுள்ள மிகப் பலமான ஆயுதமாகும். எமது அபிலாசைகளை உரிய முறையில் புதிய அரசியலமைப்பு நிறைவேற்றாவிடின், அதை நிராகரிப்பதற்கான வாய்ப்பை இந்த பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பு தருகிறது.

இந்த எல்லா விடயங்களையும் தொகுத்து நோக்குகின்றபோது, நாம் கவனம் செலுத்த வேண்டிய எத்தனையோ பல விடயங்கள் உள்ளதை உணர முடியும். இது தொடர்பான விழிப்புணர்வுக் கூட்டங்கள் நாடளாவிய ரீதியில் நடாத்தப்பட வேண்டும். ஆர்வமுள்ள சிறு சிறு குழு முயற்சிகள், குழுக் கலந்துரையாடல்கள் இதற்கு இன்றியமையாததாகும்.

எம்மை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அரசியல் கட்சிகள் இதில் காட்டுகின்ற ஈடுபாடு மந்தகதியிலேயே உள்ளது. இந்த நிலையை மாற்றியமைக்க சிவில் சமூக தளத்திலிருந்து அழுத்தங்கள் அதிகரிக்கப்பட வேண்டும்.

ஒரு சில கட்சிகள் அல்லது அவற்றின் தலைவர்கள் மட்டும் சமூகம் சார்பாக பேச முற்படுவது அபாயகரமானது. உரிய கலந்துரையாடல் இல்லாமல் நிலைப்பாடுகள் பெறப்படுமாயின் அது பாரதூரமான பின்விளைவுகளை உருவாக்கும்.

குறிப்பாக வடக்குக் கிழக்கு இணைப்பு என்ற விவகாரம் மிகுந்த சர்ச்சைக்குரிய ஒன்றாக உள்ளது. அதை மிகப் பக்குவமாகவே கையாள வேண்டும். அரசியல் அழுத்தங்களுக்கும் சூழ்நிலைத் தேவைகளுக்கும் உரிய ஒன்றாக அதனை சுருக்கி விட முடியர்து.

இவ்வாறான பல விடயங்கள், இந்த புதிய அரசியலமைப்பு தொடர்பாக நம் முன்னே உள்ளன. அதற்குரிய கவனமும் அக்கறையும் அழுத்தமும் கொடுக்கப்பட்டே எமது முன்னெடுப்புகள் முடுக்கி விடப்பட வேண்டும்.

ஒரு சிலரின் கையில் இதை விட்டு விடாமல், சமூகம் தழுவிய பரந்த முயற்சிகள் அவசியம். சிவில் சமூகமும் அரசியல் சமூகமும் ஒன்றிணைந்து, கட்சி அரசியலுக்கு அப்பால் பொது நிலைப்பாடுகளைக் கண்டடைவதே நம் முன்னுள்ள மிகச் சிறந்ததெரிவாகும்.

## பீ.ஜே. இன்... (1 ம் பக்கத் தொடர்)

சகோ. பீ. ஜெய்னுலாப்தீன் உட்பட்ட தென்னிந்தியப் பேச்சாளர்களின் வருகை இறுதி நேரத்தில் ரத்து செய்யப்பட்டது. இவருக்கு வீசா பெறுவதற்காக விண்ணப்பித்திருந்த வேளையில் அஸாத் ஸாலி அவர்கள் இவரது விசாவை ரத்து செய்யக் கோரி பாதுகாப்புச் செயலாளரிடம் கோரியிருந்தார். இதன் பின்னர் குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் இவரது விசாரத்துச் செய்யப்பட்டுள்ளதாக ஜமாஅத்துக்கு அறிவித்திருந்தார்.

இவரது வருகை தடை செய்யப்பட்டது தொடர்பில், குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர், பாதுகாப்புச் செயலாளர், முஸ்லிம் சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர், அஸாத் ஸாலி ஆகியோருக்கெதிராகவே முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த முறைப்பாடு இம்மாதம் 15 ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது.

## எகிப்து... (9ம் பக்கத் தொடர்)



அமைப்பினர் போன்று சகோதரத்து அமைப்பினரும் பயங்கரமானவர்கள் என்று தெரிவித்துள்ளார். ஆனால், இப்போது உண்மையில் யார் பயங்கர வாதிகள் என்பதை அவர் உள்ளூற உணர்ந்து வருகின்றார்.

எகிப்திய ஜனாதிபதி ஸீஸி போன்ற சர்வதி காரிகள் ஆட்சியில் நீடிக்க முடியாது என்பதையே எகிப்தின் இன்றைய பாதுகாப்பு நிலவரங்களும் பொருளாதார பின்னடைவுகளும் காட்டி நிற்கின்றன. ஸீஸியின் அரசாங்கம் சிறிது சிறிதாக ஆட்டம் கண்டு வருகின்றது. அதனால் தான் 2011 ஜனவரி புரட்சியை மக்கள் நினைவுகூர்வதைத் தடுப்பதற்கு 4 இலட்சம் படையினரை அவர் வீதிக்கு இறக்கினார்.

ஆனால், கரைபுரண்டு வெள்ளம் போல் வீதிக்கு இறங்கிய மக்களைக் கண்டு அவர் அச்சமடைந்து விட்டார். என்னதான் மேற்கு நாட்டு அரசாங்கங்கள் ஸீஸிக்கு ஆதர வளித்தாலும் ஸீஸி மானசீக பல த்தை இழந்துவிட்டார் போலவே தோன்றுகின்றது.

## கிராமிய மட்டங்களிலிருந்து... (7ம் பக்கத் தொடர்)

**★ முஸ்லிம் சமூகத்தினுள் நிலவும் பிரச்சினைகளை தேசிய மட்டத்தில் கவனத்திற் கொண்டு செல்ல எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.**

ஜனவரி 8 இல் இடம்பெற்ற மாற்றத்தில் ஒரு படிப்பினை உள்ளது. சிவில் சமூகத் திற்கு அதில் பாரிய பங்குள்ளது. அத்தகைய பங்களிப்புகளை முஸ்லிம் சமூதாயத்திற் குள்ளும் செயற்படுத்தினால் எமது பிரச்சினைகளை இலகுவாகத் தீர்த்துக் கொள்ளலாம்.

முஸ்லிம் கிராமங்களில் அரசியலில் சம்பந்தப்படாதவர்கள் சட்டத்தரணிகளாகவோ மருத்துவர்களாகவோ ஆசிரியர்களாகவோ அவர்கள் இருக்கலாம். அவர்கள் எல்லோரும் ஒன்றிணைந்து அரசியல்வாதிகளுக்கு அழுத்தம் கொடுக்க முன்வர வேண்டும்.

முஸ்லிம்களுடைய பிரச்சினைகள் பாராளுமன்றத்திலோ அல்லது மாகாண உள்ளூராட்சி சபைகளிலோ முன்வைக்கப்படுகின்ற பொழுது அது ஒரு அழுத்தமாக மாறும். பொதுவாக அழுத்தம் கொடுத்துக் கொண்டிருந்தால் ஓரளவிற்கு மாற்றம் உண்டாகலாம். ஏனெனில், அப்பிரதேசத்து அரசியல்வாதிகளுக்கு சிவில் சமூகம் தம்மை எதிர்த்தால் தேர்தலில் வெற்றி கொள்ள முடியாது என்பது தெரியும். நாட்டிலுள்ள சகல கிராமங்களிலும் இத்தகைய சிவில் சமூகங்கள் உருவாக வேண்டும். இத்தகைய மாற்றமே காலத்தின் தேவையாகவுள்ளது.

**★ நல்லாட்சி அரசாங்கத்தின் போக்கு குறித்து நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

பொதுவாக பார்த்தால் நல்லாட்சி அரசாங்கம் ஜனவரி 8 ஆம் திகதிக்கு முன்பிருந்த நிலையை விடவும் நன்றாகவுள்ளது. இதற்கு முன்பிருந்த காலத்தை விடவும் கருத்துச் சுதந்திரம் அதிகரித்துள்ளது. சில விடயங்களில் நல்லாட்சி அரசாங்கம் பயணிக்கும் வேகம் போதாது. உதாரணமாக இலஞ்ச ஊழலுக்கு எதிரான விசாரணைகளில் எவ்வித முன்னேற்றங்களையும் காணமுடியவில்லை. அத்தோடு அரசாங்க முறைமைகளில் பெரியளவில் மாற்றங்கள் நிகழவில்லை.

**★ கல்வி முறையில் மாற்றம் ஏற்பட வேண்டுமா?**

ஆம். நிச்சயமாக, குறிப்பாக கடந்த போர்க் காலத்திலும் அதற்குப் பிந்திய சூழலிலும் பாடசாலை செல்லும் சிங்கள இளைஞர்களுக்கு தவறான சிந்தனைகள் புகட்டப்பட்டுள்ளன. கடந்த இரண்டு வருட காலமாக பொதுபலசேனா செயற்பட்டு வந்தபோது எமக்குக் கிடைத்த தகவல்களின்படி அவர்களுடைய இணையத் தளங்களை கூட தயாரித்திருப்பது சிங்கள பாடசாலைகளில் கல்வி கற்று வந்த மாணவர்களே ஆவர். அவர்களுக்கு பிழையான விஷமக் கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள். அச்சிந்தனைகள் களையப்பட வேண்டும். அவர்களுக்கு பொதுக் குண இயல்புகள் தொடர்பில் போதிக்க வேண்டும். மனித உரிமைகள் தொடர்பில் குறிப்பாக ஒன்றிணைந்து வாழக்கூடிய அவசியங்கள் குறித்து தெளிவுபடுத்தப்பட வேண்டும். சில வருடங்களாக கல்வித் துறையில் ஏற்பட்ட குளறுபடிகள் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

**★ இலங்கையிலுள்ள இளைஞர்கள் ISIS செயற்பாடுகளால் தூண்டப்படுகிறார்களா?**

ISIS ஒரு இஸ்லாம் விரோத அமைப்பு. இஸ்லாமிய பெயரை சூட்டிக் கொண்டாலும், அவ்வமைப்பினால் கூடுதலான பாதிப்பேற்படுவது முஸ்லிம்களுக்காகும். ஐசிஸ் ஒரு நாளும் இஸ்ரேலுக்கெதிராக செயற்படுவதில்லை. இஸ்ரேல் முழு உலகுக்கும் பாரிய அச்சுறுத்தலாகும். அமெரிக்கா அல்லது பிரித்தானியாவிலுள்ள உத்தியோகபூர்வமற்ற அரசுகளே இவ்வமைப்பினை உருவாக்கியுள்ளது என்கின்ற கருத்துள்ளது.

எமது நாட்டிலும் சிலர் இவ்வமைப்பின் செயற்பாடுகள் தொடர்பில் ஆர்வங்களை வெளியிட்டுள்ளனர். அவர்கள் நேரடியாக இணையவில்லை. அவர்கள் நாட்டை விட்டுச் சென்றுள்ளார்களா என எனக்குத் தெரியாது. இணைய தளங்களுக்கூடாக உலகில் இடம்பெறும் விடயங்கள் பற்றி இளைஞர்கள் அவதானம் செலுத்துகிறார்கள். இவர்கள் எந்த சட்டத்தையும் மீறவில்லை.

டிார்க்கம் தொடர்பில் ஆர்வமுள்ள இளைஞர்களே இணையங்களுக்கூடாக ஐசிஸ் அமைப்பின் செயற்பாடுகளால் தூண்டப்படுகிறார்கள். எனவே, அவர்களுக்கு சரியான பாதையை காண்பிக்க உலமாக்கள் முன்வர வேண்டும். ஐசிஸின் செயற்பாடுகள் முற்றிலும் விரோதமானது என்பதை தெளிவுபடுத்த வேண்டும்.

## மன ஒருமைப்பாடு... (13ம் பக்கத் தொடர்)

### 5. படிக்கும் அறை

மாணவர்கள் இருந்து படிக்கும் அறை மிகவும் விசாலமானதாக இருக்ககூடாது. அதேவேளை குகைபோன்று ஒடுங்கியதாகவும் இருக்ககூடாது. கைக்கடக்கமான பார்வைப்புலன் எல்லா இடத்திலும் படக்கூடிய சிறிய அறையாக இருப்பது கவனக் கலைப்பான்களை கட்டுப்படுத்தும். அது மன ஒருமைப்பாட்டை வளர்க்கும்.

### 6. யூடியூப் மேசை விளக்குகளை பயன்படுத்தல்

இவ்வாறான விளக்குகளை பயன்படுத்தும்போது மாணவர்களின் கவனம் பாடக் குவிப்பில் மட்டுமே குவிகின்றது. அறையில் உள்ள ஏனைய பொருட்கள் மீது கவனம் சிதறுவது தடுக்கப்படுகின்றது. இதன் மூலம் பாடப் புத்தகத்திலோ குறிப்பு புத்தகத்திலோ சிந்தனை குவிவதற்கு ஏதுவாய் அமைகின்றது. மேலே தொங்கும் விளக்குகளில் அல்லது சுவர்களில் பொருத்தப்பட்டுள்ள மின் விளக்குகளின் கீழ் இருந்து கற்கும் பொது சூழவுள்ள பொருட்களின் மீதான கவனச் சிதறல் தவிர்க்க முடியாது.

### 7. தியானம்

இறை தியானம் மன ஒருமைப்பாட்டில் முக்கியமானது. மன அழுத்தத்தை குறைப்பதற்கும் உடல் தளர்வை ஏற்படுத்துவதற்கும் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிப்பதற்கும் தியானங்கள் உதவுகின்றன. அல்குர்ஆனை பாராயணம் செய்தல் திக்ர்களில் ஈடுபடுதல் காலை, மாலை ஓதும் பிராத்தனைகளில் ஈடுபடல் என்பன மன ஒருமைப்பாட்டை அதிகரிக்கும்.

### 8. தூரப் பார்வை

அரை மணித்தியாலத்திற்கு ஒரு முறை கண் தூர இடங்களை பார்க்க வேண்டும் கண் அண்மையிலுள்ள பொருட்களை பார்க்கும் போது கண் வில்லை குவிவு அதிகரிப்பதனால் கண் தசை நார்கள் தொய்வடைகின்றன. இதனால் அது வலியை உணர்கின்றது. நித்திரையும் வெகு சீக்கிரமாக வந்துவிடும். ஆனால், இடை வேளைகளில் தூர உள்ள இடங்களை பார்க்கும்போது கண் தசை நார்கள் தளர்வடைகின்றன. அதனால் வலியில்லாமல் போகின்றது. நித்திரை அவசரமாக வருவது தடுக்கப்படுகின்றது. இதனால் மன ஒருமைப்பாட்டை பாதுகாக்க முடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முன்மாதிரி

ஒரு மகன் தனது வயது முதிர்ந்த தந்தையை ஒரு பிரபல்யமான உணவகத்திற்கு இரவு உணவிற்காக அழைத்துச் சென்றார். தந்தை மிகவும் வயதானவர். எனவே, அவர் மிகவும் பலவீனமான வராக இருந்தார். உணவு கொண்டு வந்து வைக்கப்பட்டவுடன் அவர் அதனை உட்கொண்டார். அவரது ஆடைகளில் உணவுகள் சிதறி விழுந்தன. தண்ணீரையும் கொட்டிக்கொண்டார்.

அங்கு சாப்பிட்டுக்கொண்டிருந்த ஏனையவர்கள் அந்த முதியவரையும் இளைஞனையும் ஆச்சரியமாக பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆனால், அந்த இளைஞன் எவற்றையும் பொருட்படுத்த வில்லை. அவன் அமைதியாக சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

இருவரும் சாப்பிட்டு முடித்தவுடன் மகன் தனது தந்தையை அழைத்துச் சென்று அவருடைய ஆடைகளில் பட்டிருந்த உணவுகளை கழுவிவிட்டான். அவரது கைகள், வாயையும் கழுவிவிட்டு துடைத்துவிட்டான். பின்னர் உணவுக் கட்டணத்தை செலுத்திவிட்டு, அந்த உணவகத்திலிருந்து தந்தையை கையோடுபிடித்துக் கூட்டிச் சென்றான்.



இக்காட்சியை அனைவரும் ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருந்தனர். அப்போது ஒரு முதியவர் அவ்விளைஞனிடம் சென்று, நீங்கள் எதனையேனும் விட்டுச் செல்கின்றீர்களா? எனக் கேட்டார். அவ்விளைஞன், இல்லை என பதிலளித்தான்.

அதற்கு முதியவர் இல்லை. நீங்கள் அனைத்து மகன்மாருக்கும் படிப்பினையையும் முன்மாதிரிகளையும் விட்டுச் செல்கின்றீர்கள் என்றார். அந்த உணவகம் அமைதியாக இருந்தது.



# உலகம் ஒரு மிகப்பெரும் கண்ணாடி

முன்னொரு காலத்தில் பாரசீக மன்னன் ஒருவன் ஒரு பெரும் மாளிகையை கட்டினான். அம்மாளிகையில் பல அபூர்வமான விடயங்கள் இருந்தன. அவற்றில் ஒன்றுதான் அம்மாளிகையில் காணப்பட்ட வரவேற்பறையாகும். அதன் நான்கு புறங்களிலும் தரையிலும் கூரையிலும் என அனைத்து பகுதிகளிலும் கண்ணாடிகளே பொருத்தப் பட்டிருந்தன. அத்துடன், அதன் சுவர்களில் பயன்படுத்தப் பட்டிருந்த நுட்பம் காரணமாக அங்கு எழுப்பப்படும் சிறிய ஒலியும் பெரிதாக எதிரொலித்தது. அதனுள் நுழை கின்ற எவரும் பெரும் ஆச்சரியமடைவார்கள்.

ஒரு நாள் அதனுள் ஒரு நாய் நுழைந்துவிட்டது. சுற்றிலும் பார்த்த நாய் தன்னைச் சுற்றிலும் மேலும் கீழும் நாய்கள் இருப்பதை கண்டு பயந்தது. அது குரைத்தது. அச்சத்தம் பல மடங்காகி எதிரொலித்தது. கோபத்தில் பாய்ந்தது, சீறியது. அதன் அத்தனை செயல்களும் பல மடங்காக எதிரொலித்தன.

அடுத்த நாள் காலையில் மாளிகையின் காவலாளிகள் அந்நாய் இறந்திருப்பதை கண்டார்கள். அந்நாய்க்கு யாரும் எந்தவித அநியாயமும் செய்யவில்லை. அது தன் னைத்தானே அழித்துக்கொண்டது.

இந்த உலகமும் அப்படித்தான். பல பிரச்சினை களுக்கும் கஷ்டங்களுக்கும் துயரங்களுக்கும் எமது செயற்பாடுகளே காரணமாக அமைகின்றன. எமது சிந்தனைகள், எண்ணங்கள், செயற்பாடுகள்தான் எம்மை சூழ பிரதிபலிக்கின்றன. உலகம் ஒரு மிகப்பெரும் கண்ணாடி.




தொகுப்பு: ஏ.ஸீ.எம். நதீர்

## எதிர்பாராத பதில்கள்




**1.கேள்வி: மாவீரன் நெப்போலியன் எந்த போரில் இறந்தார்?**
பதில்: அவரது கடைசி போரில்...

**2. கேள்வி: நம் நாட்டின் சுதந்திர பிரகடனம் எங்கே கையெழுத்திடப்பட்டது?**
பதில்: அந்த பக்கத்தில் கீழ் பகுதியில்.....

**3. கேள்வி: காலை உணவிற்கு நீ என்ன சாப்பிட முடியாது?**
பதில்: மதிய உணவு மற்றும் இரவு உணவு.

**4. கேள்வி: பாதி வெட்டப்பட்ட ஆப்பிளில் நீ பார்ப்பது என்ன?**
பதில்: இன்னொரு பாதி.

**5. கேள்வி: ஒரு சிவப்பு கல்லை நீல நிற கடலில் எறிந்தால் அது என்ன ஆகும்?**
பதில்: கல் ஈரமாகி விடும்.

**6. கேள்வி: ஒரு கையில் மூன்று ஆரஞ்சும், நான்கு ஆப்பிள்களும், இன்னொரு கையில் நான்கு ஆரஞ்சும், மூன்று ஆப்பிள்களும் உள்ளன. உனக்கு எது வேண்டும்?**
பதில்: அதை விட பெரிய கைகள் வேண்டும்.

**7. கேள்வி: விவாகரத்திற்கு முக்கிய காரணம் என்ன?**
பதில்: திருமணம் தான்.

- ஷம்லி அஹமட்

# உத்தரவாதம்



ஒரு வயது முதிர்ந்த மனிதர் வங்கி ஒன்றிற்கு வந்து 10,000 ரூபா கடன் வழங்குமாறு கேட்டார். வங்கி ஊழியர் கடன் விண்ணப்ப படிவத்தை எடுத்து கேள்விகளை கேட்டார்.

**இந்த பணத்தை கொண்டு நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?** நான் சந்தைக்கு சென்று சில தங்க நகைகளை வாங்கப் போகிறேன்.

**நீங்கள் உத்தரவாதத்திற்காக எதனை வைக்கப் போகின்றீர்கள்?** எனக்கு உத்தரவாதத்திற்காக எதனை வைக்க வேண்டும் எனத் தெரியாது. உத்தரவாதம் என்பது நீங்கள் பெறும் பணத்தை மீளச் செலுத்த தவறினால் வங்கி நீங்கள் வைத்த உத்தரவாத பொருளை விற்று அதனை பெற்றுக்கொள்ளும்.

**உங்களிடம் கார் இருக்கின்றதா?**

இல்லை.என்னிடம் 1949 ஆம் ஆண்டு உற்பத்தி செய்யப்பட்ட ஒரு டிரக் இருக்கின்றது. இல்லை அது பொருத்தமில்லை எனக் கூறிய வங்கி அலுவலர் சிறிது நேரத்தின் பின்னர் குறித்த பணத் தொகையை கொடுத்தார்.

சில நாட்களின் பின்னர் குறித்த வங்கிக்கு பெரும் தொகை பணத்துடன் அம்முதியவர் வந்தார். அவற்றிலிருந்து பத்தாயிரம் ரூபாவை எடுத்து வங்கி அலுவலரிடம் கொடுத்து, கடனை அடைக்குமாறு வேண்டினார்.

**வங்கி ஊழியர், அவரிடம், நீங்கள் எஞ்சியுள்ள பணத்தை என்ன செய்யப் போகின்றீர்கள் என்றார்.**

நான் அதனை எனது வீட்டில் வைத்துக்கொள்வேன் என்றார் முதியவர். நீங்கள் அதனை எமது வங்கியில் முதலீடு செய்யலாம் என்றார் வங்கி ஊழியர்.

**அதற்கு முதியவர் முதலீடு என்றால் என்ன?** என்றார்.

வங்கி ஊழியர், ஆம், நாம் அதனை பாதுகாப்போம். உங்களுக்கு தேவையான நேரம் அதனைப் பெற்றுக்கொள்ளலாம் என்றார். முதியவர் சிறிது நேரம் யோசித்தார். பின்னர் கேட்டார்; நீங்கள் எனது பணத்தைப் பெற்றுக்கொண்டு உத்தரவாதத்திற்காக என்ன தருவீர்கள்?



# ஓடும் இரயில் வேகம் தொற்றி

ஓடும் இரயில் வேகம் தொற்றி
அதிர்ந்தன சப்தநாடிகளும்
அதன் வழியில் அவன் இனி
குறுக்கிட முடியாது

புவி முழுமையுமாய்
அடக்கி நெரித்தபடி
விரைந்து
நெருங்கிக்கொண்டிருக்கும்
ஆபத்தை
நேர்நின்று பார்த்தவனாய்
அதிர்ந்தன அவன்
சப்தநாடிகளும்.

உடைந்த ஆற்றுப்பாலம்
கண்டு
மூச்சிரைக்க ஓடிவந்து நின்று
ஆபத்துக்கு ஆபத்துரைக்கும்
அறியாச் சிறுவர்கள்போலும்
வாழ்ந்து முடிவதில் என்ன
பயன்?

இதயத்திலிருந்து பாய்ந்து
விரிந்து நின்ற
கைகளும் கால்களும்
தலையுமாய்
குறுக்கிட்டு மடிவதன்றி என்ன
வழி?

வாள்போலும்
ஆற்றைக் குறுக்கறுத்தோடும்
இரயில்வண்டியும்
திரும்பி ஒருநாள்
ஆற்றோடு கைகோர்த்துச்
சிரித்துக்கொண்டோடாதா?



- தேவதேவன்



# பேஸ்புக் இருப்பு

வீட்டில் இருத்தல் வேறு
பேஸ்புக்கில் இருத்தல் வேறு
வீட்டிலிருந்து பேஸ்புக்கில் இருத்தல் வேறு
பேஸ்புக் இருப்பால் யாரும் வீட்டில் இருப்பதில்லை.

சமத்தாய் வீட்டிலிருக்கிறாயென
பேஸ்புக்கிலிருக்கும் கணவன் மனைவி
வையாமலிருப்பதில்லை
வைதாலும் மனசு கேட்பதில்லை.

சில வீடுகள் வித்தியாசம்
கணவனும் மனைவியும்
பேஸ்புக்கில் இருப்பைத் தக்க வைத்திருப்பார்கள்
அதிர்ஷ்டவசமாய் பிள்ளைகளிருந்தால் பிள்ளைகளும்


தினம் பேஸ்புக் மனைகளில்
உணர்வற்ற உரையாடல் கேட்கும்
கணவன் பசிக்குது என்பதை
துணைவிக்கு இன்பொக்ஸில் சொல்ல வேண்டி வரும்.

சுட்டிப் பிள்ளைகளிலிருக்கும் வீட்டிலும்
முகநூலின் புண்ணியத்தால் மௌனம் சம்பவிக்கும்
ஒரு வகைத் தியானத்தில் உறை நிலை மனிதராகி
உணர்வுகள் லைக்கில் தொக்கி நிக்கும்

மனித இருப்பு காலாவதியாகி விட்டது
இப்போது யாரும் வீட்டிலில்லை
அலுவலகத்தில் எங்குமேயில்லை
பேஸ்புக்கில் ஜடமாகியிருக்கிறார்கள்.

கவிஞர்
எஸ்.ஜனூஸ்

''நமது அரசாங்கங்களும் அதிகாரவர்க்க நடை முறைகளும் ஒரு அறிவார்ந்த நாகரீக சமூகத்தின் நடைமுறைகளை மதிப்பதில்லை. எந்தப் போராட்டத்தின் குரலையும் கேட்க மாட்டோம் என அது தன்னை இரும்புக்கதவுகளுக்குள் பூட்டிக் கொண்டிருக்கிறது. எந்தநியாயத்தையும் திரும்பிப் பார்ப்பதில்லை என உறுதியோடு இருக்கிறது. இந்த நிலையில் அதிகாரவர்க்கத்தின் மூடுண்ட செவிகளைத் திறப்பதற்கும், சமூகத்தின் இறந்த மனசாட்சியை தட்டி எழுப்புவதற்கும் யாரோசிலர் அவ்வப்போது தன்னைத் தானே இம்சித்துக்கொள்கிறார்கள், அழித்துக் கொள்கிறார்கள்.''



- மனுஷ்யபுத்திரன்

# துயரங்களை வாசிக்கின்ற வீணை

சியோனிசத்தின் புறமுதுகில்
வேட்டையாடப்படும் பலஸ்தீனத்தின்
வயிற்றில் இனியும் வேட்டையாடுவதற்கு
என்ன இருக்கிறது.

இரத்த வெறியில்
பச்சோந்திகளைப் போல
எம் தேசத்தின் உறவுகளை
தொப்புள் கொடி அலுப்பது
உனது கொலைவெறித் தாண்டவத்தின்
மற்றுமொரு முகமே.

உனது துப்பாக்கிகளுக்கும்
தோட்டாக்களுக்கும் அடிபணிவது நாங்கள்
அல்ல.
தோட்டாக்கள் நெஞ்சைத் துளைக்கின்ற
போது
தலை நிமிர்த்துகின்றன.
எமது பூமியின் மீட்பும் உனது
கோழைத்தனமும்.

ஓ . முஹமட் மபாஸ்

# மூடப்பட்ட கைகளுக்குள் எனதான முழுஉலகம்

என்னை மொழிபெயர்த்தேன்
'நீ' ஆனா(னா)ய்.
மூடப்பட்ட கைகளுக்குள்
எனதான முழுஉலகம்.


நீமடிஅமர்ந்த
நொடிகளுக்குள்
எனக்குள்
மீண்டுமான
ஆயிரம்ஜனனங்கள்.
அடிக்கடி
உனதான
பொம்மையாய்
என் இருப்பு.

மகனே,
சேற்றைமிதித்தாலும்
நெற்கதிராய் வளர்!

-ரிஸான் செய்யன்

# இன்னும் பிறக்காத தலைமுறைக்காக

சு.தியடோர்பாஸ்கரன்







இந்நூல் நமது சுற்றுச் சூழல் மற்றும் காட்டுயிர் பாதுகாப்பு சார்ந்த பிரச்சினைகள் பற்றிய அபூர்வமான தவல்களை சுயமான பார்வையுடன் முன்வைக்கிறது. இயற்கைக்கெதிரான மனிதர்களின் குற்றங்கள் குறித்த கடுமையான கேள்விகளை எழுப்புகிறது. வன உயிர்கள், தாவரங்களின் அழிவு தொடர்பாக தியடோர்பாஸ்கரன் முன்வைக்கும் எச்சரிக்கைகள் இயற்கையின் மீதான பேரன்பிலிருந்தும் இயற்கையின் நீதி, அறம் குறித்த தார்மீகக் கேள்விகளிலிருந்தும் பிறக்கின்றன. சுற்றுச் சூழல் பிரச்சினைகள் தொடர்பாகத் தமிழில் எழுதப்பட்ட அரிய ஆவணம்இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள்பார்வை
விளையாட்டு செய்தி

# திறமையான வீரர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும்

## ரக்பி வீரர் பாஸில் மரிஜா

**உள்ளூர் கழகங்களுக்கிடையிலான ரக்பி போட்டி தொடரின் 9ஆவது வாரத்தினையும் கண்டியணி வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது. அது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

சகல போட்டிகளிலும் வெற்றி பெற்று முன்னோக்கி செல்வதே எமது இலக்காக இருந்தது. எமது எதிர்பார்ப்புகள் நிறைவேறியது முதற் சுற்றில் நாம் ஏழு போட்டிகளையும் வென்று இரண்டாம் சுற்றுக்கு முன்னேறினோம். இரண்டாம் சுற்றில் இதுவரையிலும் நடைபெற்ற இரண்டு போட்டிகளிலும் நாம் இலகுவாக வெற்றிபெற்றோம்.

**போட்டித் தொடருக்கு வரும் பொழுது உங்களிடம் எத்தகைய திட்டமொன்று காணப்பட்டது?**

ரக்பி போட்டிதொடரின் ஆரம்ப லீக் போட்டிகளை சிறந்த முறையில் எதிர்கொள்வதே எமது திட்டமாக இருந்தது. நாம் எல்லாப்போட்டிகளையும் நல்லமுறையில் முடிப்பதற்கே திட்டம் வகுத்திருந்தோம். எந்தவொரு அணியையும் குறைத்து மதிப்பிடாமல் விளையாடினோம். எல்லாப்போட்டிகளையும் கூடுதல் முழுமுயற்சியுடன் விளையாடுவதே எமது அணியினரின் நோக்காக இருந்தது. எமது திட்டம் வெற்றியளித்துள்ளது. அதனாலேயே எமக்கு ஏழு போட்டிகளையும் வெற்றிபெற முடிந்தது. இப்போட்டித்தொடரின் லீக், நொக்அவுட் மற்றும் ஏழு உறுப்பினர்களை கொண்டுள்ள போட்டி என்ற மூன்று கிண்ணங்களையும் கண்டிக்கு கொண்டுவருவதே எமது திட்டமாக உள்ளது.

**முதல் சுற்றில் கண்டி அணிக்கு எதிரணியின் அச்சுறுத்தல்கள் காணப்பட்டதா?**

முதற்சுற்றை சிறந்த முறையில் எதிர்கொள்ளவே நாம் திட்டமிட்டிருந்தோம். முதற்சுற்றில் ஹெவ்லொக்ஸ் மற்றும் சீ.ஆர் அணிகளுடனான 02 போட்டிகளும் போட்டித்தன்மைமிக்கதாக அமைந்திருந்தது. ஏனைய போட்டிகள் நாம் நினைத்த அளவுக்கு சவாலான போட்டிகளான இருக்கவில்லை.

**உங்களுடைய அணி தொடர்பில் எத்தகைய மதிப்பீடொன்றுள்ளது?**

எமக்கு சமநிலையான அணியொன்றுள்ளது. இப்போட்டி தொடருக்கு 4 புதுமுக வீரர்கள் இணைந்து கொண்டார்கள். ஏனையவர்கள் கடந்த வருடத்திலும் அணியில் இருந்த அனுபமிக்க வீரர்கள் சென்ற வருடமும் ரக்பி லீக் கிண்ணத்தை எமது அணி கைப்பற்றியது. அவ்வெற்றிவாகையுடன் கூடிய மனநிலையுடனேயே இப்போட்டித்தொடரில் பங்குபற்றியுள்ளோம்.



**நீங்கள் தலைமைத்துவத்தை பொறுப்பேற்றிருப்பது 06 வருடங்களுக்கு பிறகு அல்லவா?**

ஆம். 2010இல் நான் கடசியாக கண்டி அணிக்கு தலைமை வகித்தேன் அதற்கிடைப்பட்ட காலத்தில் அணிக்காக விளையாடினேன். மீண்டும் இவ்வருடத்தில் தலைமைப்பொறுப்பை ஏற்றுள்ளேன்.

**கடந்த காலப்பகுதியில் நீங்கள் தலைமைத்துவத்திலிருந்து விலகுவதற்கான காரமென்ன?**

நான் முன்னர் இலங்கையின் ஏழுபேர் கொண்ட ரக்பி அணியின் தலைவராக இருந்தேன். திறமையுள்ள வீரர்கள் உருவாகும் பொழுது நாம் அவர்களுக்கு இடமளிக்க வேண்டும். அத்தகைய எண்ணத்திலே நான் தலைமைப்பதவியிலிருந்து விலகினேன். இன்னும் நான்கு ஐந்து போட்டிகளை விளையாடிப்பார்ப்பேன். என்னுடைய நிலை நன்றாக இருந்தால் போட்டிகளில் தொடர்ந்தும் விளையாடுவேன்.

**அதற்கு பிறகு ?**

தற்பொழுது கூடுதலான புதிய வீரர்கள் வருகிறார்கள். அவர்களுக்கும் ஓரிடத்தை உருவாக்கி கொடுக்க வேண்டும். நாம் இங்கு நிலைத்திருந்தால் விளையாட்டு முன்னோக்கிச் செல்லாது.

**நீங்கள் ரக்பி விளையாட்டை ஏன் தெரிவுசெய்தீர;கள்?**

எனது உறவினர்கள் ரக்பி விளையாட்டோடு வாழ்ந்தவர்கள். எனக்கும் ரக்பியில் ஆர்வம் ஏற்பட காரணம் அதுவாகவே இருக்கலாம். எனது சகோதரரும் ரக்பி விளையாட்டில் ஈடுபட்டிருந்தார். முழங்காலில் ஏற்பட்ட காயமொன்றின் காரணமாக அவர் தற்பொழுது விளையாடுவதில்லை.

**உங்கள் குடும்பம் பற்றி?**

தாயும் நானும் சகோதரரும் மாத்திரமே உள்ளோம். எனக்கு ஆறுவயதாக இருக்கும் பொழுது எனது தந்தை இறந்துள்ளா. தந்தை இல்லாத நாள் தொட்டு எனது தாய் எம்மை கரைசேர;க்க மிகுந்த கஷ்டங்களை எதிர;கொண்டார;. எனது தந்தை பொலிஸ் நிலையத்தில் பணியாற்றி வந்தார;. அவர; அம்பாறையில் வைத்து டுவுவுநு தாக்குலொன்றில் கொல்லப்பட்டார்.

**உமது வாழ்வில் யாரை முன்மாதிரி வீரராக கொள்கிறீர்?**

நியூஸிலாந்தினைச் சேர்ந்த டேனியல் காட்டர். நான் விளையாடி வரும் இடத்தில் விளையாடிவரும் உலகில் சிறந்த வீரரொருவரே டேனி. நான் சிறுபராயம் தொட்டு அவ்விடத்தில் விளையாடவே ஆசைப்படுகிறேன்.

# இலக்குகள் இல்லா விளையாட்டுப் போட்டி



அரசாங்கம் விடுத்த காலக்கெடுவுக்குள் பெரும்பாலான பாடசாலைகளின் இல்ல விளையாட்டுப் போட்டிகள் முடிவடைந்திருக்கின்றன. வலய மட்டப் போட்டிகள், மாகாண மட்டப் போட்டிகள், தேசிய மட்டப் போட்டிகள் என போட்டிகள் மேலும் தொடரவிருக்கின்றன.

சர்வதேசப் போட்டிகளுக்கான போட்டியாளர்களைத் தெரிவு செய்வதற்காக தேசிய மட்டப் போட்டிகளில் மாணவர்களைப் பங்கு கொள்ளச் செய்வது தான் பாடசாலை மட்டப் போட்டிகளின் இலக்காகவிருக்கிறது. ஆனால் முஸ்லிம் பாடசாலைகளின் விளையாட்டுப் போட்டிகள் இந்த விதமாக நடத்தப்படுகிறதா என்பது விடைகாணப்பட வேண்டியதாகும். பெரும்பாலான முஸ்லிம் பாடசாலைகளில் எந்தவித இலக்குகளும் இல்லாத ஒரு களியாட்டமாகவே இல்ல விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுகின்றன.

தேசிய மட்டப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்கள் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் என்ன சாதனை புரிந்தார்கள் என்பது முழு நாட்டுக்கும் தெரியப்படுத்தப்படுகிறது. ஓட்டத்தை முடித்துக் கொள்ள எடுத்த நிமிடங்கள், பாய்ந்த உயரங்கள், நீளங்கள் என்பன குறிக்கப்பட்டு அடுத்த வருடங்களில் அந்த இலக்கை நோக்கி மாணவர்கள் பயிற்றுவிக்கப்படுகிறார்கள்.

**முஸ்லிம் பாடசாலைகளில் இது ஏன் முடியாமலிருக்கிறது?**

எமக்கு முறையான விளையாட்டு மைதானம் இல்லை என்கிறார் ஒரு அதிபர். இருக்கின்ற நிலத்தில் கட்டடங்கள் தான் குவிக்கப்பட்டிருக்கின்றன. மாணவர்கள் 100 மீட்டருக்குப் பதிலாக 50 அல்லது 35 மீட்டர்களையே ஓடுகிறார்கள். சின்ன மைதானத்துக்குள் 800 மீட்டர், 1500 மீட்டர் ஓட வைக்க முடியாது. தலைசுற்றலில் விழுந்து விடுவார்கள். ஒழுங்கான மைதானம் இல்லாத குறைபாட்டினால் எம்மால் விளையாட்டு வீரர்களை உருவாக்க முடிவதில்லை என்கிறார் அவர்.

மற்றுமொரு அதிபர் இன்னுமொரு பிரச்சினையை தொட்டுக் காட்டினார். கிழக்கு மாகாணம் தவிர்ந்த பெரும்பாலான முஸ்லிம் பாடசாலைகளில் விளையாட்டுக்கான ஆசிரியர் நியமிக்கப்படுவதில்லை. சுகாதாரமும் உடற்பயிற்சியும் என்றொரு பாடம் இருக்கிறது. மாணவர்கள் உடற்பயிற்சியை புத்தகத்தில் மாத்திரமே படிக்கிறார்கள். அவர்களுக்குப் பயிற்சி வழங்கக் கூடிய ஆசிரியர்கள் எங்களது பாடசாலைகளுக்குக் கிடைப்பதில்லை என்கிறார் அவர்.

அரச பாடசாலைகளில் திறமை காட்டுகின்றவர்கள் தான் தேசிய மட்டப் போட்டிகளில் சாதனை படைக்கிறார்கள். இது முஸ்லிம் மாணவர்களுக்கு கிடைக்காமல் போனது யார் குற்றம் ?

# அக்கரைப்பற்றில் தேசிய விளையாட்டு வாரம்

ஜனாதிபதியின் வழிகாட்டலுக்கு அமைய விளையாட்டு அமைச்சு, தேசிய விளையாட்டு வாரத்தை பிரகடனப்படுத்தியிருந்தது. இதனை முன்னிட்டு அக்கரைப்பற்று அந்நூர் சமூக கலாசார மையம் சிறப்பு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்திருந்தது.

அக்கரைப்பற்று கடற்கரையில் அமைந்துள்ள அந்நூர் மஸ்ஜித் வளாகத்தில் இடம்பெற்ற உடற்பயிற்சி, வீதி நடை ஆகிய நிகழ்ச்சிகளில் நூற்றுக்கும் அதிகமானோர் கலந்து கொண்டு பயன் பெற்றனர். ஆரோக்கியமான உணவுப் பழக்கம் குறித்த வழிகாட்டலும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் விளையாட்டு அதிகாரி எஸ்.எல்.தாஜுதீன், சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எல். அலாவுதீன், அந்நூர் நிறுவனத்தின் தலைவர் டாக்டர் யூ.எல்.எம்.வபா ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்வை டாக்டர்.எம்.ஜே. எம்.ஹஸ்ஸான் வழிநடாத்தினார்.

இதில் வைத்தியர்கள், அதிகாரிகள், ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட பல தரப்பினரும் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.





# தங்கப்பதக்கமொன்றுக்கு 5 இலட்சம்!



சாப் விளையாட்டு போட்டிகளில் தங்கப்பதக்கம் பெறும் ஒருவருக்கு 5 இலட்சம் ரூபா பணத்தொகையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக விளையாட்டுத்துறை அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். வெள்ளிப்பதக்க மொன்றுக்கு 2 இலட்சம் ரூபாவும் வெண்கலப்பதக்கமொன்றுக்கு தலா 1 இலட்சம் ரூபா வீதமும் வழங்கபடவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி, பிரதமர், நிதியமைச்சர் போன்றோரின் வழி காட்டலின்கீழ் இக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு திட்டமிட்டிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.







சகோதர பத்திரிகைகளுடனான உறவை வளர்க்கும் நோக்கில் மீள்பார்வை பத்திரிகையின் ஆசிரியர் பீடம் அண்மையில் ராவய அலுவலகத்திற்கு சென்றிருந்தது.

ராவய அலுவலகத்தையும் ஆசிரியர் பீடத்தையும் படத்தில் காணலாம்.


வெளிவந்துவிட்டது




- போரினால் பெருகும் அகதிகள்
- எகிப்து : புரட்சியின் ஐந்தாண்டுகள்
- குர்திஷ்ஸ்களின் டாவோஸ் மாநாடு
- சைக்ஸ் – பீகோ: காலனிய சிந்தனையும் மத்திய கிழக்கின் குமுறல்களும்

இன்னும் பல சுவாரஷ்யமான ஆக்கங்களுடன்
சர்வதேச பார்வை இதழ் - 31




மீள்பார்வையில் விளம்பரம் செய்ய
தொடர்புகளுக்கு : 0777635848


Published by Focus Media (Pvt) Ltd, 49 Sri Mahinda Dharma Mawatha Colombo 09.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org